# கலைமன்றம்



கலைஞனின் கைத்திறனால்
கவனுறும் நீரூற்று!

பிரசுரம்
ம. சுந்தரம், மேட்டுப்பாளையம்.

# தலைமன்றம்

7 - AUG 1956

மலர் 2 — 25 ஜூன் '55 — இதழ் 26

## பொருளடக்கம்


| | |
|---|---|
| வடக்கன்குளத்தில் 144 (கார்ட்டூன்) | 2 |
| அடிப்படை என்ன? (தலையங்கம்) | 3 |
| மூச்சந்தி | 5 |
| உங்களுக்கு | 8 |
| தோழிக்கு | 9 |
| பார்லிமெண்ட் | 11 |
| பாரதிதாசன் கவிதை அரங்கம் | 14 |
| வெட்டும் ஒட்டும் | 16 |
| காதலும் கண்ணீரும் (தொடர்கதை) | 17 |
| இருண்ட வாழ்வு | 22 |
| நம்பிக்கையின் நட்சத்திரம் | 33 |
| அட்டைப் படம் | 43 |
| பரிசுத்தமற்றவள் | 49 |
| வளர்மதி | 59 |
| பறந்து காட்டிய தீரர் | 65 |
| அழகு எரிந்தது (தொடர்கதை) | 67 |
| மேல் நாட்டுக் கவிதைகள் | 71 |
| திரை உலகம் | 75 |
| எரிமலை | 77 |
| கேளுங்கள் கொடுக்கப்படும் | 78 |
| கமது செய்திகள் | 79 |


பிரசுரமாகும் எழுத்தோவியங்களிலுள்ள பெயர்கள், நிகழ்ச்சிகள் யாவும் கற்பனை

நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த வடக்கன்குளம் கிராமத்தில் அரசாங்கம் 144 தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது. இது 25-5-55 முதல் 24-7-55 வரை அமுலிலிருக்கும். அதைச் சித்தரிப்பதே இப்படம்!

விருப்புடன் வருக என வாழ்த்துபவர் வாழ்த்தட்டும்.
வெறுப்புடன் வேண்டாமென்போர் விருந்துண்டு வாழட்டும்.

# கலைமன்றம்

சென்னை | 25—6—55 | சனி

# அடிப்படை என்ன?

'மானம் மாண்பு மிக்கது' என்பதை வலியுறுத்தி உணர்த்த வேண்டிய அவசியமே இல்லா அளவுக்கு மக்களிடையே விளம்பரப் படுத்தப் பட்டுள்ளது மானம் இழந்தோர்கூடத் தாம் மானமிழ தோம் என எண்ணவே அஞ்சுவர்—மிஞ்சினால் உயிரையும் துச்சமா கித்துறப்பர்—என்பது அனுபவரீதியான உண்மை. ஆயினும்...?

இத்துணைச் சிறப்புக்குரிய மானத்தை இழந்தும், இழந்தோ எனும் எண்ணமே இல்லா நிலையில் உணர்த்தவோ ஆளில்லா குறை பாட்டில் வாழ்வோர் தொகை ஏராளமாகும் நம்மவர் நாட்டி

மானம் பறிகொடுத்தவனை மனிதனல்ல, மிருகம் என் மொழிகின்றோம். வயிற்றுக்காகவோ, வளமான வாழ்வுக்காகவே உணர்ச்சி வயத்தாலோ மானத்தை விற்றுவிட்ட வனிதையை வி மாது என்று விளம்பரப் படுத்துகின்றோம். இவ்வாறான நிலைமை உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் நாம் பிறிதோர் துறையில் மான இழந்தோர் ஏராளமாக இருப்பதை எண்ணுவதில்லை. காரண மென்ன வெனில் அப்பிறிதோர் துறையில் ஏற்படும் இழப்பை மானம் என்று உணராப் பெருங்குறையே தாம்.

வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது' நாடு நெஞ்சுயர்த்தி மகிழ்ந்தது. ஆனால் நிலைமை என்னவாயிற்று? மானம் போன்று சாலச்சிறப்புடைய வாக்குரிமை விலைகூறி ஏலம் விடப்பட்ட வேடிக்கையைக் கண்டோம். நூறு ரூபாயிலிருந்து வெறும் 'காபித்தண்ணி' வரை ஓட்டுகள் விலை போயிற்று. ஓட்டு சேகரிப்போரின் பேரம் பேசும் திறனைப் பொறுத்து வாக்குரிமைச் சீட்டின் விலை நிலவரம் ஊருக்குத் தக்கவாறு இருந்ததையும் உணர்வோம்.

இத்தகைய சீர்கேடான—சிந்தனையற்ற நிலைமை இன்றளவும் நீங்கிய பாடில்லை, நினைப்பவர் எவரும் நீக்க முயன்றதில்லை. இருப்பினும் ஜனநாயகம் என்னும் கூப்பாடும் மக்களாட்சி என்ற கூக்குரலும் முழங்குகின்றன. கூடிய விரைவில் நகராண்மைக் கழகத் தேர்தலும் வரவிருக்கின்றது.

இனி ஒவ்வொரு அபேட்சகருக்கும் ஒவ்வொரு வோட்டுப் பெட்டி இருக்காதாம். ஒவ்வொரு வோட்டுச் சாவடியிலும் ஒரே பெட்டிதான் வைக்கப்படுமாம். ஆனால் வோட்டுச் சீட்டில் எல்லா அபேட்சகர்களின் பெயர்களும் சின்னங்களும் அச்சிடப்பட்டிருக்குமாம். வாக்காளர் தமக்குப் பிடித்தமான அபேட்சகரின் பெயரில் குறியிட்டுப் பெட்டியில் போடவேண்டுமாம். மாவட்டக் கழகத் தேர்தலின் போது தோற்றுப்போன இப் புதிய முறை சிறிதளவு மாற்றத்துடன் வருகின்ற நகராண்மைக் கழகத் தேர்தலிலும் அமுலாக்கப் படுமெனச் சென்னை அரசினர் அறிவிக்கின்றனர். 'தேர்தல் தில்லுமுல்லுகள் நடைபெறாமல் தடுக்கவே இப்புதிய முறை' என்று முதல்வர் காமராசர் கூறுகிறார். ஆனால் எத்தகைய புதுமுறை வருவதாயினும் தேர்தல் 'தில்லுமுல்லுகள்' ஒழியப் போவதில்லை என்பது உறுதி. வாக்குரிமையை விலைக்குப் பெறும் வசதியுடையோரின் வன்செயலும்—விற்பனைக்கு இசைவுதரும் பாமரர்களின் அறியாமைச் செயலும் அகற்றப்படா வரையில் தேர்தல் திட்டம் தோல்வியுறவே செய்யும்; மக்களாட்சியும் மலரா. எனவே இவ் அடிப்படையை மக்களுக்கு உணர்த்த முன்வருமா சென்னை அரசாங்கம்? வாக்குரிமை என்பது மானமே. இதுவே அடிப்படை—அரசியல் தத்துவம்.

# முச்சந்தி

"அரட்டை"

## ஸ்பெஷல் அவதாரம்:

பெரிய பெரிய பிரச்சினைகள்—அரசாங்கப் பொறுப்புகள்—இவற்றிலெல்லாம் பங்கு பெற்றுப் பதவியேற்றுப் பெரும் புள்ளியாக விளங்கியவரை கரும் புள்ளி செம் புள்ளி குத்தி வீட்டிற்கு அனுப்புவதே தவறு என்றுதான் எனக்குப் படுகிறது. பங்கும் பதவியும் இல்லாமலிருக்கும் போதே நம்மை நச்சரித்துக் கொண்டிருக்கும் பெரியவர்கள் பங்கும் பதவியும் பெற்றுக் கொண்டே நச்சரித்து விட்டுப் போகட்டுமே. அதனாலென்ன நட்டமா? 'இருந்தும் கெடுத்தானே—போயும் கெடுத்தானே' விட 'இருந்தே கெடுத்தான்' என்பவன் எவ்வளவோ மேல். இதை மறந்து நம் நாட்டவர் மகா மட்டமான காரியங்களைச் செய்து விட்டுப் பிறகு ஞானோதயம்' பெறுவது எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

அருமை ஆச்சாரியாரை பதவியிலிருந்து விரட்டினீர்களே! என்ன பலனைக் கண்டீர்கள். வீட்டிற்குப் போனாரே தவிர உங்களை அரித்துத் தின்பதை விட்டாரா? பதவியிலிருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன ஆச்சாரியார் வாயும், கையும் எப்போதுமே சும்மா கிடப்பதில்லை. எதையாவது பேசிக் கொட்டுவார்—கிறுக்கித் தள்ளுவார். பிறவிக் குணத்திற்குத் தான மட்டை வைத்துக் கட்ட முடியாதாமே.

அணுகுண்டுகளைக் கடலில் வீசுங்கள் என்று அலறிப் பார்த்தார்—அமெரிக்க உதவியை வாங்காதே என்று அங்கலாய்த்தார்—கொத்தலாவலையைக் குறும்புத்தனமாகப் பேசிக் குட்டு வாங்கிக் குப்புற விழுந்தார்—ஆச்சாரியார். இந்த 'வெளி நாட்டு விவகாரங்கள்' அவ்வளவு 'கிராக்கியான சரக்குகளாக'ப் படவில்லை எனக்கு; அற்ப சொற்பமான புலம்பலென்றே மதித்தேன். இந்த பி. ஸி. ஜி. விவகாரம் இருக்கிறதே அது என்னையே திக்குமுக்காடச் செய்து விட்டது. முதலில் க்ஷயரோகத் தடுப்பு ஊசியைப் பற்றிய சர்ச்சை வளர வழியில்லை, வாயைத் திறந்த இடத்திலேயே மந்திரி ஷெட்டி ஓங்கி அடித்து விட்டாரே இனி ஆச்சாரியார் 'உதற' மாட்டார் என்றுதான் நினைத்தேன். சக்ரவர்த்திகள் எந்தச் சரித்திரத்திலேதான் 'சரியான சரிவு' ஏற்படுகிறவரை சிரம் தாழ்ந்தார்கள்? ஆச்சாரியாரும் சக்ரவர்த்திதானே! சிரம் தாழ்ந்து போவாரா? சீறினார்—"நான் செப்புவதே சரி," என்று. மத்திய சர்க்கார் சுகாதார மந்திரி அமிர்த கௌரியாவது வாய்

மூடிக் கிடந்தால் என்ன? அவரும் ஆச்சாரியார் கூற்று அர்த்த மற்றது என்று அம்பலமாக்கினர். சென்னை சர்க்காரும் மறுப்பு விட்டது. இவ்வளவு 'இடியும் அடியும்' விழுந்த பிறகுங்கூட.........? அவரென்ன சாமான்யப் பேர் வழியா? 'கோவையில் ஒரு பெண்ணுக்குக் கண் குருடானது க்ஷயரோகத் தடுப்பு ஊசியால்தான்!' என்று ஒரு செய்தி வரவும்—சர்க்கார் பரிசிலனைக் கோஷ்டியை அனுப்பவும்—இப்படியே 'அனுமார்' வால் மாதிரி பி. ஸி. ஜி. வாதம் நீளுகிறது. 'விளையாடிக் கொண்டிருந்த பெண் குழந்தையை அழைத்து பி. ஸி. ஜி. ஊசியை ஏற்றிப் பரீட்சித்தாராம் ஒரு புண்ணியவாளன் தஞ்சையில். பாவம்! குழந்தை ஜுரம் கண்டு செத்துவிட்டது. 'சவப் பரீட்சை செய்தவர்கள் இது பி. ஸி. ஜி. சம்பந்தமான மரணமல்ல' என்று தீர்ப்பு அளித்து விட்டார்கள். இந்தவிதமான எக்ஸ் பார்ட்டித் தீர்ப்பை ஆச்சாரியார் ஒப்புக் கொள்ளமாட்டாராம். "பி. ஸி. ஜி. போடாமல் இருந்திருந்தால் அப்பெண் குழந்தை இன்று உயிரோடு இருந்திருக்கும்," என்று கல்கி கண்ணீர் வடிக்கிறது. நானும் கூடக் கண்ணீர் வடிக்கிறேன், பட்டினியால் தினம் தினம் சாகும் குழந்தைகளை யெல்லாம் மறந்து விட்டு! இப் பிரச்சினைக்கு முடிவு தான் என்ன? நானும், கல்கியும் கண்ணீர் வடித்துக் கொண்டே இருக்க வேண்டுமா? அந்தச் சக்ரவர்த்தித் திருமகன் தான் ஒரு 'ஸ்பெஷல்' அவதாரம் எடுத்து 'கிருபா கடாட்சம்' புரிய வேண்டும் எனக்கும், கல்கிக்கும். பொறுத்திருந்து பார்க்கிறேன்.

## அடாது எதிர்த்தாலும் விடாது நடைபெறும்

பொதுவாகப் பத்திரிகை உலகில் கயிறு திரித்தல்—சரடு விடுதல்—ஹேஸ்யங்கள் ஆகிய வார்த்தைகள் சர்வ சாதாரணமாக அடிபடுவதுண்டு. ஒரு செய்தியைக் கயிறுகத் திரிக்கலாம்—சரடாக விட்டுப் பார்க்கலாம்—ஹேஸ்யமாகவும் வெளியிடலாம். இந்தக் கைதேர்ந்த கலைக்கு 'மூளை பலம்' தேவையில்லை; தடம் காண முடியாதவாறு கயிறென்ன வடமே திரிக்கலாம், திடமிருந்தால் மட்டும் போதும். ஆனல் ஒரு உண்மையான செய்தியை அப்படியே மாற்றி வெளியிடும் துணிகரம் வேறு எவருக்கு எளிதில் ஏற்படாது 'இளம் பெண் செய்திகளை'யே நம்பி உயிர் வாழும் 'தினவதந்தி'யைத் தவிர!

அதுவொரு பத்திரிகை இல்லை, வெறும் 'அவுட்' என்று எனக்கும் தெரியும். இருந்தாலும் அதை வாங்கிப் படிக்கிற கூட்டமும் இதையும் படிக்கட்டுமே!

சென்னை, ஜூன் 10—

மவுண்டு ரோடு ராஜாஜி ஹாலில் உள்ள பழங்கால ஐரோப்பிய அதிகாரிகள் வீரர்களின் திருவுருவப் படங்களைத் திரைபோட்டு மூடிவிட சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு வெள்ளையர் படங்கள் ராஜாஜி ஹாலில் இருப்பதன் அவசியத்தை ஆட்சேபித்து பலர் கருத்து வெளியிட்டதன் விளைவாகவே சர்க்கார் இம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

தூசிகள் படிந்து படங்கள் கெட்டுப் போகாமலிருக்கும்படி பாதுகாக்கும் நோக்கத்துடனேயே மூடப்படுவதாக அதிகாரிகள் காரணம் கூறுகின்றனர்.

இச் செய்தி 11-6-55-ம் தேதியிட்ட '**சுதேசமித்திரனி**'ல் வெளியானது.

சென்னை, ஜூன் 10—

சென்னை ராஜாஜி மண்டபத்தில் உள்ள நேரு முதலிய தலைவர்களின பெரிய படங்கள் மீது திரைகளைத் தொங்கவிடச் சென்னை மந்திரி சபை முடிவு செய்தது.

அந்தப் படங்கள் மீது தூசி பட்டு கெட்டுப் போகாமல் பாதுகாப்பதற்காக இந்த மாதிரி திரை போடப்படும்.

இச் செய்தி 11-6-55-ம் தேதியிட்ட **'தின வதந்தி'**யில் வெளியானது. இவ் இரண்டும் வெவ்வேறு செய்திகளல்ல! ஆனால் 'தின வதந்தி'ச் செய்தியில் பத்திரிகா தர்மம் சாகடிக்கப்பட்டிருப்பதைப் பாருங்கள். 'அதிகாரிகள் வீரர்களின் படங்களை' என்று 'சுதேசமித்திரன்' எழுதுகிறது. அதே செய்தியில் விஷத்தைக் கலந்து உண்டு வாந்தி எடுக்கிறது. "நேரு முதலிய தலைவர்களின் படங்கள் மீது" என்று. இதைப் போன்ற ஆதாரங்கள் எவ்வளவோ உண்டு.

இப்படிச் செய்திகளை வதந்திகளாக்கி வெளியிடும் ஜக ஜாலப் புரட்டு 'தின வதந்தி'க்கு மட்டுமே காபிரைட்! இந்த உண்மையைத் தெரியாமல் வேறு யாரும் செய்திகளை வதந்திகளாக்கினால் தண்டனைக்குள்ளாவார்கள் என்று கூட ஒரு பிரகடனத்தை ஆதித்தனர் வெளியிடலாம் என்பது நமது 'கார்க்குருவி'யாரின் கடைசிச் செய்தி. வாஸ்தவம்தான். காபிரைட் தின வதந்திக்கே இருக்கட்டும் கவலையில்லை எனக்கு. உண்மையில் அண்ணா பேசாத பேச்சைப் பேசியதாகக் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டது சில நாட்களுக்கு முன்பு. அண்ணாவின் பேச்சை ரிக்கார்டு செய்து வைத்துக்கொண்டு அதை மக்களுக்கும் போட்டுக் காட்டி—நோட்டீஸ் அனுப்பி "பொய்ச் செய்தி வெளியிட்டாயே நியாயமா?" என்று கேட்டும் பார்த்தார்களே! அசைந்து கொடுத்ததா 'தின வதந்தி? அசைக்கத்தான் முடியுமா' அண்டப் புளுகும்—ஆகாசப் பொய்யும் 'தின வதந்தி'க்கே உரிமைப்பட்டது என்பது நாடறிந்த சட்டமாக இருக்கும்போது. இந்த இ(அ)லட்சணத்தில் பெருமைப்படுவது தவறு?

போலீஸ் அதிகாரிகள்கூட இந்தத் 'தின வதந்தி'யைப் பார்த்துத் தானே துப்பறிகிறார்களாம். வெற்றி அடைகிறார்களாம் வாழ்த்துகிறார்களாம் தின வதந்தியை. இனி நிரபராதியைக் கைது செய்வது—குற்றவாளியைக் கண்டு பிடிக்க முடியாமற் போய் விடுவதுமான பயங்கர நிலைமை ஏற்பட்டால் அதற்குத் 'தின வதந்தி' பொறுப்பாளியல்ல. ஏனென்றால் செய்திகளை வதந்திகளாக்குவதும் வதந்திகளைச் செய்திகளாக்குவதும் 'தின வதந்திக்கே' உரிமையானதாகும். ஆகவே உரிமையை மீறுவோர் எவராயினும் ஆபத்துக்குள்ளாவார்கள். அண்டப் புளுகை ஆதரிப்பதே முறை. அத்து மீறி வேறு பத்திரிகை வாங்குவோரிடம் 'டபுள் சார்ஜ்' வசூலிக்கப்படும். பத்திரிகா தர்மம் பற்றிய துண்டுச் சீட்டுகள் அங்கீகரிக்கப்பட மாட்டாது. பொய்களைப் படிக்க மறுப்போரைப் போலீஸார் வசம் ஒப்புவிக்கப்படும். அடாது எதிர்த்தாலும் விடாது தின வதந்தி நடைபெறும்—இது தின வதந்தி தரும் பலே செய்தி!

# உங்களுக்கு

நாங்கள் வழங்கும் செய்தி இது. சற்றுக் கவனியுங்கள். வாரந்தோறும் ஒவ்வொரு இதழிலும் 'கலைமன்றம்' கனிகள் குலுங்கும் கருத்துச் சோலையாக மணம் பரப்பி வருவதை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள்.

அடுத்து வரும் இதழ்களிலும் ஏற்றம் காண்பீர்கள்—இனிமை யுண்பீர்கள். மென்மேலும் புத்தம் புது அம்சங்களை இணைத்துப் பொன் சுரங்கமாக ஆக்கிக் கொண்டே இருக்கிறோம். வாசகர்கள் காட்டி வரும் பேராதரவு எங்களுக்கு ஊக்க மளிக்கிறது. உற்சாக மடைகிறோம்—நாங்களும்.

ஆடவரும், பெண்டிரும் ஒன்றாகக் கல்வி கற்கும் முறையான உயர் நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும்) கூட்டுப் படிப்பு இருப்பதைப் பற்றி வாசகர்களின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகின்றோம். கூட்டுப் படிப்பு முறை சரியா அன்றித் தவறா என்பதைப் பற்றிய அவரவர் கருத்துரையை அனுப்புங்கள். கலைமன்றம் அளவுக்கு ஒரு பக்கத்திற்கு மேற்போகாமல் எழுதுதல் வேண்டும். ஆதரவுக் கட்டுரையும், மறுப்புக் கட்டுரையும் மாறி மாறி 'விவாத மேடை'யில் இடம் பெறும்.

நகைச்சுவைத் துணுக்குகளும் வரவேற்கப்படும், சிரிப்பை மட்டும் ஊட்டாமல் சிந்தனையையும் தூண்டக் கூடியதாக இருப்பின்.

அடுத்த......இதழில் கேட்டோம் கொடுத்தார்கள் என்ற பகுதியும் (நாங்கள் எழுப்பும் பத்துக் கேள்விகட்கு வாசகர்களே பதில் எழுத வேண்டும்) ஆரம்பமாகிறது.

—ஆசிரியர்.

# தோழிக்கு?

இறையனார்

**1**

தோழியே! வணக்கம்! உன்றன் சுவையான கடிதங் கண்டேன்! ஏழையேன் அரசாங்கத்து எழுத்தரின் மனைவி! உன்றன் தோழி நான் அந்நாள்! இன்று சொல்லவும் கூசுகின்றேன்; வாழவும் வழியற்றேங்கும் வறியள்; கதையோ சோகம்!

**2**

கதையென்றேன்! நீயோ இன்று கலெக்டரின் மனைவி! கேட்டால் புதுப்புது நவீனமெல்லாம் பொம்பெனக் குவியும் வீட்டில்! எதைப் படித்தெதை யொதுக்க என்றேங்கிப் போவாய்! என்றன் கதை போல அவற்றில் ஒன்றுங் காண்பது அரிது அம்மா?

**3**

அன்றுநம் மிளமைப் போதில் அளாவிடும் நேரம் சொன்னாய்! இன்றதை நினைவூட் டற்கும் எத்துணை வெட்கம்! "ராணி உன்றன் ராஜா யாரோ? அதைச் சொல மறந்திடாதே! மன்றற்கு அழைப் பனுப்ப மறந்தாயோ பேசேன்!" என்றாய்!

**4**

அந்தநாள் கழிந்து இன்றோ ஆண்டுகள் பதினாறன்றோ! மூந்தா நாள் போல்தான் தோன்றும் மோகனா! உனக்கு எங்கோ சுந்தரர் வாய்த்து தில்லிச் சீமைக்குச் சென்றாய் என்றே எந்தனின் பாட்டி சொன்னாள் எனவே நான் எழுதவில்லை.

**5**

எழுதினால் மட்டும் என்போல் ஏழையின் மனத்திற் குன்றன் பழுதிலாக் கணவர் உன்னை பார்த்து வா என்று சொல்வார்? வழுவி நான் சொன்னால் சற்றே மன்னிப்பாய்! என்றன் பெற்றோர் கழுவினார் கையை; நானும் கணவரை ஏற்றுக் கொண்டேன்.

**6**

கொண்ட யென் கணவர் சர்க்கார் குமாஸ்தாதான்! மாதமெல்லாம் தெண்டமிட் டுழைக்கும் ஆபீஸ் செக்கிலே மாட்டிக் கொண்டார். கண்டதோர் பயன்தான் என்ன? கணவர்க்குக் காசம்! எற்கு அண்டிற்று என்புருக்கி! ஐந்து நற் பேறும் பெற்றோம்.

7

பெற்றவை ஐந்தில் நான்கு பெண்கள்; ஓர் சிறுவன், மாமி பெற்றயென் நாத்தி வாழா வெட்டி யாய் வீட்டில்! இந்தச் சுற்றத்தைக் காக்க சர்க்கார் சுளையாகத் தரும் தொகையைச் சற்று நீ கேட்டால் அந்த சர்க்காரைச் சபிப்பாய் தோழி!

8

இருமலும் பஞ்சப் பாட்டும் எம் வீட்டு கிராமபோன் கீதம்; எருமை போல் நகரும் நாட்கள்; இதைக் காட்டும் நாட் காலண்டர்; அருமை யாய் அடுத்த மாத ஆரம்பத் தேதி காட்டிப் பெருமையால் சிலமாதங் கள் ஒருநாளைக் கூட்டிக் கொள் ளும்!

9

கழுத்திலே தாலி யொன்றே கவல்கின்ற இருவர் சின்னம்! எழுத் தரின் மனைவிக் கேது ஏழ்வடம் வைர மாலை? புழுத்தஇவ் வாழ்வில் நாங்கள் புழுங்கிடும் போது நீயோ வழுத்தியே வரவேற் கின்றாய்! மக ளின்நல் மணங் காட்டற்கே!

10

மணங்காண வந்தால் அங்குன் பங்களாக் காவ லாளி சுணங்காமல் என்னை உள்ளே நுழைந்திட ஒப்பு வானோ? இணங்கெனும் ஆவல்! பின்னே இழுத்திடும் ஏழ்மை! என் போல் பணங்காசு இல்லா தோர்க் கும் பங்களா வரவேற் புண்டோ?

11

பங்களா வாழ்வில் உள்ள பாவை நீ! பெண்கள் நெஞ்சில் பொங்கிடும் பொறாமைத் தீயே என்றனின் கடித மென்றே எங்கே நீ கோபிப் பாயோ? என்றெனக்கு அச்சம் தோழி! மங்காத திருவிளக் காய் பல்லாண்டு வாழ்க! வாழ்க!

12

வாழ்வெலாங் கசந்து, ஏழ்மை வடிவுற்றுக் காலந் தள்ளும் தாழ் வெல்லாந்தலை யெழுத்தோ? தவ மில்லாக் குறையோ? ஏங்கி வீழ் வதே அரசாங் கத்தின் விசுவாச ஊழியர்க்கு ஊழ்தந்த வரம் என் றால் யாம் ஒழிவதே மேலென் பேன்நான்!

13

நான்என்ன? இன்னும் என் போல் நலிகின்ற குடும்பத் தாய் கள் ஏன் பெண்ணாய் பிறந்தோம்? சர்க்கார் எழுத்தர்க்கு வாழ்க்கைப் பட்டோம்? தேன் அன்றோ சாவு? என்றே தேம்புவோர் தொகை ஏராளம்! மான் ஒத்த மோகனா! உன் மனதைப் புண்ணாக்கி விட் டேன்.

14

எதையோ நான் எழுத எண்ணி ஏதோ நான் எழுதி விட்டேன் சதைநகம் போன்றி ருந்தோம் சகோதரி! குமுறி வெம்பும் இத யத்தைத் திறந்து சொன்னேன்! எனை மன்னி! வணக்கம்! உன்றன் புதல்வியின் மன்றல் வாழி! போ தும் என் வாழ்த்தே தோழி!


படித்து பலன்அடைய
இதோ வழிகாட்டி!
வசீகரண தந்திரம்
அல்லது
மனோவசிய சாஸ்திரம்
நீங்கள் விரும்பும் காரியங்களில் வெற்றி பெற 100 அற்புதமான முறைகளை இலகுவாகப் போதிக்கும் சிறந்த புத்தகம்
192 பக்கங்கள்
விலை உயர்ந்த பதிப்பு ரூ 3-0-0
சாதா ரூ 2-0-0
122, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1

# கலைமன்றம்

பார்லிமெண்ட்

காட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை (இலங்கை)
7-6-55

அன்புடையீர்,

வணக்கம். கொழும்பு கலைமகள் கம்பெனியிலிருந்து 'கலைமன்றம்' பெற்றுக் கொண்டேன். புதுமையில் பூத்திருப்பதைக் கண்டு பூரிப்படைகிறேன்.

—ஆ. சிவபாதம்.

[பூரிப்பு என்றென்றும் நிலைத்திருக்கச் செய்வதே கலைமன்றத்தின் கடமை தவறு நற்பணி--ஆ-ர்]

அம்பை,
8-6-55

ஐயா,

தங்கள் கலைமன்றத்தில் வெளிவரும் ஒவ்வொரு பகுதியையும் படிக்கும்பொழுது தமிழின் இனிமையை உலகுக்கு உணர்த்துவதை அறிந்தேன். 'விவாதமேடை' என்றபகுதி மிகவும் நன்ருக இருக்கிறது. எனது அபிப்பிராயமும் ஒன்றுண்டு. சரித்திர சம்பந்தமான சான்றுகளைத் தந்து மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதுமாதிரி ஆங்கில இலக்கியத்தைக் கலைமன்றத்தில் வெளியிட வேண்டும்.

எஸ். எஸ். இலக்குவன்.

[இலக்கணத்தை வெளியிடுவதைப் பார்க்கிலும், மாணவர்கள் கண்டிப்பாகக் கற்றுணர வேண்டிய மேலைநாட்டு இலக்கியங்களை வெளியிடுவதே பயனளிக்கும். எனவே 'கலைமன்றம்' ஒவ்வொரு இதழிலும் மேலைநாட்டு கட்டுரை-கவிதை விமர்சனங்கள் வெளியிட்டு வருகின்றது. திரு. ரா. தணலன் தொடர்ந்து மேல்நாட்டுக் கவிதைகளைப் பற்றிய விமர்சனம் எழுதி வருவார். படிக்கத் தவருதீர்கள்.—ஆ-ர்.]

24, இன்பெரி ரோடு,
பெங்களூர்-1
9-6-55

ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். கலைமன்றம் கடந்த ஒரு திங்களாக புதிய அம்சங்களுடன் மறுமலர்ச்சி பெற்று பவனி வருவது கண்டு உளம் மகிழ்கின்றேன். ஏன்? வாசகர்கள் எல்லோருமே உளம் மகிழ்வார்கள் என்பது திண்ணம். மாஜி ஆசிரியர் ஏன்—வெளியேறினர் என்ற என் ஐயத்தை நீக்குவீர்களா?

கலைமன்ற அன்பன்,
அ. அந்தோணி.

[ஐயத்தை நீக்கும் விடை தங்கள் மடலிலேயே பொதிந்து கிடக்கிறதே. பழையன கழிதலும் புதியன புகுதலும் இயல்பு—ஆ-ர்]

'இந்து' விற்பனையாளர்,
ஆத்தூர்,
10-6-55

அன்பு ஐயா,

கலைமன்றம், கரும்பு, கலை அரங்கம் ஆசிரியர்கள் விலகியதாக அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். பிரதான ஆசிரியர் ஒருவரை ஆசிரியராகப் போடுங்கள். உடனடியாகக் கவனிப்பீர்கள் என நம்புகிறேன்.

அன்புள்ள,
பி. ஏ. கந்தசாமி.

[தங்கள் விருப்பப்படியே பிரதான ஆசிரியர் ஒருவர்தான் 'கலைமன்றம்' ஆசிரியர் பொறுப்பை ஏற்றுள்ளார்—ஆ-ர்]

வணிகர் தெரு,
டெங்கனி கோட்டை.
10-6-55

## போலீஸ்காரன்

போலீஸ்காரன் தனது வாழ்நாள் முழுவதும் மக்களின் உயிர்களையும், பொருள்களையும் பாதுகாக்க பாடுபடுகிறான். ஆனால் அவன் வேலையிலிருந்து நீங்கியதும் மக்கள், 'அப்பா! அந்த விஷபாம்பு—கொடுங்கோலனிடம் விடுதலை கிடைத்தது என்கிறார்கள்' உயிரையும் பொருளையும் காப்போனுக்கு கிடைக்கும் பட்டம் விஷமுள்ளவன். அவன் வாழ்விலே கெடுதியும், இழிவும் எழுதப்படிருக்கிறது, இரவுகளிலே அவன் தனது இழிவை நினைத்து கண்ணீர் சிந்துகிறானோ இல்லையோ தெரியவில்லை. அவனும் மனிதன் தானே. அவனுக்கும் கண்கள் இருக்கின்றன. அதில் கண்ணீரும் இருக்கிறது. கண்ணீரைக் கிளப்பிவிடும் போலீஸ்காரன் தானும் கண்ணீர் சிந்த பயிற்சி பெற்றிருப்பான் என்பதில் சந்தேகமில்லை,

—தௌன்ஸவி

அன்புடையீர்,

வணக்கம். 'விவாத மேடை' என்ற பகுதியை ஏற்படுத்தி நல்ல கருத்துக்களைப் பிரசுரிக்கும் கலைமன்ற ஆசிரியருக்கு என் பாராட்டு உரியதாகுக.

—ஜ. சுப்பிரமணியம்.

['விவாத மேடை' க்கு வாசகர்களிடையே இத்துணை வரவேற்பும், வாழ்த்தும் கிடைத்தமைக்காக பெரு மகிழ்வெய்துகின்றோம். இதுபற்றிப் பாராட்டி வந்துள்ள கடிதங்கள் பலவற்றுள் இது வொன்று—ஆ-ர்]

2, எல்லையம்மன் கிழக்குத்தெரு,
திருவாரூர்.
11-6-55

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். தற்சமயமுள்ள சூழ்நிலையில் நல்ல கதைகள் பல கொண்ட வார இதழுக்குத்தான் வாசகர்களிடத்தில் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கேற்ப கவர்ச்சிகரமான அட்டைப் படத்துடன் வாராவாரம் வெளிவந்து கொண்டிருக்கும் 'கலை மன்றம்,' கலைக்கு—மன்றம்தான்.

—இரா. விசுவநாதன்.

[வாழ்த்துக்கு மிக்க நன்றி.
—ஆ-ர்]

பசுபதியப்பா பள்ளி, காரமடை.
13-6-55

அன்பரீர்,

கலைமன்றம் பார்லிமெண்ட் பகுதியில் கருத்துக்கள் குவிகின்றன. நானும் தங்கள் கலைமன்ற வளர்ச்சிக்குப் பாடுபடுகிறேன். 'சிரியுங்கள்' என்ற பகுதி ஒன்றை ஆரம்பியுங்கள். அப் பகுதிக்கு எழுதத் துடிக்கிறேன்.

அன்பன், துரை. முருகேசன்.

# காதலும் கண்ணீரும்

ஏ.வி.பி.ஆசைத்தம்பி

**முன் கதை:—**

[சாந்தா வொரு இளங் குமரி. தனது அக்கா, ரமணி திருமணமாகி, கணவனோடு புறப்பட்டுப் போனபிறகுதான் சாந்தாவுக்குப் பருவம்நெஞ்சத்தை நச்சரிக்க. தாய் தந்தையர் இருந்தும் தனியாக வாழ்வது எவ்வளவு சங்கடமாக இருக்கிறதென்பதை உணர்ந்து வருந்தினாள்; அக்காளுக்கும்—அத்தானுக்கும் விடை கொடுத்து அனுப்பி விட்டுத் தன் அறையினுள் நுழைந்தவுடன். அப்போது அவளது சிந்தனை கடந்த காலத்தை நோக்கி விரைகிறது. அக்காள் ரமணி கல்லூரி மணவி. அவளுடன் படித்து வந்த மாணவன் வடிவேலு. இருவரும் டேபிள் டென்னிஸ் விளையாட்டின் போது ஒரு நாள் அறிமுகமாகி, அதன பின்பு 'காதல் ஜோடி' ஆகிவிட்டார்கள். இவர்களின் பேச்சைப் பற்றிச் சந்திப்பைக் குறித்துச் சர்வசதா கேட்டு அறிந்து கொள்வதில் சாந்தாவுக்கு அலாதிப் பிரியம். இதுவரை அனுபவத்தில் காதல் நோய் கண்டறியாப் பிஞ்சல்லவா ! பின்னர் ரமணியும்—வடிவேலுவும் தம்பதிகளாக்கப் பட்டார்கள்.

இதுவே சாந்தா மனத்திரையில் ஓடிய சிந்தனை யோட்டம்.

துணை யில்லாமல் பொழுது போகா நிலையில் தவித்த சாந்தாவுக்கு. ஒருத்தி வந்து சேர்ந்தாள். அவள் சாந்தாவின் தாய் மாமனுடைய மகள்–சாவித்திரி. அவளும் பருவப் பெண். ஆனால், நிகழ்கால நாகரிகத்தின் நேரடியான வாரீசு. அவளால் தனக்குத் தீங்கு விளையு மென்பது முதலில் தெரியாது பழகினாள். இனி சாந்தாவும், சாவித்திரியும்......?

ராசாவின் தொடர்பு ஏற்படஏற்பட சாந்தாவின் இதயத்தில் காதல் அரும்பியது. ஆனால் சாவித்திரி ராசாவுடன் நெருங்கிப் பழகுவது சாந்தாவுக்கு பெரும் சோதனையாகவும் வேதனையாகவும் தோன்றியது. இவ்வித மனப் போராட்டத்துக் கிடையே.........?

விபரீதமான இரு எண்ணங்கள் சாந்தாவின் மனத்தில் உதித்தன. ராசாவின் முன்னால் தென்படாமலேயே நடந்து கொள்ள வேண்டுமென்று அவள் நினைத்தலும் ஏனோ ஒரு விதாமான ஆசையும் தோன்றியது ராஜாவோடு பேசவேண்டும் என்று. இவ்வாறான சிக்கலில் அவளது சிந்தனை சேகரைப்பற்றியும் எண்ணத் தொடங்கியது. அடுத்து நிகழப் போவது......மேலே படியுங்கள்.

# 10

ஒரு குதிரை வண்டியில் ராஜா உட்கார்ந்திருந்தார்.

என்னை வரும்படி கைகாட்டினார்.

நான் வேகமாக நடந்து சென்று, வண்டியில் ஏறிக் கொண்டேன்...!

"என்ன சாந்தா வீட்டுக்கா?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

சேகர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.

நான் திடுக்கிட்டுப் போனேன்.

என்னையும் இவரையும் பார்த்தால் அவர் என்ன நினைத்துக் கொள்வார்?

"ஆமாம் வீட்டுக்குத் தான் போகறேன்!" என்று சொல்லி வைத்தேன்......

"நான் போகிறேன்!" என்று சொல்லி என் பதிலுக்குக் கூடக் காத்திராமல் அவர் போய் விட்டார்.

என்னால் பேசக் கூட முடியவில்லை......

கஷ்டப்பட்டு...

"நான் வீட்டுக்குப் போகிறேன்!" என்றேன்.

வண்டி ஓடிக் கொண்டிருந்தது.

"சாந்தா....அதற்குள்ளாகவா போகவேண்டும்? அவன் பக்கத்து வீட்டுக்காரனாய் இருந்தால் என்ன? அவனுக்காகவா பயப்படுகிறாய்?....உன்னைத் தனியாகச் சந்திக்கவே முடியவில்லையே!''

என்று அவர் என் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

அவர் என்னைத் தொட்டதும், என் கஷ்டங்கள் நீங்கிவிட்டதைப் போன்ற ஒரு உணர்ச்சி...என்னைக் கவ்வியது.

"பார்த்துப் பேச இடம் கொடுக்கக் கூடாது பாருங்கள்.......இன்னொரு தினம் பார்ப்போம்!" என்றேன சிரித்தபடி....

அவர் பேசாமல் இருக்கவே...

"நான் எங்கும் ஓடிவிட மாட்டேன்!" என்றேன்.

"நாளைக்கு மறுதினம் எனக்கு லீவு. நீ என் அறைக்கு வருகிறாயா?" என்றார்.



"ஆஹா! வருகிறேன்!!" என்றேன் முன் பின் யோசியாமல்.

வண்டி எங்கள் தெருவின் கடைசியில் நின்றது.

என் கைகளை அவரிடமிருந்து விடுவிடுத்துக் கொண்டு நான் வண்டியை விட்டு இறங்கினேன்.

என் உள்ளம் மகிழ்ச்சியினால் நிறைந்திருந்தது.

"வருகிறேன்!" என்றேன்.

"போய் வா!" என்று விடை கொடுத்தார்.......அவர் குரலில் தான் எத்தனை கனிவு.

* * *

வீட்டிற்குள் நான் நுழையும் போதே சாவித்திரியைக் கவனித்தேன்.

டிரஸ் செய்து கொண்டு தயாராக இருந்தாள்—

என்னைக் கண்டவுடன்,

"சீக்கிரம் கிளம்பு...வெளியில் போக வேண்டும்...நிதானமாக வருகிறாயே?" என்றாள்.

"எங்கே?" என்றேன்.

"சினிமாவுக்குத்தான்; வேறு எங்கே போக்கிடம்?" என்றாள்.

உள்ளே போய் அம்மாவிடம் "என்னம்மா?" என்றேன்.

"போய் வா?" என்றாள்.

வேறு பேச்சேது?

அவளுடன் புறப்பட்டேன்.

என் பாடப் புஸ்தகங்கள் என்னைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது!

"துணைக்கு யாருமில்லையே!" என்றேன்.

"நமக்கென்ன பயம்!" என்றாள்.

நான் பேசவில்லை.

* * *

அடுத்த தினம் போன இடம் தெரியவில்லை. முதல் நாள் இரவெல்லாம் ஒரே கனவு எனக்கு. ராஜாவுடன் சேர்ந்தே சுற்றுவதாகவும், எனக்கும் ராஜாவுக்கும் திருமணமாவதாகவும் எண்ணங்கள்—! கனவு பலிக்குமா?

ராஜா கெடு வைத்த தினம் பிறந்தது.

நான் வீட்டை விட்டுப் புறப்படும் வேளையும் நெருங்கியது. எனக்கு மனதில் ஒரு சந்தேகம்.

'நான் வருகிறேன்' என்று சொல்லி விட்டதால் ராஜா என்னை அழைத்துப் போவதற்கு வராமல் இருந்து விட்டால்......

எனக்கு அவர் வசிக்கும் இடம் தெரியாதே!

'எதற்கும் பள்ளிக்கூடத்திற்குப் போகலாம்... அங்கே அவர் இருந்தால் அவருடன் போய் விடுவது; இல்லையென்றால் எப்போதும் போல் வீட்டுக்குத் திரும்பி விடுவது என்ற எண்ணத்தில் பள்ளிக்குக் கிளம்பினேன்.

மனதில் ஒரே ஆனந்தம்......அடேயப்பா......என் மனதிற்கிசைந்த காதலரைத் தனியாகச் சந்தித்துப் பேசப் போகும்—பொன்னாளல்லவா இது!

அவரும் என்னைக் காதலிக்கிறார்! வீணாக என் மனதை நான் அலட்டிக் கொண்டதுதான் மிச்சம்.

பொதுவாகச் சொல்லப் போனால்.......அன்று நான் உல்லாச புரியிலிருந்தேன்...என்றுதான் சொல்லவேண்டும்

"என்னடி இன்றைக்குக் காலையில் இவ்வளவு அலங்காரம்?" என்று கேட்டாள் சாவித்திரி.

'ஒன்றுமில்லை!" என்று மழுப்பிவிட்டேன் அவள் பார்வையினால் விஷயத்தை அறிந்து கொள்ள முயன்றால், முடியுமா அது?

கட்டுப் புஸ்தகங்களைச் சுமந்து கொண்டு நான் வழக்கமாகப்புறப்படும் வேளைக்குப் பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டேன். வீட்டை விட்டு வெளியில் வந்தவுடன், என் கண்கள் ஒரு முறை பக்கத்து வீட்டு வாயிலின் முன் நிலைத்தன. நான் எதிர் பார்த்தபடியே அங்கு சேகர் நின்று கொண்டிருந்தார்.

வலிய ஒரு சிரிப்பை வரவழைத்துக் கொண்டேன். அவரும் சிரித்து வைத்தார். கடனுக்குத்தான்.

"தனியாகவா புறப்பட்டு விட்டாய்?" என்றார்.

'ஆமாம் என்று சொல்லிக் கொண்டே நடந்தேன்.

நேற்றுக்கு முன் தினம் என்னையும் ராஜாவையும் சேர்ந்தாற் போல் பார்த்தாரே......என்ன நினைத்துக் கொண்டாரோ? அதைப் பற்றி நான் இந்த இரண்டு நாளும், ஒன்றையும் நினைக்கவில்லை.

இருந்தாலும் மனத்தில் ஒரு அலட்சிய பாவம்!

அவர் நம்மை என்ன செய்து விட முடியும்?

எனக்கும் அவருக்கும் என்ன இருக்கிறது?

ஆனால் என் தாயாரின் எண்ணம் வேறாக அல்லவா இருக்கிறது.

மனதில் இவ்விதமான எண்ணங்கள் ஊசலாட நான் மேலே நடந்தேன்.

பள்ளிக்கூடத்திற்கு அப்பால்.........சற்று தள்ளி ராஜா நின்று கொண்டிருந்தார்...நான் அவர் பக்கமாகப் போகவே அவர் நடக்க ஆரம்பித்தார்.

நானும் பின் தொடர்ந்தேன்' பள்ளிக்கூடத்திற்குச் சாரி, சாரியாக வந்து கொண்டிருந்த பெண்களும், வாத்தியாரம்மாக்களும், என்னையும் ராஜாவையும் கவனிப்பார்களே என்ற எண்ணம் என் மனதில் எழவேயில்லை. ஏதோ ஒரு அசட்டுவிதமான தைரியம்!

கொஞ்ச தூரம் நடந்த பிறகு...

"சொன்னபடியே வந்துவிட்டாயே சாந்தா!" என்றார் அவர்.

"ஆமாம்" என்றேன்.

என் குரலில் நடுக்கம் ஏற்பட்டது எனக்கே தெரிந்தது. என்னதான் துணிந்து விட்டாலும் வாழ்க்கையில் எனக்கு இது தானே புது அனுபவம்! நடுக்கம் கொஞ்சம் இருக்கத்தானே செய்யும்?

அவர் அறைக்குப் போய்க் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வரப் போகிறோம் இதில் தவறொன்றும் இல்லையே...என்றதைப் போலப் பல மாதிரியான நினைவுகள். என்னையே நான் சமாதானம் செய்து கொண்டேன்.

அவரது அறை தனியாக இருந்தது.

"அமைதியான இடம்" என்றார்.

"ஆமாம்!" என்றேன்.

"என்ன சாந்தா எதற்கெடுத்தாலும் 'ஆமாம்' போடுகிறாய். அதற்குமேல் பேசமாட்டாயா?" என்றார்.

நடுக்கம் தெரியக் கூடாத வகையில் பேச ஆரம்பித்தேன்.

"அப்படி ஒன்றும் இல்லை.... நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு அந்தப் பதில் போதும் என்ற எண்ணத்தினால் தான் சொன்னேன்".

எவ்வளவு முயற்சித்தும் என் குரல் நடுங்கிக் கொண்டிருந்ததை அவர் கவனித்து விட்டார்.

"நாம் தனியாகத்தானே இருக்கிறோம். ஏன் நடுங்குகிறாய் சாந்தா...நான் உன்னைப் பயப் படுத்தும் விதத்திலா இருக்கிறேன்?" என்று கூறிய அவர் என் கைகளைப் பற்றினார்!

என் உடலில் சூடேறியது. அவரது இன்ப ஸ்பரிசத்தினால் நான் தலை குனிந்தேன். அவர் என் முகத்தை நிமிர்த்தினார்.

"சாந்தா!" கரகரப்பான குரலில் அவர் கூப்பிட்டார்.

"உம்!" என்றேன்.

"உன் மனதில் உள்ளதைச் சொல்......நீ என்னை நேசிக்கிறாயா?" என்றார்.

"நான் இங்கு வந்ததிலிருந்தே நீங்கள் அதைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டுமே," என்றேன்.

"உன் வாயால் அதை எப்படிக் கேட்காமல் இருப்பது. அதனால் தான் கேட்டேன்," என்றார் அவர்.

அவர் கண்களில் தோன்றிய பிரகாசம் எனக்குப் புதிதாகத் தெரிந்தது அவர் என் கைகளை விடவில்லை.

மெதுவாக அவர் என்னை அணைத்தார். நான் பேசாமலிருந்தேன்.

முத்தம் கொடுத்தார்...—என் காதலர்தானே என்ற நினைவில்...நானும்...ஈடுகொடுத்தேன் ஆண்மை, பெண்மையை ருசி பார்த்தது.

(வளரும்)

# இருண்ட வாழ்வு

ஆதி.சு.கருப்பையா

மாலைக் கதிரவன் தன் பொன்னிறக் கதிர்களைப் பரந்து கிடக்கும் பூமியின்மேல் பரப்பிப் புதுமெருகிட்டுக் கொண்டிருந்தான். பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்ற பசும் புல்தரையில் பட்டு மிளிரும் அந்திச் சூரியனின் ஒளி மனதிற்கு மிகவும் கவர்ச்சியைக் கொடுத்தது. பச்சை மலையிலிருந்து பவனிவரும் தென்றலின குளுமையைத்தான் என்னென்பது? வானை முட்டும் தென்னந் தோப்புகளும், உள்ளங் கவர் மாஞ்சோலைகளும், அவைகளினூடே வளைந்தோடும் சிற்றோடைகளும், நீரோட்டப் பாதையிலே மண்டிக்கிடக்கும் தடாகங்களும், ஆங்காங்கே எழும்பும் புள்ளினங்களின் மகிழ்ச்சி நாதங்களும் இயற்கையன்னையின் எழிலைத்தான் எத்தனை விதமாக எடுத்துக் காட்டுகின்றன! சகலவிதமான இன்பங்களையும் மனிதன் அனுபவித்த போதிலும் இயற்கையின் எழிலில் பொதிந்திருக்கும் உண்மையான இன்பக் கலையை அவன் இன்னும் சரியாக எட்டிப் பிடிக்கவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். மனித சமுதாயம் இன்றுவரை சாதித்தவைகளில் ஒன்று உலகையே விநாடியில் அழித்துவிடுவேன் என்பது. ஆனால் பல நூற்றாண்டுகளானாலும் புதிய உலகமொன்றைச் சமைத்துக் காட்ட முடியுமா? வாழத் தெரியாத மனிதன் தன்னையே அழித்துக் கொள்கிறான் என்பது எவ்வளவு உண்மை?

பறவைகள் எவ்வளவு சுதந்தரமாக வாழ்கின்றன? அவைகள் ஒன்றையொன்று வஞ்சிப்பதில்லை. விபசாரமும், வீண்வம்புகளும் இனவெறியும் அவைகளிடையே கிடையாது. கூட்டமாகவும் வாழ்கின்றன. தனித்தனிக் குடும்பமாகவும் வாழ்கின்றன. எதிர்காலச் சேமிப்போ அதைப் பற்றிய எண்ணமோ இல்லாத ஒரு இனம். ஆனாலும் எவ்வளவோ ஆனந்தமாக வாழ்கின்றன. அறிவுடையவன் மனிதன்; அண்டத்தையே அடக்கியாளுகிறவன் என்று பெருமை பேசுகிறான். தன் இனத்தையே அடக்கியாளச் சட்டங்கள் இயற்றி, அவற்றை நிறைவேற்றப் பணமும், படைபலமும், நீதிமன்றங்களும் தேவைப்படுகின்றன. மக்களை நல்வழிப் படுத்துகிறோமென்று ஆயிரக் கணக்கான பத்திரிகைகளும், நூறாயிரக்கணக்கான புத்தகங்களும் வெளிவருகின்றன. இவைகளும்காணாதென்று அன்பையும், அஹிம்சையையும் போதிக்க

ஏசுநாதரும்;புத்தர்பிரானும், காந்தியடிகளும் தோன்றவேண்டி யிருக்கிறது. எனினும் பறவைகளைப் போல் அன்பு வழியைக் கொண்டபாடில்லை. ஒருவரை யொருவர் வஞ்சித்துக் கொல்லும் எண்ணமே தலைதூக்கி நிற்கிறது. அப்படியானால் பறவை இனத்திலே நீதி, நேர்மை களங்கப்படுவதில்லையா? வான வீதியிலே நடமாடும் வஞ்சகமற்ற அச் சமுதாயத்திலும் வஞ்சிக்கும் வல்லூறுகளும் இருக்கத்தான் செய்கின்றன.

எவ்வளவு நேரம் சிந்தனையிலே சிக்கித் தன்னை மறந்து நடந்தேனோ தெரியாது; ஏதோ ஒரு தோப்பிற்குள் நுழைந்து கொண்டிருந்தேன். சுற்றியும் முற்றியும் பார்க்கும்போது, எங்களுடைய தோப்பிற்கே வந்து விட்டதைத் உணர்ந்தேன். வந்துபோய்ப் பழக்கப்பட்ட கால்களல்லவா? உள்ளத்திலே குமுறியெழும் எண்ண எரிமலையைத் தணிப்பதற்கு இந்தக் குளிர்ந்த சோலை நிழலாவது உதவாதா என்று அங்கே போடப்பட்டிருந்த நீண்ட கல்லின்மேல் அமர்ந்தேன். அமைதியாக இருந்த அச்சோலைகூடப் பிறருக்கென்றே வாழ்வதாகத்தோன்றியது எனக்கு. எத்தனையோ வகையான புள்ளினங்களும் அந்தச் சோலையினால் வாழ்கின்றன. சோலையில் எத்தனை சுதந்தரமாக வாழ்கிறோம், பார்! என்று கூறுவதுபோல இரண்டு அணில் பிள்ளைகள் அங்குமிங்குமாக ஓடியாடிக் குதூகலமாக விளையாடிக் கொண்டிருந்தன. காட்டாறு

## மே தினச் சிறு கதைப் போட்டியில்
## பிரசுரத் தகுதி பெற்ற சிறு கதை

போன்றது இவைகளின் மகிழ்ச்சிப் பெருக்கு. இன்ப உலகிலேயே இருக்கும் இவைகளின் வாழ்விலே யாரும் தலையிடுவதில்லையா? பிரிவும், துக்கமும் உண்டா? ஒன்றாகவே பிறக்கின்றன; ஒன்றாகவே வளர்கின்றன; ஒன்றாகவே வாழ்கின்றன. மனிதனுடைய வாழ்க்கைக்கும் அணிலின் வாழ்க்கைக்கும் எத்தனை வேறுபாடுகள்! நான் எங்கோ பிறந்து வளர்ந்து, எங்கோ வாழ்க்கைப்பட்டு வாழ்ந்த வாழ்வும் நலிந்து வறண்ட பாலைவனமாகக் காலங்கழிக்கிறேன். அதோ! அந்தப் பெண் அணிலை ஆண் அணில் பாய்ந்து பாய்ந்தோடி வம்புக்கு இழுக்கிறது. பெண்மையின் சாந்தம்தான் என்னே! பிடரியில் ஏறிவிளையாடும் ஆணை எத்தனை அன்பாக நோக்குகிறது. "ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல், காதலர் கண்ணே யுள," என்றது எத்தனை உண்மை! பெண்ணோடும் வழியிலேயே ஆணும் ஓடுகிறது. ஒன்று மகிழ்ச்சியொலி எழுப்பினால் மற்றொன்றும் மகிழ்ச்சியாக ஒலிக்கின்றதே! அன்பு நிறைந்த வாழ்க்கை. இப்போது இவைகளில் ஒன்றை யாராவது பிரித்துவிட்டால்......? மற்றதின் நிலையைக்காண எனக்கு உறுதியான உள்ளம் வேண்டும்? அப்படியானால் எனது கடந்தகால வாழ்க்கையைப்பற்றி......?

"சிப்பியொன்றில் ஒரு முத்துத்தானே விளைகிறது. மனோரஞ்சிதக் கொம்பொன்றிலே ஒரே பூத்தானே பூக்கிறது"—என்பார் அன்பர் அரசப்பர் எனது அழகையும், குணத்தையும், படிப்பில் நான் காட்டிய ஆர்வத்தையும் பற்றிப் புகழும்போதெல்லாம். பெற்றோர் இட்ட பெயரை அருமையாக உணர்ந்து புன் முறுவலோடு "ரஞ்சிதம்" என்று என்னை அழைப்பதிலே என்ன இன்பந்தான் அவருக்குக் கிடைத்ததோ? என்னை அழைக்கும்போதெல்லாம் அவர் அடைந்த இன்பத்திற்குமேல் நான் அடைந்தேன் என்பதை இப்போது நான் சொன்னாலும் உலகம் ஒப்புக்கொள்ளாது. சிறுமியிலிருந்து சிற்றாடை அணியும் வரை எப்படி வளர்ந்தேனோ, அவ்வளவு சீக்கிரமாகவே கன்னிப் பருவத்தையும் எட்டிப்பிடித்தேன். அப்போது அரசப்பர் கல்லூரியில் முதல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். கிராம வாழ்விலே வாழ்ந்து பழகியவர். அதனால் போற்றவேண்டிய பழக்கங்களையே உடையவராக இருந்தார். கல்லூரிப் படிப்பிற்காக அப்பாவே தங்கை மகனுக்கு தகப்பனார் இல்லாத குறையினால் பட்டினத்திற்குக் கொண்டுவந்தார். ஆனால் அம்மாள் சிலசமயம் முணுமுணுப்பதைக் கண்டிருக்கிறேன். ஏனென்றால் அத்தை வீடு ஏழைக் குடும்பம். ஒரே மகனாயிருந்தாலும் பணமிருந்தால்தானே கல்லூரியில் படிக்க வைக்க முடியும்—மாமியினால்? இதை ஏனோ அம்மாள் அப்போது உணரவில்லை. உணர்ந்திருந்தும் வீண் பொறாமைப் பட்டிருந்தாலும் வியப்பதற்கில்லை. ஏனெனில் 'பண ஆசைப்பித்து அதிகம் அவளுக்கு. பாட்டன் தேடி வைத்துப்போன சொத்தில் அத்தைக்குப் பங்கில்லையா? பாட்டன் மரிக்கும்போது அப்பாவிடம் அவர் கேட்டுக் கொண்டபடி, இன்னும் அப்படுகை வயலை அத்தைக்குக் கொடுக்கவில்லையே! அத்தை அனுபவிக்க வேண்டியதை அத்தான் அனுபவிக்கட்டுமே—என நீதி வகுத்தது என் குழந்தை உள்ளம்.

அடக்கமான சுபாவமும், அமைதியான பழக்கமுமுடைய அரசப்பரை எங்கள் வீட்டிற்கு வந்த சில மாதங்களிலேயே என்னுள்ளம் விரும்பியதில் வியப்பில்லை. ஏதோ ஒருவித உரிமை எனக்கு உண்டு அவரை விரும்புவதற்கு என்றது எனது குமரி உள்ளம். அப்பாவிடமும், அம்மாவிடமும் மிகவும் மதிப்பு வைத்திருந்தார். தாராளமாகவும் அவர்களோடு பேசுவார். ஆனால் என்னிடம் மட்டும் அளவோடு பேசி முடித்துக்கொள்வார். அப்போதெல்லாம் தாகம் நிறைந்த கண்களோடு பார்ப்பேன். ஒரு தடவையாவது எனது கையால் உணவு கொடுக்கவில்லையென்றால், அன்றெல்லாம் எனக்கு உறக்கம் வருவதில்லை. நாளடைவில் எனது அன்பு அவரை ஆட்சிசெய்யத் துவங்கியது. காலையில் கல்லூரிக்குப் போவதற்கு வேண்டிய சகலமும் அவருக்கு நானே செய்து கொடுக்கும் அளவிற்கு எனக்கு உரிமை கொடுத்தார். மேலும் என்னுடனேயே பேசிக்கொண்டே வந்து என்னை எங்களுடைய பள்ளியில் விட்டபின்பே கல்லூரிக்குச் செல்லும் அளவிற்கும் பழகிவிட்டார். எனது தோழியர்கள் ஜோடிப்

புருக்களென்று எங்களுக்குப் புனைப்பெயரிட்டுக் கிண்டல் செய்வர். கிண்டல் மொழியாக எனக்கு அவை தோன்றவில்லை; இன்ப மொழியாகவே இருந்தது. அவற்றையெல்லாம் கவனியாதவர் மாதிரி அத்தான் நடந்துகொள்வார். எனினும் என்பால் அவர் கொண்டுள்ள அன்பு கடலினும் பெரிது என்பதை நன்கு அறிந்திருந்தேன்.

ஒருவருடம் வெகு வேகமாகவே ஓடிவிட்டது. நான் பத்தாவது வகுப்பிற்கும், அத்தான் இரண்டாம் வகுப்பிறகும் வந்தோம். அந்த வருடம் இருவரும் அரசினர் தேர்வுக்குப் போகவேண்டியவர்களானேம். முயற்சியோடு ஆரம்பத்திலிருந்தே படித்தோம். படிப்புக் கவனத்திலேயும் எங்கள் அன்பைப் பரிமாறிக் கொள்ளத் தவறியதில்லை நாங்கள். கல்வியினல் உண்டாகும் அறிவைப் போலவே, எங்கள் காதல் நினைவுகளும் வளர்ந்துகொண்டேயிருந்தன.

ஒருநாளிரவில் திருக்குறளைப் படித்துக் கொண்டிருக்கும் போது சில சந்தேகங்கள் எழுந்தன— எனக்கு. பள்ளியில் கொடுத்த குறிப்பிலோ அல்லது கடை வீதியில் வாங்கிய எஸ். எஸ். எல். ஸி. தமிழ் பாடப் புத்தகத்திற்காகப் போடப்பட்ட உரை நூலிலோ இருக்கும் விளக்கங்களில் ஐயப்பாடு

நீங்கி, பொருள்விளங்க வழியைக் கண்டிலேன். நாளை வகுப்பில் தமிழ் ஆசிரியரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்றாலோ, காலையில் பள்ளிக்குச் சென்றவுடன் அதே பகுதியில் "டெஸ்ட்" எழுதியாக வேண்டும். மணியைப் பார்த்தேன் பத்திற்குமேல் பத்து நிமிடங்களும் ஆகிவிட்டன. எப்படியும் அத்தானிடம் தெரிந்து கொள்வதைத் தவிர வேறுவழியில்லை என்று தோன்றியது. அவர் படித்துக் கொண்டிருக்கும் அறையை நோக்கினேன். விளக்கு எரிந்து கொண்டிருந்தது. புத்தகங்களை எடுத்துக்கொண்டு மெல்ல அத்தானுடைய அறையை நோக்கி நடந்தேன். அவருடைய படிப்பிற்கு இடைஞ்சலாகுமோவென்று தயங்கியவாறு அவருடைய அறைக்கு முன்னால் நின்றேன். நான் மலைத்து நின்றதைத் தூங்காமலிருந்த அப்பா கண்டு, "என்னம்மா ரஞ்சிதம்! ஏன் இங்கு நின்று கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டுவிட்டார். இதயம் படபடவென்று துடித்தது—அப்பா இன்னும் தூங்காமலிருந்திருக்கிறாரே யென்று. எனினும் சமாளித்துக் கொண்டு, "ஒரு சந்தேகம் படிக்கும்போது எழுந்தது'பா. அதைத் தெரிந்து கொண்டு போகலாமென்று வந்தேன் அத்தானிடம்," என்றேன். உடனே, "அரசப்பா!" என்று அப்பா அத்தானின் அறைக் கதவைத் தட்டினார். கதவைத் திறந்தவாறே, "என்னங்க மாமா," என்றார் அத்தான். "தங்கச்சிக்கு என்னமோ சந்தேகம் வந்திடுத்தாம் பாடம் படிக்கும் போது. அதைக் கொஞ்சம் சொல்லிக்கொடு'பா" — என்று சொல்லி விட்டுப் போய்ப் படுத்துக் கொண்டார். "உள்ளே வந்து உட்கார், ரஞ்சிதம், சொல்லித் தருகிறேன்," என்றார் அத்தான். அவருக்குச் சமமாக பெஞ்சியிலே அமர்வதற்கு எனக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. பிடிவாதத்தோடு பாயை விரித்துத் தரையிலே நான் உட்கார்ந்து கொண்டதைக் கண்ட அவரும் துண்டை விரித்து என் முன்னால் இருந்தார். குறளிலிருந்து "அன்புடைமை" என்ற அதிகாரத்தைத் திறந்து கையில் கொடுத்து அதிலுள்ள பத்துப் பாட்டுக்களுக்கும் விளக்கம் கூறுமாறு கேட்டேன். ஒவ்வொரு குறளுக்கும் மிகவும் எளிய முறையிலே பொருள் கூறிக்கொண்டே வந்தவர், "அன்போடியைந்த வழக்கென்ப ஆருயிர்க் கென்போடியைந்த தொடர்பு," என்ற குறளுக்குப் பொருள் கூறும்போது அவரின் குரலிலே ஒருவித ஏக்கமும் பார்வையிலே சோர்வும் தலையெடுத்தன. அவரை ஆவல் நிறைந்த கேள்விக் குறியோடு நோக்கினேன். சோர்வான பார்வை அன்பு கனிந்த பார்வையாகவும், தளர்ச்சியான குரல் எழுச்சி மிகுந்த கொஞ்சும் கனிவாகவும் மாறின. அவரது உள்ளம் பேசியது.

"ரஞ்சிதம்! செந்நாப்போதராம் திருவள்ளுவரின் குறளைப் படிக்கும்போது ஒரு தனியான இன்ப உணர்ச்சி உள்ளத்திலே ஊற்றெடுக்கிறது. குறளிலேயே எனக்கு மிகவும் விருப்பமான அதிகாரம் 'அன்புடைமை' தான். அன்பின் எல்லையை மிகவும் நேர்த்தியாக இங்கே கூறிவிட்டார். இவற்றைப் படிக்கும்போது உள்

ளம் உருகி அன்பு ஊற்றெடுக்கிறது. இந்த மூன்றாவது குறளைப் பார். நமது வாழ்க்கையே இந்தக் குறளில் அடங்கிவிட்டது. அன்பினால் உயிர் உடம்போடு பிணைக்கப்பட்டிருக்கிறது என்கிறார் தமிழ்த் தந்தை. என் வாழ்வும் அப்படித்தான். நீயில்லையெனில் நானுமில்லை. உனது அன்பினால்தான் நான் வாழ்கிறேன். இன்று நான் அடைந்திருக்கும் நன்னிலை உண்மையாகவே எதிர்பார்க்காதது. என்னை நேசிப்பாயோ என்று முதலில் நான் சந்தேகப் பட்டதுண்டு. காரணம், நான் ஏழை. ஏழை வெறுக்கப் படுவது முதலில் சுற்றத்தார்களால்தான். ஆனால், ஆருயிர் என் போடியைந்த தொடர்பாக ஆக்கிவிட்டாய் நீ நம்மிருவருடைய வாழ்க்கையையும். வாழ்நாள் முழுதும் நாம் இப்படியே வாழவேண்டுமே என்று ஏங்குகிறேன்," என்று பெருமூச்சோடு முடித்தார். அவர் எழுப்பிவிட்ட உணர்ச்சி அலைகள் என்னை எங்கோ கொண்டு போய் விட்டன. அதனால் என் மௌனம் கலையாமலேயே இருந்தது. "ஏன், ஒருமாதிரியாக இருக்கிறாய்? தப்பிதமாக ஏதாவது சொல்லிவிட்டேனா, ரஞ்சிதம்?" என்றவாறே கவிழ்ந்தபடியிருந்த என்னை நாடியைப் பிடித்து உயர்த்தினார். "இல்லை, அத்தான். அன்புலகிற்கே என்னைக் கொண்டு சென்றுவிட்டீர்கள். உங்களுடைய உள்ளத்திலே சுரந்து நிறகும் ஆசையே என்னுடைய உள்ளத்திலேயும் அனுதினம் பொங்கி எழுகிறது. மலிபெயர் கலித்த பித்தகம் போன்று உங்களுடைய அன்பு மழையினால் இன்று மலர்ந்து மணம் வீசுகிறேன்—ஆசை மலராக. இந்த மலரை மாலையாக அணிந்துகொள்வது உங்களுடைய பொறுப்பு"—என்றேன் ஆனந்தக் கண்ணீரோடு. ஆனால் நடந்தது...?

முன்பின் தெரியாத சேகரை மணந்தேன். சேகரனின் பணமும், அழகும் பெற்றோர்களைக் கவர்ந்தன. பூவிற்கு ஏற்ற நார் என்றார்கள். மனம் மாறிய பெற்றோர்கள் என்னையும் மாற்ற "சேகரனுக்கு இலட்சக் கணக்கிலே சொத்து இருக்கிறது. ஒரே மகன் உன்னைப் போல. அவனை மணந்து கொண்டால் இளவரசியைப்போல் வாழலாம். அரசப்பன் ஆண்டி. சரியான உடைகூட அவனால் உனக்குக் கொடுக்க முடியாதே. நல்ல வாழ்வை அடைய வேண்டுமானால் எங்கள் சொல்லைத் தட்டாதே," என்று ஒவ்வொரு வேளையும் உபதேசித்தார்கள். 'எறும்பு ஊரக் கல்லும் தேயும்' என்றாகிவிட்டது. பணத்திற்கு அடிமையானேன். மாடப் புறாக்களாக மகிழ்ச்சி வானிலே பறந்துதிரிய வேண்டுமென்று கூறிய அரசப்பரை ஏழையென்று ஒதுக்கிவிட்டேன். கரும்பு தந்த தீஞ்சாறே என்றவரிடம் கட்டி இரும்பு தந்த நெஞ்சுடையவளாக இருந்துவிட்டேன். உடலியக்கும் நல்லுயிரே, உயிரியக்கும்

ராமுலு
இங்கிலீஷ் ஆசான்
ENGLISH SELF TUTOR
ஓர் சிறந்த புத்தகம்
உபாத்தியாயர் உதவியின்றி தானே எழுத வாசிக்கக் கற்றுக்கொள்ளத்தக்க முறையில் அகரவாரியாகத் தொகுக்கப்பெற்ற நூல்
சாதா பதிப்பு விலை ரூ 1-8-0 | 168 பக்கங்கள் | அட்டை பைண்டு விலை ரூ 2-0-0
ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை-1

தூண்கலையே என்று போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்தவரிடம் கெட வியக்கும் நெஞ்சுடையவளாக நடந்துகொண்டேன். பழகிலவே என்றழைத்தவர்க்குப் படுமோசம் செய்துவிட்டேன். இன்ப வானிலே இசைபாடித் திரியும் மாடப் புறாக்கள் ஒன்றையொன்று ...சிப்பதில்லையே! எனது ஆருயிர் சிநேகிதியென்று சொல்லித் திரிந்த மடலழகி மாலதி அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து போய்க் கொண்டு அரசப்பரைத் தன் வலையில் சிக்கவைக்க என்ன பாடு பட்டாள். "மாலதியை இனிமேல் வீட்டிற்குள் பார்த்தால் முதலில் நான்தான் இந்த வீட்டைவிட்டுப் போகப்போகிறேன்; அவளுடைய நடத்தை எனக்குப் பிடிக்கவில்லை, ரஞ்சிதம்," என்று எவ்வளவு நாசுக்காகவும், கண்டிப்பாகவும் தன் வெறுப்பை என்னிடம் வெளியிட்டார். ஆனால் நான்......?

மகிழ்ச்சியான வாழ்வு கிடைக்குமென்றுதான் சேகருக்கு மாலை சூட்டினேன். ஆனால் அவர் சூழ்ச்சிக்காரர் என்பதை வெகு சீக்கிரத்தில் உணர்ந்துவிட்டேன். சேகரன் ஒரு வண்டு; அவருக்கு எத்தனையோ மலர்களிருந்தன. அந்த மலர்களிலே கற்பனைக் களஞ்சியமாம் என் அரசப்பரை மயக்க முயற்சித்த மாஜித்தோழி மாலதியும் ஒருத்தி. சூடியமலர் வாடியவுடனே தூக்கியெறியப் படுகிறதல்லவா? எனது இளமையை ருசிக்க விரும்பினார் சேகரன், மலரிலிருக்கும் தேனை உறிஞ்சவரும் வண்டைப்போல. ருசித்தாய்விட்டது. தாவிவிட்டார் அடுத்த மலருக்கு. "கீழ்மையிலே உடல் வளர்ப்பார் பொருள் படைத்தோன்," என்பது உண்மையாகிவிட்டது. குயில் கூவிக் களிக்க வேண்டிய சோலையிலே கோட்டான் கொட்டமடித்து விட்டது. மந்தி கையிலே சிக்கிய பூமாலையாகிவிட்டேன். கணவராக வந்தவர் கணிகையர் காலடியில் கிடந்தார். பெற்றோர்கள் நல்வழி காட்டுவார்கள் என்று நம்பித்தான் சேகரனை மணந்தேன். ஆனால் அழிந்த ஓவியமாகிவிட்டது என் வாழ்வு. அன்னையும் மெலிந்துவிட்டாள். அப்பாவும் உலகிற்கஞ்சி வீட்டோடு ஒடுங்கிவிட்டார். என்னுடைய ஜீவனும் ஒடுங்கிக்கொண்டேயிருந்தது. அப்படியானால் அரசப்பர்...?

இடைக்கலைப் படிப்பை முடித்துக்கொண்டு ஊருக்குப்போனவர் அரசாங்க வேலையொன்று கிடைக்கப் பெற்றுக் கண்ணுக்கெட்டாத தூரத்திற்குப் போய்விட்டார். எனது திருமணத்திற்கு மாமிகூட வரவில்லை. தனித்து வாழும் மாமிக்கு மாதமிருமுறை கடிதமும் ஒருமுறை பணமும் அனுப்புவாராம். இதை என் தோழி அல்லி ஊரிலிருந்து எழுதியிருந்தாள். இருண்டுபோன என் வாழ்க்கையை நினைத்து மாமி அல்லியிடம் அடிக்கடி அழுவார்களாம். சாந்தமே உருவான என் மாமியைக்கூடக் காணக்கூடாத நிலையைப் பெற்றுவிட்டேன். "ரஞ்சிதம்! அரசப்பனிடம் எவ்வளவோ பிரியமாக இருக்கிறாய். உன் அம்மாள் வெறுத்தபோதிலும் நீயாவது இந்த ஏழைகளை ஆதரிக்கிறாய். நீயே எனக்கு மருமகளாகவும ஆகிவிட்டால் உங்களிருவரையும் பார்த்துக்கொண்டே என் காலத்தைக் கழித்துவிடுவேன். ஆனால் உன்னம்மாள் சம்மதிக்க வேண்

டுமே! முட்டங்கள் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதைப் பார் என்று இடித்துரைப்பாளே!"— என்று என்னைக் கட்டித்தழுவியவாறு மாமி கண் கலங்கியது இன்னும் என் மனத்திரையிலிருந்து மறையவில்லையே. என் வாழ்வுதான் இப்படியென்றால் அத்தானுடைய வாழ்வாவது மலரவில்லையே. உள்ளூரிலேயே மிராசுதார் ஒருவர் பெண் கொடுக்க முன் வருவதாகவும், ஆகையால் திருமணத்தைச் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்றும் மாமி எழுதியதற்கு, "அம்மா! நாம் ஏழைகள்; இன்பத்தை விரும்பக் கூடாது, மானத்தோடும், மதிப்போடும் வாழவேண்டுமானால்? நாம் ஏழைகள் உலகில்தானிருக்க வேண்டும். இதை மறந்துவிடாதே"—என்று அத்தான் பதில் எழுதிவிட்டாராம் இதை அல்லி எங்கள் ஊருக்கு வந்திருந்தபோது சொன்னாள். அரசப்பர் உணர்ச்சி மிகுந்தவர். கடந்த கால எங்கள் தொடர்பை நினைத்துத் துயரக்கடலிலே மிதக்கின்றார் என்பதையே இந்த வாசகங்கள் விளக்குகின்றன.

சேகரன் எனக்குச் செய்த கொடுமைகளைப் பார்க்கிலும் அரசப்பருக்கு நான் செய்த கொடுமை மிகவும் இரக்கமற்றது. நானே அதையே நினைத்துப் பொருமுகிறேன். அதனால் என் உடல் இளைத்துத் துரும்பாகிவிட்டது. மெலிந்துபோன என்னுருவைக் காணும்போதெல்லாம் பைங்கிளியைப் பலியிட்டு விட்டோமே யென்று அம்மாள் பதறி அழுகிறாள். மேலும், சேகரன் ஒரு நாடகக்காரியோடு சேர்ந்து குடித்துவிட்டுக் கூத்தடிக்கும் போது போலீஸாரால் கைது செய்யப்பட்டு இரண்டுவருடத் தண்டனையும் பெற்றுக் காராக்கிரகத்தில் இருக்கிறார், என்ற செய்தி வேறு பெற்றோர்களையும் என்னையும் வாட்டிவிட்டது. அமைதியே

---


## தளபதி




**விருதை ந. இராமசாமி**

தளபதி தன் சேனையினை எவ்விதம் தலைமைதாங்கி வெற்றி பெற்று வீறுகொண்டு விளங்குகிறான் என்பதை இதில் விளக்குகிறார் பக்கத்துக்குப் பக்கம் பகுத்தறிவு மணம் பதத்திற்குப் பதம் புரட்சிக் கனல் இவைகள் நிரம்பிய மறுமலர்ச்சி ஏடு. வாங்குங்கள் ! படியுங்கள் !

விலை ரூ. **1—0—0**

**முன் பணம் அனுப்பினால் தபால் செலவு இனம்.**

விபரங்களுக்கு:

**கலைமன்றம் — சென்னை - 1**

இடைக்காதோ என்று ஏங்கினேன். அப்போதுதான் அல்லி ஊருக்கு வந்து கொஞ்சம் துக்கத்தைப் போக்கிவிட்டு, அத்தையையும் பார்த்துவிட்டுப் போகும்படி கடிதம் எழுதியிருந்தாள். அத்தானும் பக்கத்திலில்லாததால் என்னைக் கண்டாவது மன ஆறுதலடையட்டுமே மாமி என்ற முடிவோடு அப்பாவிடம் அனுமதிகேட்டேன். அப்பாவும் அனுமதி தந்தார், அப்படியாவது சிறிது உற்சாகமாக இருக்கட்டுமேயென்று.

நான் வந்த சில நாட்களுக்குள் மாமியும் அத்தானின் பிரிவை மறக்க முயற்சித்தார்கள். வேடிக்கையாகப் பேசும் அல்லி எனது மனக் கவலையைப் போக்குவதற்கென்றே மிகவும் வேடிக்கையாகப் பேசி என்னையும் மாமியையும் சிரிக்க வைத்துவிடுவாள். நேரம் ஊர்ந்து கொண்டிருந்தது போய், நடந்து செல்வதாகப்பட்டது. எனினும், செழித்துச் சிறப்போடு இருக்கவேண்டிய இரண்டு குடும்பங்களும் சிதறுண்டு சீரழிவுப் பாதையிலே போய்விட்டதே என்பதை என்னால் மறக்க முடியவில்லை. அத்தானின் திருமுகத்தைப் பார்த்தும் எத்தனையோ காலமாகிவிட்டன. சேகரன் கணவர்; ஆனால் கயவனாகிக் கைதியாகக் காலங் கழிக்கிறார். கணவன் என்று சொல்லிக் கொள்ளவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. மனமும் வெறுத்துவிட்டது. அன்பரின் வாழ்வையாவது மலர வழி வகுத்து விட்டாலாவது நிம்மதியாக மரிக்கலாமே என்று ஏங்கினேன். இவ்வாறு ஏங்கும்போதெல்லாம் தோழி அல்லியையும் அரசப்பரையும் மனக் கண்ணில் தம்பதிகளாக நிறுத்திப் பார்ப்பேன். அல்லிக்கும் அத்தானின் மேல் விருப்பம் என்பதை நான் இங்குவந்த சில தினங்களிலேயே புரிந்துகொண்டேன். அதனால் தான் இருவரையும் மணப் பந்தலிலே காண என்னுள்ளம் துடித்தது. "அழகும், அதற்கேற்றாற் போன்ற நற்குணங்களையுமுடைய அல்லியை விரும்புவாரா? மணமே வேண்டாம் என்கிறாரே! ஏன், நானே கெஞ்சி அவருக்குக் கடிதம் எழுதக்கூடாது? அப்பொழுதாவது மனம் மாறமாட்டாரா?"— என்ற முடிவுடனே அரசப்பருக்குக் கடிதம் எழுதினேன். பதினைந்து தினங்கள் கழித்துப் பதில் வந்தது. தன் கையில தபால்காரன் கொடுத்ததாக வஞ்சனையிலா உள்ளத்தோடு அல்லி என்னிடம் கொண்டுவந்து கொடுத்தாள் கேலிப் புன்னகையோடு. மாமியும் பக்கத்திலிருக்கிறார்களே என்பதை

## வேண்டுகோள்

கடந்த ஓரிரு மாதங்களாக உடல் நலமின்றி இன்னல் படுகின்றேன். எனவே ஒப்புதல் தந்த கூட்டங்களில்கூட கலந்துகொள்ள இயலாமல் எதிர்பாரா நிலையில் உடல் நிலை கெட்டுவிடுகிறது. இதனால் நண்பர்களின் அதிர்ச்சிக்கும் ஆளானேன். இன்னமும் மூன்று மாதங்கட்கு சொற்பொழிவாற்றும் நிலையில் நான் இல்லை. ஆகவே நண்பர்கள் ஓய்வு பெற அனுமதிக்குமாறு வேண்டுகிறேன். பொதுக்கூட்ட அழைப்புகளை ஏற்க இயலாமைக்குப்பொறுத்தருள்க.

சென்னை-1
**21-6-55**

அன்பன்,
**விருதை ந. இராமசாமி**

யும் கவனியாமல், "ரஞ்சிதம்! கடிதத்தை வாசிக்கும்போது நான் பக்கத்திலிருக்கலாமோ? ஒருவேளை இருவருடைய சொந்த விஷயமாக இருக்கலாமல்லவா?" என்று வேறு அல்லி குத்தலாகக் கேட்டாள். "போடி! அதிகப்பிரசங்கி. பிறன் மனைவியை விரும்பும் வீணரல்ல அத்தான்," என்று பதில் சொல்லிக் கொண்டே கடிதத்தைப் பிரித்து வாசித்தேன் அத்தைக்கும் கேட்கும்படியாக.

ரஞ்சிதம்!

அம்மாவுடன் தங்கியிருக்கிறாய் என்பதை உன் கடிதத்தின் மூலம் அறிந்தேன். வளமிழந்த உனது வாழ்க்கை என்னை வாட்டி வதைக்கிறது! நீயாவது சந்தோஷமாக இல்லையே! எனினும் தைரியமாக எனக்கு மணமுடிக்க முயல்கிறாய். அல்லி உனக்கு உயிர்த் தோழி; என்னுடைய அனுதாபத்தையும் பெற்றவள் தான். ஆனால் பெண்களுக்குத்தான் கற்பு கண்போன்றது; ஆண்களுக்குத் தேவையற்றது என்பது உனது முடிவுபோலும்! என் உள்ளத்தில் ஒருத்திக்குத்தான் இடம் தந்தேன். ஆனால் இதயம் இருண்டு எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன. அந்த இதயமும் இன்று காசநோய்க்குப் பலியாகிவிட்டது. மரணத் தாய் என்னைத் தாலாட்டிக் கொண்டிருக்கிறாள். ஆகையால் அம்மாவையும் உன் பெற்றோர்களோடு வைத்துக் கவனித்துக் கொள்வது இனி உன்னுடைய பொறுப்பு. அதோடு, சேகரன் மனம் திரும்புவானானால் ஆவலோடு ஏற்றுக்கொள். உன் அத்தான் உன்னுடையவனாகவே இருந்துவிட்டு மடிகிறேன்.

வணக்கம்.

"அத்தை! அருமை அத்தான் போய்விட்டாரே! இந்தப் பாவி குலக்கொழுந்தைக் கொன்றுவிட்டேனே!! அத்தான்! அ...த்...தா...ன்!!" என்று அலறித் துடித்தேன். அல்லியும் விம்மினாள். ஆனால் மாமி அழவுமில்லை; அசையவுமில்லை. சுவரில் சாய்ந்து உட்கார்ந்தபடியே யிருந்தார். கண்களும் திறந்தபடியிருந்தன. இரண்டுதுளிக் கண்ணீர் மட்டும் மேலே மிதந்து கொண்டிருந்தன. ஆனால், தொட்டு எழுப்பும்போது தான மகனின் மரணச்செய்தி மாதாவையும் கொண்டு சென்றுவிட்டது என்பதை உணர்ந்தோம். "ஊனையும், உணர்வையும் தாண்டி அப்பால் தொடரும் அன்பே காதல்; காதல் முறிந்தால் சாதலும் கருதும்" என்ற அடிகளை வாய் என்னையறியாமலேயே முணுமுணுத்தது.

என்னைத்தேடி வந்த அல்லி தெரியாமல் பின்புறமாக வந்து நின்று எனது கூந்தலிலே ஒற்றை ரோஜாமலரைச் செருகிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். முன்போலவே அந்த இரண்டு அணில் பிள்ளைகளும் என் முன்னால் இருந்த மரத்தின் கிளைகளிலே ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தன. சுரந்து நிற்கும் அன்பை முத்தங்களாகச் சொரிந்தாள் அல்லி.



ஆச்சாரியாரின் அரசியல் துறவுக்குப் பிறகு நிகழ்ந்த "அரிய" நிகழ்ச்சிகள்!!

(1) அணுவால் அதிர்ச்சி (2) பேச்சாலடி (3) அரசியல் புது ஸ்டண்ட் (4)மருத்துவ 'மன்னர்'—சங்காஸ் வீக்லி

7 AUG 1956

7 - AUG 1958

# நம்பிக்கையின் நட்சத்திரம்

கே. ஏ. அப்பாஸ்

பார்வைக்கு எட்டிய தூரம் வரையில், கடற்கரை ஓரமாக எண்ணிக்கையிலாத் தென்னை மரங்கள் கூட்டம் கூட்டங்களாக வளர்ந்திருந்தன. கதிரவன், வெகு தூரத்திற்கு அப்பால், சமுத்திரத்திலே அஸ்தமித்துக் கொண்டிருந்தான். வானத்திலே பலவித வர்ணங்கள் கொண்ட மேகங்கள் மிதந்து கொண்டிருந்தன. செந்தீயைப் போன்ற பிரகாசம் கொண்ட மேகங்களும், மரணத்தைப் போல் கருமையுடைய மேகங்களும், தங்கத்தைப் போன்ற மஞ்சள் நிறக் காந்தியும், இரத்தத்தைப் போலச் செந்நிற தேசும் கொண்ட மேகங்களும்—மிதந்தவாறு, இடப்பெயர்ச்சியில் ஈடுபட்டிருந்தன.

திருவிதாங்கூர் கடற்கரை, தனது இயற்கை எழிலுக்காக உலகெங்கும் புகழப்படுகிறது. வெகு தூரம்வரை, மைல் கணக்கிலே, சமுத்திர நீர் பூமியை அறுத்து வாய்க்கால்கள் போலவும் ஆறுகவும் பெருகி இருப்பதும், சிற்சில இடங்களில் குளங்களாகத் தேங்கி இருப்பதும் இன்பந் தரும் காட்சிகளாக அமைந்திருக்கின்றன. அந்நேரத்தில் நானும் அக காட்சிகளைக் கண்ணுற்றுக் களிப்படைந்தேன். சமுத்திரம் நிலைக்கண்ணாடியைப் போல ஆடாமல் அசையாமல் இருந்தது. ஆனால் மேற்கிலிருந்து வீசிய மெல்லிய காற்று—சிறு குழந்தை ஒன்றின் உதடுகளிலே புன்னகை தவழுவது போல்—கடலின் மேற்பரப்பில் பல சிறுசிறு அலைகளைத் தோற்றுவித்தது. வெகு தூரத்தில் மீன் பிடிப்போரின் குடிசைகளிலிருந்து புல்லாங்குழலின் இனிய நாதம் எழுந்து கொண்டிருந்தது. எனினும் எங்கும் நிசப்தமே நிலவி இருந்தது.

எனது படகோட்டியும் மயக்கத்தி லாழ்த்திடும் இச் சூழ்வனத்தில் மூழ்கி விட்டவன் போலத் தென்பட்டான். எங்கள் படகு தென்னைமரக் கூட்டங்களை விட்டுத் திறந்த சமுத்திரத்தை அடைந்ததும் அவன் துடுப்புகளை அசைப்பதை நிறுத்தி விட்டான். சமுத்திரத்தைப் போலவே அவனும் அமைதியுற்று இருந்தான். இப்பொழுது படகு வேகமாக முன் நோக்கிச் செல்லாமலும், பின்னால் தள்ளப்படாமலும் அசைந்தவாறு மிதந்து கொண்டிருந்தது. சூழ்நிலை அழகு மிதந்ததாகவும், சொப்பன மயமாகவும், நிசப்தமுள்ளதாகவும் இருந்தது. ஒரு சிறு அசைவோ அல்லது ஒரு சிறு சப்தமோ அப்பொழுது நன்றாக ஒலித்திருக்க முடியும். படகோட்டி மௌனமாக அஸ்தமிக்கும் கதிரவனது செந்நிறக்

கிரணங்களை நோக்கினான். நானும் ஒன்றும் பேசவில்லை. காற்றும் தனது சுவாசத்தை அடக்கிக் கொண்டிருப்பது போல்தோன்றிற்று.

சமுத்திரம் ஆழ்ந்தசிந்தனையில் மூழ்கிஇருந்தது. உலகமும்சுற்றுவதை நிறுத்திக் கொண்டது... நான் திரும்பிப் பார்த்தேன். கோயிலோன் நகரை விட்டு நாங்கள் வெகுதூரம் வந்து விட்டிருந்தோம். இப்பொழுது கடற்கரையில் பரவியிருந்த தென்னை மரங்களும் கண்களுக்குப் புலப்படவில்லை. வெகு தூரத்திலிருந்து வந்தபுகைவண்டியின் ஊதும் சப்தம்வேறுலோகத்திலிருந்து வந்தது போல தோன்றியது. நாம் இந்தச் சிற்றோடத்தில் மிதந்தவாறு ஒருபுதுஉலகை அடைந்துவிட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் நாகரிகம் மிகுந்த விஞ்ஞான முன்னேற்றமடைந்த உலகை விட்டுப் பகுத்தறிவில்லாத சக்தியற்றமனிதன் இயற்கையின் முன்பு தலைகுனிந்தவாறுநின்ற பழமை மிகுந்த கர்நாடக காலத்திற்கு வந்துவிட்டோம்-இங்கு சமுத்திரம் ஆழமாகவும், வானம் உயரமாகவும் இருந்தன. இவைகளுக்கிடையில் சிறிய, சக்தி யில்லாத சலங்கொன்று ஆடி அசைந்து கொண்டிருந்தது—கருமை நிறப் படகோட்டியும், மனிதன் படகு செலுத்த முதன்முதலில் கற்றுக் கொண்டகாலத்திலிருந்து வந்துவிட்டவன் போலக் காட்சியளித்தான.

செந்நிறக் கிரணங்களுடைய கதிரவன், சமுத்திரத்தின் மேற்பரப்பில்ஒருவிநாடிக்காகத் தாமதித்துச் சிறிது சிறிதாகக் கடலில் மூழ்கி விட்டான். அதன் கிரணங்கள் மேற்கில் ரமணீயமான சிவந்த நிறத்தைப் பரவச் செய்து மறைந்தன. சிறிது நேரத்திற்குப் பிறகு மரணத்தின் நிழல் போன்று, அந்தகாரம் எங்கும் பரவியது.

அடர்ந்த இருள் என்னைத் திகிலுறச் செய்தது. நான் படகோட்டியைக் கோயிலோன் நோக்கித் திரும்புமாறு உத்தரவிட நினைத்தேன். ஆனால் நான் கண்ட காட்சி! என் கண்கள் ஆச்சரியத்தால் அகன்றன. நான் வியப்புற்றேன். அந்தக் காட்சியே விநோதமாக இருந்தது. சமுத்திரத்திலே வெகு தூரத்தில் ஒரு தீபம் மிதந்து கொண்டிருந்தது.

“அஃது என்னவோ?” என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

அவனே திரும்பிப் பாராமலேயே, “இன்னும் சற்று நேரத்தில் நீங்களே கண்டு அறிவீர்கள்,” என்றான். இங்ஙனம் கூறுகையில் அவன் குரலிலிருந்த நடுக்கத்தை என்னால் நன்கு உணர முடிந்தது.

உண்மையில் படகோட்டியே ஒரு விசித்திர மனிதனாக விளங்கினான். அவனை இளைஞனென்றோ, கிழவனென்றோ எளிதில் கூறிவிட முடியாது. திருவாங்கூரில் அனைவரும் சிறிது ஆங்கிலம் பேசும் வல்லமை பெற்றிருக்கிறார்கள்! அவனால் நல்ல இந்துஸ்தானியும் பேச முடிந்தது. நான் அவனது படகைத் தேர்ந்தெடுத்ததற்கு முதற் காரணம் அதுவே. மேலும் நான் மக்களால் நிரம்பிய பெரிய பெரிய படகுகளில் உல்லாசப் பிரயாணம் செய்யவும் விரும்பவில்லை.

நான் தனிமையும் அமைதியும் விரும்புகிறேன். இடைவிடாமல் எப்போதும் பேசும் வழக்கமுள்ள படகோட்டி எவனேனும் கிடைத்து விட்டிருந்தால் எனது பாடும் திண்டாட்டமும் சொல்லி இருக்க முடியாது. உல்லாசப் பிரயாணத்தில் தலைவலிதான் பெற்றிருக்க முடியும்—"ஐயா! அதோ பாருங்கள். அதோ தெரிகிறதே அதுவே தான் லைட்ஹவுஸ். ஐயாவுக்கு எந்த ஊரோ? ஐயா! இன்னும் எத்தனை நாட்கள் இங்கு தங்குவீர்கள்? எப்போது ஊர் திரும்பப் போகிறீர்கள்? மனைவி மக்களை அழைத்து வரவில்லையோ......" என்று நச்சரித்துக் கொண்டே இருப்பான்—ஆனால் இந்தப் படகோட்டியோ என்னைப் போலவே அமைதியை நாடினன். ஒரு மணி நேரத்தில் அவன் வாயிலிருந்து மூன்று அல்லது நான்கு வாக்கியங்கள் வெளிப்பட்டிருக்கலாம். அவன் மௌனமாகப் படகைச் செலுத்திக் கொண்டிருந்தான். நான் சிந்தனையில் மூழ்கி இருநதேன். இவனே அவ்வளவு வயது முதிர்ந்தவனாகத் தெரியவில்லை. ஆனால் முகத்தில் முதுமை ரேகைகள் படர்ந்திருந்தன. அவனது ஆழமான கண்களில் சோகம் பிரகாசித்தது. அவன் மௌனமாக இருக்கிறன். ஏன்? வாழ்க்கை அலுத்து விட்டது போலும். உலகத்திலுள்ள எல்லா இன்பங்களையும், இன்னல்களையும் சகித்து விட்டான் போலும். இப்பொழுது அவன் துயரமோ, மகிழ்ச்சியோ உணர்ந்தறியா நிலையை அடைந்திருந்தான்—

நான் மிதந்து கொண்டிருந்த விளக்கைப் பற்றி வினவினேன். அவன் திரும்பிப் பார்க்காமலேயே, "நீங்களே தெரிந்து கொள்வீர்கள்," என்றான.........நான் ஒரு அற்புதத்தைச் சுட்டிக் காட்டுகிறேன் என்பதை முதலிலேயே தெரிந்து கொண்டவன் போல. அவன் இருள் சூழ்ந்த சமுத்திரத்திலே அந்த ஒளி மிதந்து கொண்டிருந்த திக்கை நோக்கிப் படகைச் செலுத்த ஆரம்பித்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு நான் இன்னொரு படகு சமுத்திரத்திலே மிதந்து வருவதைக் கண்டேன். அதில் ஒரு மங்கை வீற்றிருந்தாள். அவள் பக்கத்திலே ஒரு விளக்கு வைக்கப்பட்டிருந்தது. இரவிலே, அதுவும் இருள் சூழ்ந்த சமுத்திரத்திலே அவள் எங்கு செல்கிறாள்? எதற்காகப் போகிறாள்? அது உண்மையில் படகு தானா? அல்லது இருளில் சூன்யமுள்ள பிரதேசத்தில் உருவான கற்பனையா?

அவள் எங்களைப் பார்த்துவிடக்கூடாதென எங்கள் படகை, அவள் படகுக்கு அருகில் அணுக விடாமல், தூரத்திலேயே இருக்கச்செய்தான் படகோட்டி. நாங்கள் இருளில் மறைந்து இருந்தோம். ஆனால் அவள் படகில் விளக்கு இருந்ததால், நாங்கள் அவளை நன்றாகப் பார்க்க முடிந்தது. அந்த ஒல்லியான தேகம் படைத்த பெண் ஓர் அழுக்கடைந்த புடவை அணிந்து கொண்டிருந்தாள். அவள் புடவைத் தலைப்பு நீண்டு இருந்ததால் அவள் முகத்தைக் காண முடியவில்லை. அவள் படகு சமுத்திரத்தின் நடுவில் ஓர் இடத்தில் நின்று விட்டது. அங்கு கடலில் மூழ்கி இருந்த மாமொன்றின் உச்சிக் கிளை நீர் மட்டத்திற்கு

……எனக்கு என் நாட்டில் இசைக்கப்படும் "தீபம் இரவு முழுவதும் எரியட்டும்" (தயா ஜலே சாரி ராத்) எனும் பாடல் நினைவுக்கு வந்தது. என் நாட்டிலும் மங்கையர் இதே சமயத்தில் அதனைப் பாடுவார்கள். என்ன!— உலகம் முழுவதிலும் மங்கையரின் இருதயங்களிலிருந்து ஒரே வித ஒலியா கிளம்புகிறது?!! … …

மேல் வளர்ந்திருந்தது. சமுத்திரத்திலே சிறு சிறு தொலைவில் இவ்வித உச்சி மரங்கள் பல காணபபட்டன. ஆனால் அந்த உச்சி மரத்தில் மட்டும் ஒரு சிறு லாந்தர் விளக்குக் கட்டப்பட்டிருந்தது. அந் நங்கை அதில் எண்ணெய் ஊற்றி அதை ஏற்றினாள். விளக்கின் ஒளியில், நான் அவளது முகத்தைக் காண முடிந்தது. இப்போது புடவைத் தலைப்பு நகர்ந்து விட்டது. அந்த முகம் இன்றும் எனக்கு ஞாபகத்தில் இருககிறது. நான் அதனை மறக்கவே முடியாது. மஞ்சள் நிற முகம், எழிலை இழந்து விட்ட கன்னங்கள், ஆழமாகப் பதிந்து விட்ட கண்கள், விரிந்த தலைமயிர், தூசி நிறைந்த கைகள்—அவள் விளக்கு ஏற்றும் போது பலவீனத்தால் நடுங்கின. ஆனால் விளக்குப் பிரகாசித்ததும், அவள் முகமும் மனதில் தோன்றிய பிரகாசத்தினால் பொலிவு பெறறது. அவளது மெல்லிய உதடுகளில் புன்னகை தோன்றியது. கணகளில் புதுமையான ஒளி மின்னிறறு. நம்பிக்கையின் ஜாதி—தனது காதலனை விட்டுப் பிரிந்து, காதலனின் வருகையை எதிர் நோக்கும் காதலியின் கண்களில் தோன்றும் ஒளி!

அவள் தனது காதலனை எதிர் நோக்குகிறாள் எனும் எண்ணம் உறுதியடைந்தது. அவள் தான் வந்த வழியே திரும்பினாள். நான் அவள் செல்லும் திக்கை நோக்கினேன். தூரததில், நட்சத்திரங்களின ஒளியில் மீன் பிடிப்போரின் குடிசைகள் மங்கலாகத் தென்பட்டன. அவள் கீதமொன்று இசைக்கத் தொடங்கினாள. மலையாள மொழியிலிருந்த அந்தப் பாடலை இதற்கு முன்பு ஒருமுறை செவியுற்றது போன்ற உணர்வு ஏற்பட்டது.

"அவள் என்ன பாடுகிறாள்?" என வினவினேன் நான்.

படகோட்டி பதிலளித்தான்: "ஐயா! அது நமது மக்களின் பழைய பாடல். மங்கையர் தங்கள் காதலர்களின் வருகையை எதிர் நோக்கும் சமயம் பாடுகிறார்கள். 'இரவு முழுவதும் தீபம் ஏற்றிய வாறு உனது வரவினை எதிர் நோக்குகிறேன். நீ எப்போது வருவாய் அன்பே,' எனும் கருத்துடையது."

எனக்கு என் நாட்டில் இசைக்கப்படும், 'தீபம் இரவு முழுவதும் எரியட்டும்,' (தயா ஜலே சாரி ராத்) எனும் பாடல் நினைவிற்கெட்டியது. என் நாட்டிலும் மங்கையர் இதே சமயத்தில் அந்தப் பாடுவார்கள். என்ன! உலகம் முழுவதிலும் மங்கையரின் இருதயங்களிலிருந்து ஒரே வித ஒலியா கிளம்புகிறது?!!

நான் சிந்தனை செய்தவாறு படகோட்டியிடம் மொழிந்தேன்: "தனது காதலன் இரவில் வழி தவறிவிடக் கூடாதென அவள் இங்கு விளக்கு ஏற்றினுள் போலும்."

படகோட்டி ஒன்றும் பதிலளிக்கவில்லை.

நான் மீண்டும் வினவினேன். "அவள் காதலன் இன்றிரவு இங்கு வரப் போகிறுனு?"

எங்கும் அந்தகாரம் நிறைந்திருந்தது. இருளிலே படகோட்டியின் குரல் ஒலித்தது. அக் குரலில் வேதனை நிறைந்திருப்பதை என்னுல் உணர முடிந்தது. "இல்லை. அவன் வரமாட்டான். இன்றிரவோ, நாளை இரவோ அவன் வரமுடியாது. அவன் இறந்துவிட்டான். அவன் மரணமடைந்து பல ஆண்டுகள் கடந்து விட்டன."

என்னுல் ஒன்றும் அறிந்து கொள்ள முடியவில்லை. எனக்கு ஆச்சரியம் மேலோங்கியது. "அவளுக்குத் தனது காதலன் இறந்துவிட்டான். அவன் என்றுமே திரும்ப முடியாது என்பது தெரியவில்லையா?"

"அவளுக்குத் தெரியும். ஆனுல் அவள் அதை ஒப்புகொள்ளுவதில்லை. அவள் அவனை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறுள்...... அவள் மனமோ, உறுதியோ தளரவில்லை......"

"தனது காதலனின் படகு வழி தவறிவிடக் கூடாதென அவள் பல வருடங்களாக ஒவ்வொரு இரவும் தவறுமல் விளக்கு ஏற்றி வருகிறுள்," என்று நான் மனதிற்குள் சொல்லிக் கொண்டேன். இன்று நான் கண்களால் பூரணத்துவம் பெற்ற காதலின் காட்சி

**இன்பச் சோலை**

## இனியவை

இவ்வுலகம் இனியது. இதி லுள்ள வான் இனிமையுடைத்து;
காற்றும் இனிது.
தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.
ஞாயிறு நன்று; திங்களும் நன்று.
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.
மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது.
கடல் இனிது, மலை இனிது, காடு நன்று.
ஆறுகள் இனியன.
உலோகமும், மரமும், செடியும், கொடியும், மலரும், காயும், கனியும் இனியன.
பறவைகள் இனிய.
ஊர்வனவும் நல்லன.
விலங்குகளெல்லாம் இனியவை.
நீர் வாழ்வனவும் நல்லன.
மனிதர் மிகவும் இனியவர்.
ஆண் நன்று. பெண் இனிது.
குழந்தை இன்பம்.
இளமை இனிது. முதுமை நன்று.
உயிர் நன்று. சாதல் இனிது.

—பெருங்கவி பாரதியார்.

சிற்றூரும, வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்து தந்த கைதான் யார் கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கிய மூச் செவரின் மூச்சு?

—புரட்சிக் கவிஞர்.

யைக் கண்டேன். இவ்விதக் காதலை நாம் கதைகளில் காணுகிறோம்; வாசிக்கிறோம். ஆனால் வாழ்வில் கிடைப்பது அரிது. எனது கதைத் திறன் விழிப்புப் பெற்றது. நான் ஒரு வினாவிடுத்து படகோட்டியிடம் கதை முழுவதும் தெரிந்து கொண்டேன்.

இந்தக கதை காதல் கதையாகவும், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வரலாறாகவும் அமைந்திருந்தது. 1912-ல் இந்தியா முழுவதும் புரட்சிப புயல் வீசிக் கொண்டிருக்கையில், திருவிதாங்கூர் மக்களும், மாணவர்களும், பாட்டாளி மககளும், உழவர்களும், மீன் பிடிப்போரும், படகோட்டிகளும் சுதந்திர உரிமை பெறப் போராட்டம் நடத்த மனோரதம் பூண்டு எழுந்தனர். கோயிலோனின் ஆயிரக் கணக்கான படகோட்டிகள் வேலை நிறுத்தம் செய்தனர். "சமுத்திர நீர் தங்கள் இரத்தத்தால் சிவப்பு நிறமாக்கப்பட்டாலும் நாங்கள் வேலை செய்ய மாட்டோம்," என்ற கோஷம் வானைப் பிளந்தது.

எழுத்தறிவில்லாத படகோட்டியின் குரல்வளையிலிருந்து இந்த உணர்சசி மிகுந்த வார்த்தைகள் வெளிப்பட்டதும், "படகோட்டிகளின் சார்பாக இவ்வாறு கூறியவர் யார்?" என்று கேட்டேன்.

"அவன்தான் ஐயா, அவன்தான்."

"அவன்தானா? யார் அவன்?"

"கிருஷ்ணன்தான் உரிமைக் குரலை உயர்த்தினான். அவன் நமது படகோட்டிகளின் தலைவன். அவனும் ஒரு படகோட்டி. எங்களைப் போலவே படகு செலுத்தினான். ஆனால் பள்ளியில் பயின்று கல்வியறிவு பெற்றவன் அவன். பல

வருடங்கள் திருவிதாங்கூரில் வாசம் செய்தவன். அங்கு அவன் பெரிய தலைவர்களின் பிரசங்கங்களைச் செவியுற்ருன். அவனும் ஒரு தலைவனைப் போலவே சொற்போர் நிகழ்த்துவான். அழகும், கவர்ச்சி மிகு வாலிபமும் பெற்றிருந்த அவன் தனது ராதாவைச் சந்திக்க கோயிலோனிலிருந்து இங்குவரை மூன்று மைல் தூரம் நீந்தியவாறு தினமும் வருவான்."

"கிருஷ்ணனும், ராதாவும்—ராதாவும் கிருஷ்ணனும் இது ஒரு கதையாகவே மாறிவிட்டதே," என்றேன் நான்.

"உண்மையில் அவள் பெயர் ராதா அல்ல. ஆனல் கிருஷ்ணன் அவளை ராதா என்று அழைத்ததால் ராதா என்ற பெயரே நிலைத்து விட்டது. படகோட்டிகள் அனைவரும் ராதா—கிருஷ்ணன் போன்ற அழகான ஜோடியைக் காண முடியாது என்பர். அவர்கள் இருவருக்கும் திருமண நிச்சயம் நடைபெற்ற சமயம் எல்லோரும் மகிழ்ந்தனர். ஆனல்... ......" அவன் தனது பேச்சை நிறுத்திக் கொண்டான். எங்கும் பரவியிருந்த நிசப்தத்தில் துடுப்புகள் அசைவுறும் சப்தம் மட்டும் கேட்டது.

"ஆனல்..." நான் அவனை வினவுபடுத்தினேன்.

"ஆனல் ராதாவை மணக்கத் திட்டமிட்டிருந்த ஒருவன் மட்டும் அன்று மகிழவில்லை!" என்று கூறிவிட்டு அவன் மீண்டும் மௌனம் சாதித்தான்.

"இந்த ராதா......" நான் உரையாடலுடன் கதையை வளர்க்க விரும்பினேன். "ஏழெட்டு ஆண்டு



இருட் காடு

## மாயை

இவ்வுலகம் மாயை. இதிலுள்ளவான் மாயையாகும்; காற்றும் மாயை.

தீ தேவன். நீர் தேவன். நிலம் மடந்தை.

ஞாயிறு மாயை; திங்களும் மாயை.

வானத்துச் சுடர்களெல்லாம் உண்மையில் மாயை.

மழை மாயை, மின்னல் மாயை, இடி மாயை.

கடல் மாயை; மலை மாயை; காடு அழியும். ஆறுகள் மாயை.

உலோகமும், மரமும், செடியும், கொடியும், மலரும், காயும், கனியும் மாயை.

பறவைகள் மாயை.

ஊர்வனவும் மாயையே

விலங்குகளும் மாயையே.

நீர் வாழ்வனவும் மாயையே.

மனிதர் கொடியவர்.

ஆண் தீது, பெண் பேய்.

குழந்தை துயர்.

இளமை துயர். முதுமை சுமை

உயிர் தீது—மாயை. சாதலும் தீது—மாயை.

*

வாய்க் கால் வெட்டி வயலேயும், அதன் மூலம் நெல்லை விளைத்து அன்னமளிப்பவன் உழைக்கப்பிறந்தவன். அடிமை. தொழும்பன்.

கல்லைப் பிளந்து சுரங்கம் வெட்டித் தங்கமும், வெள்ளியும் கொண்டு வந்து அழகிய அணிகளாக்கித் தர மட்டுமே உரிமையுடையவன் அவன்.

குமுறும் கடலிலே மூழ்கி முத்தெடுத்த, அவன் என்றுமே அப்படி இருக்க இறைவனல் படைக்கப்பட்டவன்.

'யார்?'

களுக்கு முன்பு அழகாக இருந்திருப்பாள்."

அவன் ஒரு பெருமூச்சு விட்டவாறு கூறினன்: "அழகா? விவரிக்க முடியாத அழகு ஐயா! அவள் ஒரு ஒப்பற்ற அழகி! கோயிலோன் வரையில் அத்தகைய எழில் மிகுந்த பெண் இருந்ததில்லே, தென்னே அடிமரத்தைப் போன்ற ஒல்லியான உயரமான தேகம்—நீலக் கடலின் ஆழமும் சிறப்பும் பெற்ற கண்கள்—"

நாம் கதையை விட்டுக் கவிஞனைப் போன்ற வர்ணனைகளில் ஈடுபட்டு விட்டோம் என்பதை உணர்ந்தேன். இந்த வர்ணனைகளில் ரசிக்கத்தக்க அம்சம் இருப்பினும், அப்போது நான் விரும்பவில்லே. கிருஷ்ணனின் முடிவு யாதென அறியத்துடித்தேன். ஆதலின் "பிறகு என்ன நேர்ந்தது," என வினு விடுத்து உரையாடலின் போக்கை மாற்றினேன். "பிறகு நேர்ந்தது இதுவே. கிருஷ்ணனின் புரட்சிகர வீர முழக்கங்களேக் கேட்டுப் போலீஸார் அவனேப் பின் தொடர்ந்தனர். அவனேப் பிடித்துச்சிறையில்அடைக்க முயன்றனர். ஆனல் அவன் தலைமறைவாக இருந்து பணியாற்றினன்.

"போலீஸார் நாள் முழுவதும் அவனைத் தேடினர்கள். இரவுகளில் அவன் சமுத்திரத்தின் வழியே நீந்தியவாறு தனது ராதாவைச் சந்திக்கிறன். விடியுமுன்பு திரும்பி விடுகிருன் என்பதும் அவர்களுக்குத் தெரியும். எல்லோரும் போலீஸாரை, 'நமது கிருஷ்ணனேப் பிடிக்க முடியாது,' எனப் பரிகாசம் செய்தனர்."

"எல்லாப்படகோட்டிகளும்கிருஷ்ண னுடன் ஒத்துழைத்தனரா?"

"எல்லோரும் அவன் தோழர்களாக விளங்கினர்கள். அவனைத் தவிர......" மீண்டும் அவன் குரல் தடைப்பட்டது.

"யாரைத் தவிர."

"ராதாவின் காரணமாகக் கிருஷ்ணனே வெறுத்த ஒருவனைத் தவிர."


## திருமணப் பரிசுக்குரிய அரிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| தம்பதிகள் சுகமாய் வாழ்வதெப்படி? | 3 | 12 | 0 |
| திருக்குறள்—பரிமேலழகர் உரை | 5 | 0 | 0 |
| திருக்குறள் சிறப்புரை | 1 | 4 | 0 |
| முல்லேக்காடு | 0 | 8 | 0 |
| நல்ல பெண்மணி | 2 | 4 | 0 |
| இன்ப நிலா | 1 | 0 | 0 |
| புது வாழ்வு | 1 | 0 | 0 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | 0 | 12 | 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**
**சென்னே-1**

"பிறகு யாது நேர்ந்தது."

"சந்திரன் தேய்வுற்றது. இருள் நிறைந்த இரவுகளில் கிருஷ்ண னுக்கு வழி காட்ட அங்கு ராதா சிறு லாந்தர் விளக்கு ஏற்றி வைப் பாள். ஒவ்வொரு நாள் மாலையும் இன்று வந்தது போல அவள் படகில் அதே இடத்தில் வந்து நிற்பாள். விளக்கு ஏற்றி விட்டுத் திரும்புவாள்."

நான் திரும்பிப் பார்த்தேன். இருள் நிறைந்த கடலில் அந்தச் சிறிய சுடர் மின்னியது. எனக்கு மீண்டும் கிருஷ்ணன் தனது ராதா வைச் சந்திக்கக் கடல் நீரைக் கிழித்தவாறு முன் செல்வது போன்ற உணர்வு ஏற்பட்டது.

"வழக்கம் போல் அன்றும் ராதா விளக்கு ஏற்றி விட்டுத் திரும்பினாள். ஆனால் அது அணைந்து விட்டது. கிருஷ்ணன் வந்த சமயம் அவனுக்கு வழி காட்டச் சுவாலை இல்லை—ஒளி இல்லை—"

"ஏன் என்ன நடந்தது. அன்று புயல் வீசிற்றா?"

"ஆம்; அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். கடும் புயல் வீசி யது. ஆனால் அந்தப புயல் சமுத்தி ரத்தில் ஏற்படவில்லை. ஒரு வஞ்ச னையுள்ள அயோக்கியனான மனித னின் மனதில் உருவாயிற்று. அவன் தனது சமூகத்திற்குத் துரோகம் செய்தான். சுடரை அணைத்துத் தனது நண்பனின் மர ணத்திற்குக் காரணமானான்."

"ஆனால் ஒரு மனிதன் இவ்வித நேர்மையற்ற இழிவான செய் கையை எங்ஙனம் செய்ய முடி யும்?"

"காதலுக்காக—அவன் இவ் வாறுதான் எண்ணினான். அவன் காதல் கண்ணில்லாத குருடு—மூளைக் கோளாறு—ராதா கிருஷ் ணனைத் தவிர யாரையும் கண்ணெ டுத்தும் பார்க்க விரும்பவில்லை என்றறிவான் அவன்—ஆதலால் கிருஷ்ணனைக் கொலை செய்து விட்டான்."

"கிருஷ்ணன் மூழ்க வில்லையா? கொலை செய்யப்பட்டானா?"

"அன்றிரவு விளக்குச் சுடரை அணைத்தது, கிருஷ்ணனைக் கொலை செய்தது போலாகும் ஐயா! ஆனால் கிருஷ்ணனின் மரணத்தால் ஒன் றும் பலனில்லை. அந்தப் பயங்கர மான குற்றம் அவனை என்றும் நிம்மதியுடன் இருக்க விடாது, பய முறுத்திக் கொண்டே இருக்கும் என்பது அவனுக்குத் தெரியாமல் போய் விட்டது."

நமது படகு கோயிலோன் துறைமுகத்தைச் சமீபித்து விட் டது. நான் கதாபாத்திரங்களின்

ஒட்டார் பின்சென்று வாழ்தலின் அந்நிலையே
கெட்டா னெனப்படுதல் நன்று!

முடிவைத் தெரிந்து கொள்ள விரும்பினேன்.

"அன்றிரவு கிருஷ்ணன் மூழ்கி விட்டான். அதற்குப் பிறகு என்ன நடந்தது?"

"கிருஷ்ணன் இறந்ததும் படகோட்டிகளின் உறுதி குலைந்தது. அவர்களை நடத்திச் செல்ல எவர்க்கும் திறமை இல்லை. போலீஸாருக்குப் பயந்து வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றார்கள்."

"கிருஷ்ணனின் மரணத்தைச் செவியுற்று ராதா என்ன செய்தாள்?"

"அவளுக்கு இன்றுவரை நம்பிக்கையே ஏற்படவில்லை. ஏனெனில் கிருஷ்ணனின் சடலம் கடலிலிருந்து வெளி வரவில்லை. அவள் வழக்கமாகத் தினமும் விளக்கு ஏற்றுகிறாள். திரும்பிச் சென்று குடிசையின் முன்பு அவனை எதிர்பார்த்தவாறு இரவு முழுவதும் உட்கார்ந்திருக்கிறாள்—"

"அந்தத் துரோகியின் முடிவு என்னவாயிற்று? கிருஷ்ணனின் மரணத்திற்குக் காரணமான அவன் தனது சமூகத்திற்கு மட்டுமன்றிச் சுதந்திரப் போராட்டத்திற்கே துரோகம் செய்த நயவஞ்சகன். இப்போது அவன் என்ன செய்கிறான்—?"

படகோட்டி ஒன்றும் பதில் அளிக்கவில்லை. மௌனமாகத் தலை குனிந்தவாறு தனது படகைச் செலுத்தினான். **அவன் பேசாமையே, அவனது குற்றமுள்ள நெஞ்சத்தின் துடிப்பாகத் தோன்றிற்று.** எங்கும் நிசப்தம் நிலவியிருந்தது. புகை வண்டியின் ஊதும் சப்தம் என்னைத் திடுக்கிடச் செய்தது. நான் அன்றிரவு கோயிலொன்னை விட்டு ஊர் திரும்ப வேண்டியிருந்தது.

படகிலிருந்து இறங்கு முன் நான் சமுத்திரத்தை நோக்கினேன். வானத்திலே ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. ஆனால் இருள் நிறைந்த சமுத்திரத்தின் மத்தியிலும் ஒரு நட்சத்திரம் பளிச்சிட்டது.

அது ராதாவின் விளக்கு ஆகும். ராதா தனது கிருஷ்ணனின் வரவை இரவு முழுவதும் எதிர்நோக்குவாள்—இன்றிரவு—நாளை இரவு—நாளை மறுநாள் இரவு—இந்த நட்சத்திரம் ராதாவின் காதலைப் போன்று எப்போதும் மின்னிக் கொண்டிருக்கும். ஏனெனில் இது.........நம்பிக்கையின் நட்சத்திரமன்றோ?.........

## முகப்பின் அழகு

**'நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்**
**தீயாண்டுப் பெற்றாள் இவள்**

(குறள்)

# அட்டைப்படம்

எம்.எஸ்.கமலா

வர்மா ஜன்னல் வழியாய்த் தம் பார்வையைத் தெருவில் செலுத்தினார். கடைக்குப் போகச் சொல்வதற்காகச் சங்கரியம்மாள் கணவரைத் தேடிக்கொண்டு வந்தாள். மனைவி வந்ததைக்கூட அறியாது வர்மா தெருவைச் சிரத்தையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்.

எதை இப்படி உற்றுக் கவனித்துக் கொண்டு நிற்கிறார் என்று நினைத்தவாறு சங்கரியம்மாளும் தம் பார்வையைத் தெருவில் செலுத்தினாள். அச் சமயம் குமிழ்களிட்ட செருப்பையணிந்து, கையில் 'டம்பப்பை' கம்பீரமாய் ஆட, இரு தோளகளிலும் இரட்டைப் பின்னல் நெளிய இருபத்தைந்து வயது மங்கையொருத்தி அவள் கண்களில் பட்டு மறைந்தாள். சங்கரியின் மனத் திடலில் சஞ்சல விதை முளை விட்டது. இமைப் பொழுதில் இதயம் முழுவதும் கப்பும் கிளையும் தளிர்த்து பெரிய மரமாகி நின்றது.

'நாற்பது வயது நிறைந்த இவருக்கு... இதென்ன அக்கிரமம்? மார்பின் மேல் கும்பிட்டியைப் போல் வீட்டில் வளர்ந்து நிற்கும் இருபது வயதுப் பெண்ணுக்குக்கு கந்த மணமகன் கிடைக்கவில்லையே என்று ஒடுங்கிச் சாகிறேன். எலும்பு கடித்த அளவு வேதனைக் கூட இல்லாமல் இருப்பதுமன்றித் தெருவில் போகும் பெண்களைப் பார்த்துக் கொண்டல்லவா நிற்கிறார். எத்தனை வயசானால்தான் என்ன? கோணல் புத்திக்கோணல்தான். அது எங்கிருந்து நேராகும்?' என்று தன்னுள் நினைத்தபடி நின்றாள். அவள் நினைவுக் கயிற்றை அவர் பேச்சு அறுத்தது. எதற்கோ பின்புறம் திரும்பினவர் மனைவியைப் பார்த்து,

"என்ன வேணும்?" என்றார்.

"என்ன வேணுமா? எழவு வேணும்."

அவர் பதில் பேசவில்லை. அவர் மௌனம் அவளை அதிக சினத்திலாழ்த்தியது. "என்ன அங்கே? அப்படிப் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்?" என்றாள்.

"அது யாரோ? எனக்கும் தெரியவில்லை," என்றார்.

சங்கரிக்கு எரியும் தீயில் எண்ணெயை ஊற்றினாற் போலிருந்தது. "அது என்கிறீர்களே! அவ... அவள்... அந்தச் சுந்தரி... சக்க......"

"எந்தச் சுந்தரி...?"

அந்தச் சுந்தரிதான். ரம்பை, ஊர்வசி... மேனகை யாரோ? அந்தக் குடிகேடியின் பெயர் வேறு தெரிய வேண்டுமா? என் கர்மம் தான்."

வராந்தாவில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த பார்வதிப் பாட்

**காமிரு வைத்திருப்போர் எவரும் கவலைப் பட வேண்டாம். வேண்டுமானுல் கோபப் படுங்கள், கதாசிரியை மீதல்ல பாட்டி உருவைப் படம்பிடிக்க முயன்று போலீஸாரிடமும் பத்தாம் பசலிகளிடமும் அகப்பட்டுக் கொண்டு அவதிப்படும் அந்த வாலிபன் மீது.**

டிக்குப் பிள்ளையும், நாட்டுப் பெண்ணும் போடும் சண்டை காதில் விழ்ந்தது.

"என்டாப்பா! மறுபடியும் தொடங்கி விட்டாளோ? நானிருக்கும்வரை நீங்களிருவரும் சண்டைப் போடுவதை விடமாட்டீர்கள் போல் தோன்றுகிறது," என்ருள். கிழவிக்கு இருமல் நோய். வீட்டில் சச்சரவேற்பட்டாலும், இருமல் வந்தாலும் 'நான் எதுக்குப் பிழைத்திருப்பது?' என்று தன்னைத் தானே நொந்து கொள்வது அந்தம்மாளின் வழக்கம்.

"பாட்டி நீ பிழைத்திருப்பதற்கும், அப்பா, அம்மா சண்டைக்கும் என்ன சம்பந்தம்?" என்ருள் இருபது வயது பேத்தி இந்திரா.

"ஏன் உறுமுகிருர்கள்?" என்ருள் பாட்டி.

"அதென்னவோ? எனக்கென்ன தெரியும்?"

"அவளுக்கென்ன தெரியும் அம்மா? உன் நாட்டுப் பெண் எதற்காகச் சண்டையிடுகிருளென்று எனக்கே தெரியாத போது......" என்ருர் வர்மா.

"உங்களுக்குத் தெரியாதா? எத்தனை சாகஸம்? அய்யோ பாவம். குழந்தை..." என்ருள் சீறியபடி சங்கரி.

"அப்படியானுல் என்னவென்று தான் சொல்லேன்," என்ருள் இந்திரா. ஆனுல் சங்கரி தன் பெண் முன் ஒன்றும் சொல்ல விரும்பாது பால பொங்கும் வாசனை வரவே அடுக்களைக்குள் சென்ருள். இனி கணவனுடன் பேசக் கூடாதென்று நினைத்து கணவனிடம் சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லாமல் சென்ருள். வேலைக்காரியிடம் சொல்லி வாங்கி வரச் சொல்லலாமென்று நினைத்தால் ஐந்தணு தேங்காயை ஆறணு என்று சொல்லிக் குறைந்தபக்ஷம் அரையணுவாகிலும் அபேஸ் செய்து விடுவாள். ஆதலால் அவளை அனுப்புவதில் லாபமில்லை. பிறகு யார் போவது? இந்திரா தான் போக வேண்டும். அந்த வீட்டிற்குப் பிள்ளையாயினும்' பெண்ணுயினும் அவள் ஒருத்தி தான். அதனுல் வர்மா வீட்டிலில்லாத சமயங்களில் எது வேண்டுமாயினும் இந்திராதான் வாங்கி வந்து தருவது வழக்கம்.

கணவன் மேல் வந்த கோபம் மகளைக் கடைக்குப் போகச் சொன்னுள் சங்கரி. பணமும் பையுமாய் ஒரு குதி குதித்துக் கொண்டு ஓடினுள் இந்திரா தெருப்புறம். பார்த்தார் வர்மா.

"எங்கே இந்திரா?" என்று குறுக்கே வந்தார்.

"அம்மா தேங்காய், வாங்கி வரச் சொன்னுள்."

"அவளுக் கில்லாமற் போனுல் உனக்காகிலும் புத்தியிருக்க வேண்

டாம்! நீயா கடைக்குப் போவது?" என்று கடிந்து கொண்டார் வர்மா. தன் தந்தை தன்னை எதற்காகக் கடிந்து கொண்டாரென்று இந்திராவுக்குப் புரியவில்லை. முதல் நாள் மாலை அவர் கடை வீதிக்குச் சென்றபோது ஆபீஸிலிருந்து எதிரில் வந்த தந்தை ஒன்றும் சொல்லவில்லையே? அம்மாள் மேல் கோபம் வந்தால் தன்னைக் கோபித்துக் கொள்வானேன், என்று பாட்டியின் காதைக் கடித்தாள் இந்திரா.

வர்மா இந்திரா சொன்ன சாமான்களை வாங்கிக் கொண்டு வந்து "அம்மா! இந்திரா எங்கே?" என்றார்.

"இங்கேதான் இருந்தாள். தோட்டத்துப் பக்கம போயிருக்கிறாளோ? என்னவோ? நீ ஏன் அவளைக் கடிந்து கொள்கிறாயாம்?"

"வயது வந்த பெண்ணைக் கடைக்கு அனுப்புவது உனக்கு நன்றாயிருக்கா?" என்று இரைந்தார்.

பார்வதிப் பாட்டிக்கு ஆச்சரியமாயிருந்தது. தன் பேத்திக்குப் பத்து வயது நிரம்பியதும் கலியாணம் பண்ண வேண்டுமென்று பிள்ளையிடம் சொல்லி வாய் வலித்ததுமன்றிப் பத்து வருடங்களும் பறந்து விட்டன. இத்தனை நாட்களாய் அதைப் பற்றிக் கவலை கொள்ளாத பிள்ளை திடீரென்று இன்று ஞானோதயம் பெற்றவன் போல் பேசுவது......வயது வந்த பெண் கடைக்குப் போகக் கூடாதென்று......ஆச்சரியத்துடன் மகன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். பழுக்கக் காய்ந்த இரும்பைத்தான் பக்குவமாய் அடித்து வளைக்கலாம். இல்லையேல் வளைந்து கொடுக்காது என்று நினைத்தவளாய்,

"இனி அவளைக் கடை கண்ணிக்கு அனுப்பக் கூடாதுடா!

*கலியாணம் செய்து விடவேணும் பெண்ணுக்கு மாமியாரும், பிள்ளைக்கு வாத்தியாரும்... ..."

"நானும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன்," என்றார் வர்மா.

கலியாண மென்றாலே கடுமையாய்ச் சண்டைக்கு வரும் பிள்ளை இன்று, இங்கிதமாய்ப் பேசுவது பார்வதிப் பாட்டிக்கு ஆச்சரியத்தை யளித்தது.

மறுநாளும் வர்மா முதல் நாளைப் போலவே ஜன்னலருகில் நின்று தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தார். சங்கரியும் கவனித்துக் கொண்டு நின்றாள். தெருவில் ஒரு பெண் கூட நடக்கவில்லை.

"போய் விட்டாளோ? என்னவோ? நான் வந்து பார்க்க நேரமாகி விட்டது போலும்," என்று தன்னுள் சொல்லிக் கொண்டாள். அதே சமயம் வர்மா,

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்துவிடின்"

"ரா ஜா! ரா ஜா!" என்று அழைத்தார். தோட்டக்கார ராஜா வந்து ஜன்னலருகில் நின்றான்.

"முந்தி ஓடு, அதோ போகிறானே ......அவனை அழைத்து வா! வராவிட்டால் இரண்டு முதுகில் கொடுதது இழுத்து வா!" என்று தெருவில் செல்லும் ஒரு வாலிபனைக் காட்டினார்.

ராஜா அரை நிமிஷத்தில் அம்பைப் போல் பாய்ந்து அவன் தோள்களைப் பிடித்துக் கொண்டான். வாலிபன் திடுக்கிட்டு, "என்னை ஏன் பிடிக்கிறாய்?" என்று கேட்டான்..

"அந்தக் கேள்வியை என் எஜமானனிடம் கேள். எனக்கென்ன தெரியும்? அவரிடம் வா!" என்று அவனை வர்மாவிடம் அழைத்துச் சென்றான். அதற்குள் தெருவில் போவோர் வருவோரெல்லாம் அந்த வாலிபனைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டனர்.

ஏதோ திருடியிருப்பான் என்று நினைத்த ஒரு சந்தேகப் பேர்வழி, "என்ன திருடினான்?" என்று தன்னைப் போன்ற மற்றொருவனிடம கேட்டான். அவர் தனக்கெதிரி லிருந்தவரைக் கேட்டார். எதிரி லிருந்தவர் வாலிபன் கையிலிருந்த 'கேமரா'வைச் சுட்டிக் காட்டி, "இதை அடித்துக்கொண்டு போகப் பார்த்திருக்கிறான்," என்றார். அவருக்கருகி லிருந்தவர் 'கேமரா'வை எடுத்துக் கொண்டே போய் விட்டான். பட்டப் பகலில் என்ன துணிச்சல் பாருங்கள் என்றார். மற்றொருவர், "ஏன் பார்க்கிறீர்கள். சற்று ஆளைப் பதம் பார்க்கிறதுதானே?" என்றார், வேறொருவர். நாம் கை கலக்கக் கூடாது. போலீஸில் ஒப்படைப்

பதுதான் உத்தமம்" என்றார் சட்டம் தெரிந்தவர். அச் சமயம் அப்பக்கம் ஒரு போலீஸ்காரனும் வந்தான். அவன் தன் சிவப்புத் தலைப்பாகையைச் சரி செய்து கொண்டு கம்பீரமாய் "என்ன் சங்கதி?" என்று அழுத்தமாயக் கேட்டான்.

"கேமரா திருடிக் கொண்டு போய்க் கொண்டிருந்தான். பிடித்துக் கொண்டோம்," என்றார்கள்.

"யாருடைய கேமரா?" என்று கேட்டான் போலீஸ்காரன்.

எல்லோரும் வர்மாவைப் பார்த்து விழித்தனர்.

"கேமரா எங்களுடையதல்ல," என்றார் வர்மா.

"பின் யாருடையது?"

"யாருடையதா? என்னுடையது. நான்தான் புகைப் படங்கள் எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்புகிறேன்," என்றான் வாலிபன். போலீஸ்காரன் தன் நிமிர்ந்த மார்பை ஒருமுறை பார்த்துக் கொண்டு "இது உன்னுடையதென்றால் இவர்களெல்லாம் நீ இதைத் திருடியிருப்பதாகச் சொல்கிறார்களே!" என்றான்.

"நான் திருடினேனென்று உம்மிடம் யாரய்யா வந்து சொன்னது?" என்றான் வாலிபன். அவன் பேச்சைக் கேட்டதும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

யாரய்யா? இவர் கேமரா திருடினதென்று சொன்னது?" என்று கேட்டான். முதலில் திருடனென்று கூச்சல் போட்ட அனைவரும் 'நான் சொல்லவில்லை,' 'நான் சொல்லவில்லை,' என்று அனைவரும் ராஜுவைப் பார்த்தனர். ராஜு தன் எஜமானர் வர்மாவைப் பார்த்தான். வர்மா போலீஸ்காரனைப் பரிதாபமாய்ப் பார்த்து,

வாழ்க்கைக்கு வழிகாட்டி!
இல்லறத்திற்குத் திறவுகோல்!
எஸ். எஸ். வாஸன்
எழுதிய
தம்பதிகள்
சுகமாய் வாழ்வதெப்படி?
விலை 3-12-0
ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தெரிந்திருக்கவேண்டிய பல அபூர்வ விஷயங்கள் அடங்கியது
ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை-1

"நான் இந்த வாலிபனைத் திருடனென்று பிடித்து வரச் சொல்லவில்லை. இவன் காம்பௌண்ட் சுவருக்குப் பின் நின்று உட்புறம் எட்டிப் பார்த்துக் கொண்டு சென்றதால் கண்டித்து அனுப்ப வேண்டுமென்று வரவழைத்தேன். நேற்றும் இப்படியே பார்த்துக் கொண்டு சென்றான். குடும்பமுள்ள வீட்டை இப்படிப் பார்க்கலாமா சொல்லுங்கள்?' என்றார்.

"போக்கிரித்தனம். அந்த கிஜாரும், ஜுப்பாவும், கலைந்த கிராப்பும் பார்த்தாலே தெரிகிறது...... 'ரௌடி' என்று," என்றான் ஒருவன்.

"அதிலும் கலியாணத்திற்கு ஒரு பெண் இருக்கும் வீட்டையா இபபடிப் பார்ப்பது. தவறல்லவா?" என்றார் அத் தெருவிலுள்ள கண்ணியவான். அந்தக் கூட்டத்தினருக்கு அப்பொழுது தான் அந்த வீட்டில் மணப் பருவமெய்திய மங்கை ஒருத்தியிருப்பது தெரிந்தது.

"எத்தனை வயதானால் என்ன? ஒரு பக்கம் நரைத்தால்தானே கலியாணமாகும்? இத்தனை சீக்கிரம் எங்கிருந்து ஆகும்." இப்படிப்பேச்சுகள் உதட்டிறகு உதடு ஒருவிதமாய்ச் சரிந்தன.

ஒரு பெண்ணைச் சற்றே பார்த்தால் ஏனோ இந்த அல்லகல்லோலம் என்று வர்மா நினைத்தார். போலீஸ்காரனுக்கு வெறுப்புத் தோன்றியது.

"அப்பனே! இனி இம் மாதிரி செய்யாதே; போ!!" என்றார் வர்மா சோர்ந்தகுரலில். அந்தவாலிபன் செல்லவில்லை. வர்மாவைப்பார்த்து,

"எம் மாதிரி செய்யக் கூடாது?" என்று கேட்டான்.

"மணமாகாத பெண்கள் இருக்கும் வீட்டைப் பார்க்கக் கூடாதென்றால் "எம் மாதிரி?" என்று கேட்கிறானே!"

அநாவசியமாய்க் கூட்டம் கூடி அசந்தர்ப்பப் பேச்சுகள் பேசும் அக் கூட்டத்தினரை அந்த வாலிபன் ஒருமுறை பார்த்து வர்மாவை நோக்கி,

"ஐயா! நான் உண்மையாய்ச் சொல்கிறேன். உங்களுக்கு ஒரு பெண் இருக்கிறாளென்றோ, அவளுக்கு மணமாகாமல் இருக்கிறதென்றோ எனக்குத் தெரியாது. நான் நேற்றும், இன்றும் உங்கள் வீட்டை எட்டி எட்டிப் பார்த்தது உங்கள் பெண்ணுக்காக அல்ல," என்றான்.

"பின்......யாருக்காக?"

"அந்த வராந்தாவில் கட்டிலில் படுத்திருக்கிறாளே பாட்டி அவளுக்காக..." என்னும் போதே தன்வீட்டு முன் சேர்ந்த கூட்டத்தைக்கவனிக்கக் கோலை ஊன்றிக் கொண்டுவந்துநின்ற பார்வதியம்மாளின் காதில் அவன்சொற்கள் விழவே,

"அடா பாவி! எனக்காகவா எட்டிப் பார்க்கிறாய். உன் நாககு அழுகி விழ," என்று தன் கைக்கோலைவீசிஎறிந்தாள். அக்கோல்சென்று வேறுயார் காலிலோ பட்டது. அவர் பாட்டியை 'அர்ச்சனை' செய்து கொண்டேநடந்தார்.

"நான் சொல்வது உண்மைதான். நான் அந்தப் பாட்டியைத்தான் பார்த்தேன். எனக்கு இந்தப் பாட்டியைப் போல் உடல் உலர்ந்து, தோல் சுருங்கிப் பார்க்கப் பரிதாபமாயுள்ள ஒரு கிழவியின் புகைப் படம் வேணும். எதற்காகவென்றால் எங்கப் பத்திரிகாசிரியர் 'பஞ்சத்திலடிபட்ட ஜீவன்,' என்ற முகப்புச் சித்திரத்தைத் தம் பத்திரிகைக்கு அனுப்பச் சொல்லி எழுதியுள்ளார். அந்தத் தலைப்புக்கு ஏற்றபடி பாட்டியின் புகைப் படத்தை அனுப்பி வைத்தால் சரியாயிருக்குமென்று தோன்றியதால் உங்கள அனுமதிப் பெற்று படம் எடுக்கலாமென்று நினைத்தேன். ஆனால் நீங்கள் என்ன சொல்வீர்களோ என்று தோன்றவே சுவற்றிற்குப் பின் இருந்தே எடுக்க முயன்றேன். வெகு தூரமாகி விட்டதால முடியவில்லை. இப்பொழுது பாட்டி அருகில் இருக்கிறாள் எடுத்துக கொள்ளச் சொல்கிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டு சற்று விலகி நின்றபடி விசையை அழத்தினான்.

## ஆளைக் கண்டு யானை ஓட்டம்

# பரிசுத்தமற்றவள்

மூலம்: ஜக்அன்வர்

தமிழாக்கம்: முக்தார்

பயங்கரமான சொப்பனங்கள் கண்டு, நடு இரவில் அவள் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். விழிப்படைந்த சமயம் அவளது கண்கள் கண்ணீரால் நிரம்பியிருந்தன. தூக்கத்தில் தான் அழுது இருப்பதை அவள் உணர்ந்தாள். சஞ்சலமுற்றுத் தனது கணவனைத் தட்டி எழுப்பினாள்.

ருக்மணி, இன்று பல தடவை பயங்கரமான கனவுகள் கண்டு, ஒவ்வொரு முறை விழிப்படையும் போதும் தனது கண்கள் வழியே கண்ணீர் பெருகிச் சென்றிருப்பதைக் கண்டாள். ஒவ்வொரு தடவையும் துயிலிலாழ்ந்திருந்த தனது கணவனை எழுப்பினாள். அவளது கணவன் அவளைப் பெரிதும் நேசித்தான் எனினும் அப்போது அவள் தொந்திரவு பொறுக்க முடியாமல் சீறினான். ஆனால் அவள் தனது கனவுகளைப் பற்றிக் கூறி அவனைச் சாந்தப்படுத்தினாள். அவன், அவளைத் தனதருகிலேயே—தமது படுக்கையிலேயே படுத்துக் கொள்ளுமாறு கூறினான். ஆனால் அவள் 'குழந்தைத் தூக்கம் கலைந்து அழும்' எனக் கூறி விட்டாள்.

"நீங்கள் விழிப்புற்று இருங்கள். வேண்டாம், என்னுடன் சற்று வெளியில் வாருங்கள்" என்றாள் ருக்மணி.

அவன், அவளுடன் வெளியே வராந்தாவில் வந்து நின்றான். அவள் தண்ணீர்க் குடத்தைத் திறந்து ஒரு சொம்பில் தண்ணீர் எடுத்துப் பருகினாள். பிறகு தனது கணவனை அடைந்து, "என் தாயார் நோய்வாய்ப்பட்டிருக்கிறாள். அ... கதி என்னமோ? என் மனம் ச...சலத்தில் ஆழ்ந்திருக்கிறது" என...றாள்.

"நான் கூறுவதை நீ ஒப்புக் கொள்வதில்லையே, என் செய்வது? வா, இப்போதே செல்வோம். அம்மா பழி கூறினால் நான் சகித்துக் கொள்கிறேன்" என்றான் அவன்.

"இல்லை. நீங்கள் கூறுவது மிகவும் தவறானது. வாருங்கள், தூங்கச் செல்வோம்" என்றாள் ருக்மணி.

இரவு தனது பிரயாணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது. அவர்கள் வெளி வந்ததைக் கண்டு ஆடுகள் கத்தின. ருக்மணியின் மாமியாள் தூக்கம் கலைந்து எழுந்து, தனது அறையிலிருந்தவாறே, "விளக்கை அணைத்து விடுங்கள். எண்ணெய் யாரும் இலவசமாக வழங்கிவிட்டுப் போகவில்லை" என்று கூச்சலிட்டாள்.

தாயின் குரலைக் கேட்டு ஒடுங்கும் பயந்தாங்கொள்ளியாக இருந்த ருக்மணியின் கணவனுக்கு அப்போது எங்கிருந்தோ தைரியம் வந்து விட்டது. அவன் தனது அன்னையை எதிர்த்து விடைமொழி பகர வேண்டுமென நினைத்து, வேகமாக அவள் அறையை அடைந்து, கதவைத் தட்டினான். "விளக்கை அணைத்திருக்

**...அவள் உண்மையிலே நற் பண்புடையாள்—இல்லற வாழ்வுக்கேற்ற நல்லாள். ஆனால் கட்டிய கணவனே அம்மாவின் குரல் கேட்டாலே கதிகலங்கும் கோழை. இதன் விளைவாக அந்த நல்ல பெண்மணி பரிசுத்தமற்றவள் என்று ஊரார் பேச்சுக்கு இலக்காகிறாள்.**

கிறது. வெளியே வந்து பாருங்கள். உங்களுக்கு நித்திரை வருகிறதோ, இல்லையோ தெரியவில்லை. கனவிலும் எங்களை விடாமல் பின் தொடருவீர்கள் போலும்" என்றான்.

"அப்படியானால் உங்களைத் துன்புறுத்துகிறேனா?" அவள் கதவைத் திறந்தாள். "சொல்லடா! நான் என்ன தீங்கு செய்தேன் என்பதை—பொல்லாதவள் என்கிறாயே—"

அவனுடைய தைரியம் தவங்சுவடு தெரியாமல் மறைந்து விட்டது. அவன் மௌனமாகி விட்டான். அன்னை எதிரில் வந்ததும் அவன் கோழையாகி விட்டான். அவள் கூச்சலிட்டாள், "தெரிகிறது அவள்—அந்த விபச்சாரி—உன்னை எனக்கெதிராக எதிர்த்துப் பேசுமாறு ஏவி இருக்கவேண்டும். இது அவள் செய்த சூழ்ச்சியாக இருக்க வேண்டும். ஆம்! தவறு என்னுடையதுதான். நான் நிலத்தை அடமானம் வைத்து இதற்காகத் தானா அந்தச் சூழ்ச்சிக்காரியை லக்ஷ்மி எனப் போற்றி மருமகளாகக் கொண்டு வந்தேன்...?"

'ருக்மணி நிரபராதி. அவள் ஒரு பாவமும் அறியாதவள்' எனக் கூறவும் அவனுக்குத் துணிவு ஏற்படவில்லை. அவன் ஒன்றும் பேசாமல் தலை குனிந்தவாறு திரும்பினான். தனது அறையை அடைந்து சுருண்டு படுத்துக் கொண்டான். ஏதோ பெரும் தவறு செய்து விட்டவள்போல் ருக்மணி அவனருகில் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

"நீங்கள் அம்மாவை எதிர்த்துப் பேசி இருக்கக் கூடாது. அவள் என் மீது வீணாகச் சந்தேகம் கொள்ளுவாள்."

அவன் ஒன்றும் பேசவில்லை. ருக்மணியின் விரல்கள் அவனது தலை மயிர்களுடன் விளையாடின.

அன்று மத்தியானம் ருக்மணியின் தந்தை அவளை அழைத்துப் போக வந்திருந்தார். ருக்மணியின் அன்னை நோய் வாய்ப்பட்டிருப்பதாகக் கூறினார். ஆனால் அவள் மாமியார் அவரை அதட்டி விரட்டினாள்.........

வெளியில் அவள் மாமியார் இதுவரையில் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

"........நானும் ஒரு காலத்தில் மணமகளாக இருந்தபோது எனது தந்தையும் இவ்வாறே ஏதேனுமொரு காரணங் காட்டி பிறந்தகம் அழைத்துச் செல்ல வருவார். சில வேளைகளில் அன்னை நோயாளியாக இருப்பதாகவும், சில சமயங்களில் சகோதரர் மரணப் படுக்கையில் கிடப்பதாகவும், சில நேரங்களில் எனது தங்கையைப் பார்க்கச் சிலர் வரப் போவதாகவும் இன்னும் எத்தனையோ சாக்குகள் சொல்லுவார். ஆனால் எனது மாமியாரோ பறக்கும் குருவியின் இறகுகளையும் எண்ணக்கூடிய சக்தி வாய்ந்தவள். அவளும் எனது



தங்கையை இவ்வாறே விரட்டினாள்! யாரும் நோய் வாய்ப்படவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். தன்னருமைக் குமாரியை விட்டு இருக்க முடியவில்லை என்று நிஜத்தைச் சொல்லுங்களேன். அவளைப் பற்றியே கவலை அதிகமாக இருக்கிறது போலும். பாவம்! ஆனால் செவிசாய்த்துக் கேளுங்கள். இப்போது தானிய அறுவடை காலம். நெல் அறுவடை செய்ய வேண்டும், அளக்க வேண்டும், வெயிலில் போட வேண்டும் இந்த வேலைகள் என்னால் செய்ய முடியாது—மேலும் நெல் அறுவடையானதும் ராணி அம்மையை அழைத்துப் போகலாம் என்று எண்ணமிடாதீர்கள். சரி; அதை அப்போது பார்க்கலாம். இப்போது அவள் தாயார் நோயாளியாக இருந்தாலும் சரி; இறந்துவிட்டாலும் சரி அவளைக் கண்டிப்பாக அனுப்ப முடியாது......"

இப்படி மாமியார் பேசியது நினைவுக்கு வரவே ருக்மணியின்

கண்கள் வழியே கண்ணீர் வழிந்தோடியது.

ருக்மணியின் மைத்துனன் ஷியாம் லால் நித்திரையிலிருந்து விழிப்புற்று உயர்ந்த குரலிலே பஜனை பாட ஆரம்பித்துப் பிறகு திரைப்படக் கீதமொன்று இசைக்கத் தொடங்கினன். இடையிடையில் ஆடுகளின் குரல்களும் ஒலித்தன.

ருக்மணியின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர்த் துளிகள் அவளது கணவனின் முகத்தின் மீது விழுந்ததும் அவன் திடுக்கிட்டு எழுந்தான். தலையணையின் கீழிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து பற்ற வைத்தான். ஆனல் ருக்மணி உடனே அதை அணைத்து விட்டாள். அவன் மிகவும் அமைதியுடன், "நீ சீதாவைப் பார்த்திருக்கிருயா?" என்ருன்.

"உங்கள் சகோதரி சீதாவா?" ருக்மணி வினவினள்.

"ஆம்—" அவன் மறுமொழி பகர்ந்தான். "அப்போது பாபுஜி (அப்பா) மரணப்படுக்கையில் துடிதுடித்துக் கொண்டிருந்தார். அவளை நான் அழைத்து வர அவள் புக்ககம் சென்றபோது என்னை அவள் மாமியாரும் இவ்விதமே தூற்றி அனுப்பினள்—இன்று அம்மா உனது தந்தையை விரட்டியதுபோல......"

"இல்லை. அப்பாவை மாமி விரட்டவில்லையே. அவ்வாறு உங்களிடம் யார் சொன்னர்கள்? அப்போது நீங்கள் கடையில் அல்லவோ இருந்தீர்கள்!" ருக்மணி பொய் சொல்லி அவனை ஏமாற்ற விரும்பினள்.

அவன் சிரித்தான்.

"பொய் கூறுவதால் ஒன்றும் பிரயோஜனமில்லை. உன்னை அம்மா ஒரு மருமகளாகவே நடத்துவாள். எனக்கு எல்லாம் தெரிந்து விட்டது."

ருக்மணி மௌனம் சாதித்தாள். அவன் தனது பேச்சைத் தொடர்ந்தான்.

"ஷியாம் லால் நடந்ததையெல்லாம் சொல்லி விட்டான்—எனது சகோதரியை அவள் மாமியார் அனுப்பவே இல்லை. பாபுஜியும் இறந்து விட்டார். அந்தச் செய்தியைச் செவியுற்ற அவள் அதே இரவு அங்கிருந்து ஓடி வந்து விட்டாள். மீண்டும் அவளை ஏற்றுக் கொண்டு அழைத்துச் செல்ல மறுக்கப்பட்டது. எனது மைத்துனனும் ஒரு முட்டாள்......"

ருக்மணி தனது கையினல் அவளது வாயை அடைத்தவாறு மொழிந்தாள்; "நீங்கள் கவலை பட வேண்டாம். எனது அன்னை எனக்குப் புத்திமதிகள் பலப் புகட்டி இருக்கிருள். ஒரு பெண் புக்ககத்திற்குச் சென்ற பிறகு, மரணமடைந்து பிணமாகவே வெளி வருகிருள் என்பது எனக்குத் தெரியும்."

"நீ ஒரு பைத்தியக்காரி—" ருக்மணியின் கையை விலக்கியவாறு அவன் மொழிந்தான், "நீ நான் கூறுவதை உணர்ந்து கொளளவில்லை. எனது சகோதரி இதே வீட்டில் மூன்று வருடங்கள் வரை விதவையைப் போல் வாழ்ந்து உயிர் நீத்தாள். இப்போது அம்மா அப் பழியை உனக்கு வாங்கித் தருவதற்குத் திட்டமிடுகிருள்."

"ஆம். மாமி அப்பா விடம்—'இவள் ஓடி விட்டால் நான் அவளை ஏற்றுக் கொள்ளமாட்

டேன் லாலா! என்று மகனுக்கு ஆயிரம் பெண்கள் கிடைத்து விடுவார்கள்—' என்று சொன்னார். அப்பா என்னைத் தனிமையில் அழைத்துச் சென்று எது நேர்ந்தாலும் எவ்விதத் தவறும் செய்யக் கூடாதென எச்சரித்தார்."

"கோள் சொல்லும் பாவத்தை நீ தலைமீது சுமக்க வேண்டாம். இந்தப் பாவத்தை ஷியாம் முதலிலேயே வாங்கிக் கொண்டிருக்கிறான். நான் எல்லாவற்றையும் அறிவேன்."

ருக்மணி முதலிலிருந்தே ஷியாமிடம் அன்புக் காட்டினாள். இப்போது அவனைச் சொந்த சகோதரனென எண்ணினாள். "ஷியாமு எனக்காக அம்மாவிடம் வசைமொழிகள் வாங்குகிறான்" என்றாள் அவள்.

"அவன் உன்னைப் பற்றிப் பெரிதும் கவலைப்படுகிறான—அண்ணியை எப்படியேனும் பிறந்தகம் அனுப்ப வேண்டுமெனப் பிடிவாதம் செய்கிறான்—ஆனால் ருக்மணி! நானொரு பயந்தாங்கொள்ளி அம்மாவிடம் துணிந்து ஏதும் சொல்ல என்னால் முடியவில்லை. அதுவும் உனது விஷயத்தில் என்ன கூறுவது என யோசனை செய்யவும் எனக்குத் துணிவு இல்லை."

"ஆம்; இதுதான் நன்றி மிகுந்த விசுவாசமுள்ள புத்திரர்களுக்கு அழகும்கூட," என்றாள் ருக்மணி.

"இல்லை—என்து அச்சத்தையும், கோழைதனத்தையும் நானே நொந்து கொள்கிறேன். இன்று விளக்கு விஷயமாக அம்மாளிடம் ஒரே வார்த்தைக் கூறினேன். ஆனால் எனது இருதயம் இது வரை அடித்துக் கொள்கிறது."

"நீங்கள் சஞ்சலமடைய வேண்டாம். நான் பிறந்தகம் ஓடிவிடமாட்டேன். நான் உங்களை அம்மாவிடம் அனுமதி பெறுமாறும் வற்புறுத்தவில்லை. அவரது விருப்பத்திற்கெதிராக அனுப்பும்படியும் கூறவில்லை—ஷியாமு இன்னும் உலகமறியாத அசடனாக இருக்கிறான். எனது வருகைக்காகக் காத்திருந்த அன்னை, மிகவும்

---

லியோ டால்ஸ்டாயின்

## புத்துணர்ச்சி

விருதை. ந. இராமசாமி தழுவலாகத் தேன் தமிழில், திகட்டா முறையில் எழுதியிருக்கிறார். விசித்திரக் காதல் இந்நூலிலே விளையாடுகிறது! புதுமையான சம்பவங்கள் பூத்துக் குலுங்குகின்றன.

அழகிய மூவர்ண முகப்பு!

விலை 2 ரூபாய்

ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை—1.

## விண்ணைச் சாடுவோம்!

காற்றிலேறியவ் விண்ணையுஞ் சாடுவோம், காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே

—பாரதியார்

## மாமலையும் ஓர் கடுகு!

கிட்டரிய காதற்கிழத்தி
இடும் வேலை,
விட்டெறிந்த கல்லைப்போல்
மேலேறிப் பாயாதோ,
கண்ணின் கடைப்பார்வை
காதலியர் காட்டிவிட்டால்,
மண்ணில் குமரர்க்கு
மாமலையும் ஓர்கடுகாம்!

—பாரதிதாசன்.

வ்மாற்றமடைவாள். எனது அண்ணியின் சகோதரனுக்குப் பைத்தியம் பிடித்த சமயத்தில் எனது அண்ணி அழுது அழுது தேக சுகம் இழந்தும் என் அன்னை அவளைப் பிறந்தகம் அனுப்பவில்லை—இது ஷியாமுக்கு எப்படித் தெரியும்?—இது ஒரு நாணயம்—எப்போதும் செலவாணியில் இருக்கும்.”

ருக்மணி சிரித்தாள். ஆனால் அவள் கணவனுக்கு அது ஒரு வேதனை தரும் சிரிப்பாகத் தோன்றியது. துயரம் மிகுந்த விம்மலாகத் தென்பட்டது.

“உனக்குத் தெரியாது ருக்மணி. என்னால் எனது இருதயத்தைத் திறந்து, பிரித்துக் காட்டி, நான் எதை விரும்புகிறேன் என்பதை மட்டும் உணர்த்த முடிந்தால்...”

வெளியே கதவினருகில் யாரோ இருமுவது போல் சப்தம் கேட்டது.

அண்ணா, நான் உள்ளே வரலாமா?” என அனுமதி கேட்டான் ஷியாம்.

ருக்மணி தனது புடவைத் தலைப்பைச் சரிபடுத்தினாள்.

“வாரும்—” அவளே பதிலளித்தாள்.

ஷியாம் உள்ளே வந்து, திரைப்பட நடிகனைப்போல் இருவரையும் கூர்ந்து நோக்கியவாறு தரையின் மீது உட்கார்ந்தான்.

“நீ இதுவரைத் தூங்கவில்லையா? பரீட்சைகள் முடிவடைந்து விட்டனவே!” என வினவினான் ருக்மணியின் கணவன்.

“கடுமையான பரீட்சை ஒன்று காத்துக் கொண்டிருக்கிறது, அண்ணா!” ஷியாம் ஒரு நடிகனாகத் திகழ விரும்பினான். அவன் பேசும்போது அபாரமாக நடித்துக் காட்டினான். தனது நடிப்புத் திறனை வெளிப்படுத்துவது போன்ற குரலில், “இந்தப் பரீட்சையில் தேறுகின்றேனா? அல்லது தோல்வியடைந்து விடுவேனா என்று பார்க்க வேண்டும்” என மொழிந்தான்.

“எந்தப் பரீட்சையில்—?” இது அவனது சகோதரனின் இரண்டாவது கேள்வி.

“சமூகத்தின் பழைய பழக்க வழக்கங்கள் இன்றும் உயிருடன் இருக்கின்றன. இன்றைய சூழ்நிலைக்குத் தகுதியற்ற பழைய மூடச் சமூகம் இன்றும் நிலைத்திருக்கிறது. எனது பகுத்தறிவு, அது அழிந்து புதிய சமூகம் உருவாகி வருவதாகக் கூறுகிறது...”

அதிக கல்விபறிவு இல்லாமல் சிறிய பல சரக்குக் கடை வைத்திருந்த அவனது சகோதயனால், பி. ஏ. மாணவனாகத் திகழ்ந்த ஷியாம் கூறுவதைப் புரிந்துக்

கொள்ளவும் முடியவில்லை. ருக்மணியோ ஒன்றும் உணர முடியாமல் இருவரையும் நோக்கினாள்.

"சமூகமா? பகுத்தறிவா? விவமாகக் கூறேன்."

"அண்ணா" அவனது நடிப்பு மெச்சத்தக்கதாக இருந்தது, "அம்மா அந் நாட்களில் தனக்குப் பிறந்தகம் செல்ல அனுமதி கிடைக்கவில்லை என்று சொல்லுகிறாள். அப்பா இறந்த சமயம் சீதா புக்ககத்திலிருந்து ஓடி வந்ததும், அதன் பிறகு அவளை ஏற்றுக் கொள்ள மறுக்கப்பட்டதும் நான் கண்ணுற்றேன். அறிவில்லாத அவள் கணவன் ஒன்றும் செய்ய முடியாமல் தயங்கினான். இப்போது அண்ணியும் அவள் அன்னை இறந்து விட்டாலும் போக முடியாது. இது உண்மைதானே அண்ணி?"

அவள் ஒன்றும் பதிலளிக்கவில்லை. ஷியாம் தொடர்ந்து கூறினான்.—

"ஆனால் அம்மா, சீதா இவர்களில ஏதேனும் வித்தியாசம் தெரிந்துக் கொண்டீர்களா? அண்ணா!"

"என்ன—?" என வினவினான் அவன் சகோதரன்.

"ஆம், பாருங்கள்," அவன் விரைவாக எடுத்துரைத்தான், "—அம்மா அழுதவாறு இருந்து விட்டாள். அவளால் பிறந்தகம் போக முடியவில்லை. சீதாவும் ஆரம்பத்தில் கண்ணீர் வடித்தாள் எனினும் சமூகத்தை எதிர்க்க வீறுகொண்டு எழுந்தாள். அவள் கிளர்ச்சி செய்து விட்டாள். ஆனால் அந்தப் போராட்டத்தின்—புரட்சியின் முடிவு சகிக்க முடியாததாக இருந்தது. ஆயினும் அவள் தைரியம் கொண்டாள். இப்போது நிலைமை சற்று மாறுபாடு அடைய வேண்டும். இப்போது செய்யும் போராட்டத்தின் முடிவு கோரமாக இருக்கக் கூடாது......"

---

வில்லியம் ஷேக்ஸ்பியரின்

## ஹாம்லெட்

உணர்ச்சி ததும்பும் உயர்ந்த காவியம்!

இவ்வரிய எழுத்தோவியத்தின் மூலம், சிறிதும் சிதைவுரு வண்ணம், தித்திக்கும் தமிழில் தருகிறார் கோவி. மணிசேகரன்.

அழகிய மூவர்ண முகப்பு!

விலை 2 ரூபாய்

**ஸ்ரீமகள் கம்பெனி**

122, வாதாமுத்தியப்பன் தெரு

சென்னை—1.

## குஷ்டத்தை ஒழிக்க......

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஏறக்குறைய 20 லக்ஷம்குஷ்டரோகிகள் இருப்பதாகத் தெரிகிறது. விரிவான முறையில் சிகிச்சை யளித்தாலும் பத்தில் ஒருவரே பயன்பெறக் கூடிய வசதியிருக்கிறது. இருந்தாலும் நிவாரண வேலைகள் துரிதமாக நடக்கின்றன. கென்யாவில் ஏற்படுத்தப்பட்ட ஆராய்ச்சி நிலையத்தில் புதிய முறைகள் சோதனையில் உள. அங்கு கிடைக்கும் அனுபவங்களைக் கொண்டு மேலும் விரிவாகச் சிகிச்சை நடத்த முடியும்.

"ஷியாமு! உன் அண்ணி பிறந்தகம் செல்ல வேண்டுமென்கிறாய் நீ. நானும் இதற்காகவே துடி துடிக்கிறேன். அவ்வாறு நடைபெறுதோ என ஏங்குகிறேன்" என்று அவனது சகோதரன் பொறுமை இழந்து குறுக்கிட்டான், "ஆனால் அம்மாவின் மனப்பான்மையை யார் அறிவார்?"

"இதுதான் மனிதத்துவமும், கடமையும் கூட. இப்பொழுது சற்று முன்பு நான் ஆணாக இருப்பதால் ஒன்றும் உணர முடியாது என்றாள் அண்ணி. இந்த நாணயம் இங்ஙனமே செலவாணியில் இருந்து வரும் எனவும் எடுத்துரைத்தாள். ஆனால் நான் கூறுகிறேன் அண்ணா! இந்த நாணயம் இப்போது செலவாணியாகாது— இது செல்லாத காசு—ஆம்! உண்மைதான் அண்ணி!"

ருக்மணி புன்னகை செய்தாள். அவளது கணவன் ஆழ்ந்த யோசனையில் மூழ்கினான்.

சற்று நேரம் பொறுத்து அவன், "அம்மா அனுமதிக்கவே மாட்டாள்," என்றான்.

"இங்குதான் நீங்கள் தவறு செய்கிறீர்கள். அண்ணா! அம்மாவின் மனதில் பழி வாங்கும் எண்ணம் சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அவள் தனக்கு நேர்ந்த இன்னல்களுக்கும் அட்டூழியங்களுக்கும், கொடுங் கோன்மைக்கும், சீதாவின் மரணத்திற்கும் பழி வாங்கத் தீர்மானித்து விட்டாள். ஆனால் உண்மையாக யாரைப் பழி வாங்க வேண்டும் என்பதை மறந்து விட்டாள்— அவள் அதை யோசிக்கவுமில்லை!"

"ஆனால் இப்போது என்ன செய்வது?" அவன் அண்ணன் மனமாழ்ந்து விட்டாள்.

"நீங்கள் சற்று தைரியம்கொள்ள வேண்டும். நாளைக் காலையில் அம்மாவுக்கு எதிரில் 'ஷியாமு! உன் அண்ணியை பிறந்தகம் அழைத்துச் செல்' என்று உத்திர விடுங்கள். போதும். அதற்குப் பிறகு எல்லாம் நலம்."

"இல்லை, ஷியாமு! உன்னால் உணர முடியாது. இது பெரும் தீங்குகள் விளைவிக்கும்" என்று ருக்மணி குறுக்கிடு செய்தாள்.

"நீங்கள் சும்மா இருங்கள் அண்ணி!" அவனுக்குச் சற்று கோபமே வந்து விட்டது, "நீங்கள் அண்ணாவைக் கோழையாக்கி விட்டீர்கள். சிந்தித்துப் பாருங்கள் அண்ணி! இப்போது அம்மாவுக்குத் துளசி செடிகளுக்கு அருகில் உட்கார்ந்து பஜனம் செய்வதை விட வேறு வேலை இருக்கக் கூடாது. நான் அவளை அக்கிரமமாக நடத்தினால் அன்றோ தீங்குகள் விளையும்."

ருக்மணி' சிரித்தாள். அவளது கணவன் மீண்டும் சிந்தனையிலாழ்ந்தான்.

"நான் நாளை அதிகாலையில் கடைக்குச் சென்று விடுவேன். மற்ற எல்லாப் பொறுப்புகளும் உன்னைச் சார்ந்தவைகள்." அவனும் ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

"வெரி குட்—!" ஷியாம் குதித்தான்—"ஆனால் ஒரு சிறு விஷயம் அண்ணா! அதற்குப் பிறகு அண்ணியைப் பற்றி உலாவும் வதந்திகளை நீங்கள் செவி சாய்த்துக் கேளாமல், அக்கரை காட்டாமல் இருக்க வேண்டும்!"

இதைக் கேட்டு அவனது சகோதரனும் சிரித்துவிட்டான்.

ருக்மணி வெகுநேரம் வரை அவ்வாறு செய்வது நன்மை பயக்காது என்று எடுத்துரைத்தாள். ஆனால் ஷியாம் அமைதியுடன் திரைப் படக் கீதமொன்றை இசைத்துக் கொண்டிருந்தான்.

* * *

மறுநாள் அதிகாலையில் காலை போஜனமும் செய்யாமல் ருக்மணியின் கணவன் கடையைத் திறக்கச் சென்றான். அவன் சென்றதும் ஷியாம் சாமான்களைக் கட்டுமாறு தனது அண்ணிக்கு உத்திரவிட்டான். அவள் பிரயாணத்திற்கு ஆயத்தமானாள். அவளது மாமியார் ஒன்றும் புரியாமல் திகைத்தாள். எல்லாவற்றையும் பார்த்து உணர்ந்துக் கொண்ட பிறகு முணுமுணுக்க ஆரம்பித்தாள்.

"......கணவனைப் பற்றி அக்கரை ஏது? அவள் கணவனை மதிக்கிறாளா? அவனும் ஒரு பேடி. எப்போதும் மைத்துனனைச் சுற்றிச் சுற்றி வருகிறாள். எதற்கு எடுத்தாலும் ஷியாமு ஷியாமு.—இந்தக் கால முரட்டுப் பெண்களை யாரால் வைத்துக் கொண்டு அழ முடியும்........" இப்படி எண்ணினாள் மாமியார்.

ருக்மணி பிரயாணத்திற்குத் தயாராகி அறையை விட்டு வெளி


உயர்ந்த பதிப்பு! அழகிய முகப்பு!!

**பாரதியார் கவிதைகள்**

**மகாகவி சுப்பிரமணிய பாரதியின்**

தேசிய கீதங்கள், தெய்வப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், முப்பெரும் பாடல்கள் ஆகிய நான்கு பாகங்களும் அடங்கியது.

**648 பக்கங்கள். கலிகோ பைண்ட்**

ஸ்ரீமகளின் சிறந்த பதிப்பு!

**விலை ரூபாய் ஆறு**

**வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு.**

**ஸ்ரீமகள் கம்பெனி**

சென்னை—1.

டய வந்ததும் அவள் கூச்சலிட்டாள்:

"எங்கு செல்கிறீர்கள் மகாராணியாரே! என்னிடம் ஒரு வார்த்தையேனும் கேட்டிருக்கலாமே.'

ருக்மணி ஒன்றும் கூறவில்லை. ஷியாம்தானே, "அம்மா! அண்ணி பிறந்தகம் செல்லுகிறுள். அவளை ஆசீர்வாதம் செய்யுங்கள். அவள் அன்னை நலமுடன் இருக்க பிரார்த்தியுங்கள்," என்றுன்.

"ஓ நீயா—?" அவள் ஷியாமை வெறித்துப் பார்த்தாள். "அதனுல் தான் நீ விவாகம் செய்துகொள்ள மறுக்கிருயா? நீ எத்தனை பெண்களை மனைவியாக்கிக்கொள்வாயோ? ஆகாயத்தை உதைப்பவன் போலப் பேசுகிருயே! இந்த வெட்கங்கெட்ட காட்சிகளைக் காண எனது கண்கள் ஏன் பார்வை இழந்துவிடவில்லை?"

"கண்கள் பார்வை இழக்க வேண்டாம், அம்மா! நீங்கள் கண்களை மூடிக்கொண்டு இருங்கள் போதும். இந்த வெட்கங் கெட்ட காட்சிகள் அப்போது காண முடியாது" என்றுன் ஷியாம்.

அவள் முணு முணுத்தவாறு தனது அறைக்குச் சென்று விட்டாள்.


## கலைமன்ற சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| வருடச் சந்தா | 12—0 |
| ஆறு மாதச் சந்தா | 6—0 |
| வெளிநாடு | |
| வருடச் சந்தா | 13—0 |
| ஆறு மாதச் சந்தா | 6—8 |


ரிக்ஷா வந்ததும் அவளது பாதங்களைத் தொட ருக்மணி சென்றதும் அவள் கதவை மூடித் தாளிட்டுக் கொண்டாள். ருக்மணி சிறிது நேரம் வரை கதவைத் தட்டினுள். ஷியாம் அவளது கையைப் பிடித்து இழுத்துச் சென்று ரிக்ஷாவில் உட்கார வைத்தான்.

* * *

ருக்மணியின் அன்னை சுகம் பெற்றதும், அவளது கணவனே சென்று அவளை அழைத்துக் கொண்டு வந்தான். ருக்மணி தனது மாமியார் கிணற்றருகில் கண்மூடியவாறு, "பஜனை" செய்து கொண்டிருப்பதைக் கண்டு அதிசயித்தாள்.

ருக்மணி அவளது பாதங்களில் விழுந்து வணங்கச் சென்றதும் அவள் தனது கால்களை இழுத்துக் கொண்டாள்.

"நீ புனிதமற்றவள்; என்னைப் பாவக் கைகளால் தொட வேண்டாம்."

ருக்மணி ஒன்றும் புரியாமல் திகைத்தாள். அவளது கணவன் கண்ணடித்து சைகை செய்ததும் அவள் உதடுகளில் புன் சிரிப்புத் தவழ்ந்தது.

சுற்றத்தார்களும், ஊராரும் ருக்மணி, ஷியாமுடன் கள்ள நட்புக் கொண்டுள்ளதாக வதந்திகள் கிளப்பினர்கள். மாமியாரும் நம்பி விட்டாள்.

ஆனல் ருக்மணி இவைகளைக் கேட்டுச் சஞ்சலமடையவில்லை. அவளது கணவனும் இவைகளைச் செவி சாய்த்துக் கேட்கவில்லை.

# வளர்மதி

## — கிருஷ்ணகுமாரி

1 - AUG 56
MADRAS

கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்கவே, வசந்தி வேகமாக வந்து கதவைத் திறந்தாள். வெளியே அன்பழகன் நின்று கொண்டிருந்தான். முகத்தைச் சுளுக்கிக் கொண்டாள் வசந்தி. "வசந்தி அக்கா, இதையாவது படிச்சுப் பாருங்க. வளர்மதி அக்கா கொடுத்துவிட்டு வரச் சொன்னாங்க என்று பரிதாபமாகக் கூறியபடியே அவளுடைய கையில் ஒரு கடிதத்தைத் திணித்து விட்டுச் சிட்டாய்ப் பறந்துவிட்டான் அன்பழகன். வேண்டா வெறுப்பாகக் கடிதத்தைப் பிரித்தாள் வசந்தி.

திருமங்கலம்
டிசம்பர் 20.

அன்புள்ள வசந்தி,

ஆம், நீ என்றும் என் அன்புள்ள வசந்திதான். ஆனால் வசந்தி, சந்தர்ப்பத்தின் சதியால் நீ இப்பொழுது என்னை வெறுக்கிறாய். நான் கொடுத்தனுப்பிய கடிதங்களையெல்லாம் எனக்கே திருப்பி அனுப்பி விட்டாய். வசந்தி, இது என்னுடைய பதினைந்தாவது கடிதம். இதையாவது நீ படிப்பாய் என்று நான் நம்புகிறேன். என் வசந்தி அவ்வளவு கல் மனம் படைத்தவளல்ல. நம்மிருவருக்கும் எதற்காகச் சண்டை வந்தது என்பதை நினைத்தால் இப்பொழுதுகூட என் உடல் நடுங்குகிறது. பயத்தால் அல்ல; துயரத்தால்.

'செலக்ஷ'னின் பொழுது தமிழ்ப் பரீட்சையன்றுதான் 'அது' நடந்தது. தமிழ்ப் பரீட்சை எழுதிவிட்டு நாம் இருவரும் வெளியே வந்தோம். அப்பொழுது நான் உன்னிடம் என் தந்தைதான் தமிழ் பரீட்சை விடைத் தாட்களைத் திருத்தப் போவதாகக் கூறினேன். உடனே உன் முகம் மலர்ந்தது. நீ உடனே என்னிரு கைகளையும் பிடித்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாய். நான் திகைத்தேன். காரணம் வினவிய பின் நீ விம்மியவாறே, "வளர்மதி நான் உன்னை ஒரு உதவி கேட்பேன், செய்வாயா?" என்றாய். முடியுமெனில் நான் செய்யத் தயார் என்றேன். உடனே நீ, "வளர்மதி, நீ செய்யமுடியாத உதவியை நான் செய்யும்படி சொல்வேனா? எளிதான உதவிதான். நான் தமிழ்ப் பரீட்சை நன்றாகவே எழுதவில்லை. எதற்கும் இருக்கட்டுமென்று உபாத்தியாயர் இன்று பரீட்சை எழுத நமக்களித்த சீல் வைத்த பேப்

பரில் ஆறு, உபாத்தியாயருக்குத் தெரியாமல் எடுத்து வைத்திருக்கிறேன். அதில் சரியான தமிழ் விடைகளை எழுதி உன்னிடம் தருகிறேன். நீ உன் தந்தை வைத்திருக்கும் கட்டில் அதை வைத்து விட்டு, என்னுடைய பழைய விடைப் பேப்பரை எடுத்து என்னிடம் கொடுத்து விடு" என்ருய். நான் வெறிபிடித்தாற் போல "முடியாது வசந்தி. முடியவே முடியாது" என்று கதறினேன். நீ உடனே 'விருட்' டென்று போய் விட்டாய். நான் மறுநாளும், அதற்கடுத்த நாளும் உன் வீட்டிற்கு வந்தேன். ஆனல் நீ என்னைக் கண்டதுமே 'தடா' லென்று சாத்தித் தாழிட்டாய். நான் துயரத்துடன் வந்துவிட்டேன். அதற்குப்பின் நான் என் தம்பி அன்பழகனின் மூலம் பல கடிதங்கள் உனக்குக கொடுத்தனுப்பினேன். ஆனல் நீ எல்லாவற்றையும் அவனிடமே திருப்பிக் கொடுத்து விட்டாய், பிரித்துக் கூட பார்க்காமல். வசந்தி, நான் இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவிக்கிறேன். ஒரு புறம் தந்தை, மற்ருெருபுறம் தோழி. தந்தைக்குத் துரோகம் செய்ய மனம் கூசுகிறது. தோழிக்கு உதவி செய்ய முடியவில்லையே என மனம் வெதும்பித் துடிக்கிறது.

வசந்தி, நாம் இருவரும் எவ்வளவு இணைபிரியாத் தோழிகளாக இருந்தோம்! என்னை யாராவது இகழ்ந்தால் உனக்குப் பொறுக்காது! உன்னை யாராவது இகழ்ந்தால் எனக்குப் பொறுக்காது! நாமிருவரும் உடை, அலங்காரம் எல்லா விதத்திலும் ஒரே மாதிரி இருக்கப் பழகிக்கொண்டோம். ஏன்? எழுத்திலும் கூடத்தான். உன்னுடைய முத்து முத்தான எழுத்துப் போலவே என்னையும் எழுத ஊக்குவித்தாய். இப்பொழுது நம்மிருவருடைய எழுத்தும் ஒரே மாதிரியாக இருக்கிறது! இவ்விதங்களால் நாம் எத்தனைபேரின் பொருமைக்கு இலக்கானேம்! வசந்தி, நீ உன் அன்புத் தோழியை மறந்து விட்டாயா? நடந்ததை மறந்துவிடு. நாம் முன்போல இணைபிரியாத் தோழிகளாக இருப்போம்.

உன் வரவை ஆவலுடன்
எதிர்நோக்கும் அன்புத் தோழி,
வளர்மதி.

அக் கடிதத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிந்தாள் வசந்தி. காகிதத்தையும், பேனவையும் எடுத்துக் கொண்டு மேஜையருகில் உட்கார்ந்தாள். வளர்மதிக்குக் கடிதம் எழுதலானுள்.

வளர்மதி,

நான் உன்னை 'அன்புள்ள வளர்மதி' என்று அழைக்க விரும்பவில்லை. என்மேல் உனக்குத் துளியேனும் அன்பு இல்லை. அன்பிருந்தால் அக் காரியத்தைச் செய்ய நீ தயங்கமாட்டாய். நீ சம்மதித்தால் நான் உன் வீட்டிற்கு வருகிறேன். உன் முடிவைப் பதிலில் தெரிவி. நான் இன்னும் அரை மணியில் என் அண்ணனுடன் கொடைக்கானல் செல்லப் போகிறேன். உடன் பதில். —வசந்தி—

வாசலில் விளையாடிக் கொண்டிருந்த அன்பழகனிடம் கடிதத்தைக் கொடுத்தனுப்பினுள் வசந்தி.

சிறிது நேரத்திற்கெல்லாம் வளர்மதி வந்தாள். 'உன் முடிவென்ன?' என்றாள் ஒரே வார்த்தையில் வசந்தி. வளர்மதியின் முகம் வேதனையால் சுருங்கியது. "வசந்தி, இந்த அற்பக் காரணத்தினால் நம்முடைய நீண்ட நாளைய நட்பைச் சுட்டுச் பொசுக்கி விடாதே. வேண்டாம் வசந்தி, இதோ உன் அருமைத் தோழியை மறந்து விட்டாயா?" "நிறுத்து. உன் முடிவைச் சொல்லு." வளர்மதி பெருமூச்சு விட்டாள். பதிலே பேசவில்லை. வசந்தியின் ஆத்திரம் எல்லை மீறியது. வாயிற்படியிலிருந்து வளர்மதியைப் பிடித்துத் தள்ளினாள். வளர்மதியின் கை கருங்கல் சுவர் மூலையில் போய் முட்டியது. கதவைப் 'படீ'ரென்று சாத்திக் கொண்டு சென்றுவிட்டாள் வசந்தி. சிறிது நேரத்திற்குப்பின் கொடைக்கானல் பிரயாணத்திற்காக அவள் பெட்டியுடன் வாசலுக்கு வந்த பொழுது அங்கு வளர்மதி இல்லை! அவளுடைய உடைந்துபோன கை வளையல்கள் அங்கு சிதறிக் கிடந்தன!

கொடைக்கானலில் தங்கள் பங்களாவில் அமர்ந்தபடி அன்று வந்திருந்த தினசரியைப் புரட்டினாள் வசந்தி. அதில் வந்திருந்த விளம்பரம் ஒன்று அவள் கவனத்தைக் கவர்ந்தது. 'பொங்கல் விழா'வைப் பற்றிய கட்டுரை ஒன்றைச் சிறந்த முறையில் எழுதுபவர்களுக்கு 500 ரூபாய் பரிசு என்பதே அந்த விளம்பரம். வசந்தியின் கண்கள் அவ் விளம்பரத்தைப் 'பன்முறை படித்தன

அவளுடைய மனம் அப் போட்டியில் தானும் கலந்து கொள்ளத் துடித்தது. 'வளர்மதியும் இப் போட்டியில் கலந்துகொள்வாள். அவளுக்குத்தான் பரிசு கிடைக்கும்' என்று மனதிற்குள் மெல்ல முணு முணுத்தாள் வசந்தி. ஆனாலும் ஆசையினால் அவள் ஒரு கட்டுரை எழுதி அனுப்பினாள்.

நாட்கள் ஓடின. அவள் வளர்மதியின் குணத்தை எண்ணி எண்ணிப் பொறுமினாள். அன்று ஒரு நாள் அவள் சற்றேனும் எதிர்பார்க்காத தந்தி ஒன்று வந்தது. 'ஸெலக்ஷன்' பரீட்சையில் முதல் மார்க்கு வாங்கியதால், அவளுக்கு இன்னும் இரண்டு நாட்களில நடைபெறபபோகும் வருட விழாவன்று 100 ரூபாய் பரிசளிக்கப் போவதாகவும், உடனே புறப்பட்டு வரும்படியும் பள்ளியிலிருந்து வந்த தந்திதான் அது. சற்று நேரம் பிரமித்து நின்றாள் வசந்தி. அவளுக்கு அத் தந்தி பேராச்சரியத்தை உண்டாக்கியது. 'ஒரு வேளை வளர்மதி ஏதாவது......' என்று எண்ணினாள் வசந்தி. ஆனால் மறுகணமே, 'சே சே வளர்மதியாவது, நமக்கு உதவி செய்வதாவது! நான் நன்றாகத்தான் விடைகள் எழுதியிருக்கிறேன். ஆனால் வீண் பயத்தால்தான் நான் வளர்மதியிடம் கெஞ்சியிருக்கிறேன்' என்று எண்ணமிட்ட பொழுது வசந்தியின் முகத்தில் கர்வம் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

அன்றே அவள் தன் அண்ணனுடன் ஊருக்குக் கிளம்பினாள். அன்று மாலை அவள் தன் ஊரை அடைந்து, தன் அண்ணியுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது வெளியே அன்பழகன் கூப்பிட்டான். முகத்தைச் சுளுக்கியவாறே வாசலுக்கு வந்தாள் வசந்தி. அன்பழகன் ஒரு குறிப் பெழுதும் புத்தகத்தை அவள் கையில் கொடுத்தான். "வசந்தி அக்கா, 'நான் இருக்கும் பொழுதுதான் வசந்தி உண்மையை அறிந்து கொள்ளவில்லை. நான் போன பிற்பாடாவது அவள் உண்மையை உணர்ந்துகொள்ள இக் குறிப்பெழுதும் புத்தகத்தை அவளிடம் அளித்துவிடு' என்று வளர்மதி அக்கா சொன்னாங்க." அன்பழகன் சென்றுவிட்டான். வெகு நேரம் வரை பிரமித்து நின்றாள் வசந்தி. 'நான் போன பிற்பாடாவது......' இதற்கென்ன அர்த்தம். ஒருவேளை ...... என்னவோ அவள் உடல் நடுங்கியது. வேகமாகத் தன் அறைக்கு ஓடிவந்து கதவைத் தாளிட்டுக் கொண்ட வசந்தி, அந்த டைரியை மேஜையின் மேல் எறிந்துவிட்டு விம்மி விம்மி அழலானாள். அவள் எவ்வளவு நேரம்

## உணவுப் பொருளைச் சூடாக்காமல் பாதுகாக்க வழி

ஈஸ்ட்லான்சிங், மிச்சிகன் கல்லூரியில் ஒரு இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கருவிகளுள் இது மிகவும் முற்போக்கானது. இது உணவைச் சூடாக்காமலே பாதுகாக்கிறது. உணவுப் பொருள்களைக் கெடுக்கும் பூச்சிகளை அந்த இயந்திரம் கொன்ற வண்ணமாயிருக்கிறது; உணவுப் பொருள்கள் நெடுங் காலம் கெடாமல் வைத்துக்கொள்ள அது துணைசெய்கிறது.

அழுதாளோ், அவளுக்கே தெரியாது! காற்றினல் டைரி பிரிந்து கிடந்தது. அதில் ஏதோ குறிப்பெழுதி யிருந்தாள் வளர்மதி. ஆவலுடன் அதை எடுத்துப் படிக்கலானுள் வசந்தி.

டிசம்பர் 20:- வசந்திக்கு நான் எத்தனையோ கடிதம் கொடுத்தனுப்பினேன். ஒன்றிற்காயினும் பதிலில்லே. எனவே இன்று நீண்ட கடிதமொன்று கொடுத்தனுப்பினேன். அவள் எழுதி யனுப்பிய பதிலிலிருந்து அவள் கோபம் இன்னும் தணியவில்லை யென்று தெரிந்தது. நானே கிளம்பினேன். ஆனல் வசந்தியின் கோபம் தணியவில்லை; எல்லை மீறியது. என்னைத் தள்ளிவிட்டுக் கதவைச் சாத்திவிட்டாள். என் கை கருங்கல் சுவரின் கூரான மூலையில் இடித்ததால் வளைகள் உடைந்தன. கண்ணுடித் தூள் ஒன்று என் கையைக் கிழித்துவிட்டது. நான் வீடு திரும்பினேன்.

டிசம்பர் 23:- நான் கையில் ஏற்பட்ட காயத்தைச் சிறு காயம் தானே என்று இரண்டு நாட்களாக அலட்சியம் செய்துவிட்டேன். அது எவ்வளவு பெரிய தவறு! காயத்தில் சீழ் பிடித்துவிட்டது. சிறு கொப்புளம் ஒன்று கூடக் கிளம்பிவிட்டது. ஆனல் அது தானுக உடைந்துவிடுமே என்றே கருதுகிறேன். அப்பாவிடம் இதைக் கூறவேயில்லை. கூறினல் பிரமாதப்படுத்தி விடுவார்.

டிசம்பர் 25:- வசந்தி ஒரு கடிதம் கூட எழுதவில்லை. அவளுடைய இந்தப் பராமுகம் என்னை அணு அணுவாய்க் கொல்கிறது. அப்பா இன்று தமிழ் விடைத்தாட்களைத் திருத்த ஆரம்பித்துவிட்டார். என்னுள் ஏதோ வெறி கிளம்பிவிட்டது. அப்பா ஏதோ காரியமாக வெளியே சென்றார். நான் பேப்பர்க் கட்டின் அருகில் சென்றேன். மின்னல்போல் ஒரு யோசனை உதித்தது. என்னுடைய நம்பர் 37. வசந்தியின் நம்பர் 73. நான் வசந்தியின் பேப்பரை எடுத்தேன். பேப்பரை இரண்டாக மடித்து ஒரு பககத்தில் நெ. 73 என்று எழுதியிருந்தாள். நான் பின் பக்கத்தில் பேனவால் நம்பர் 37 என்று எழுதி, நான் எழுதியதை இலேசாக அடித்துவிட்டேன். பின் என்னுடைய பேப்பரை எடுத்தேன். முன் செய்தது போலவே மற்ருெரு பக்கத்தில் ஒரு நம்பரை—ஆனல் வசந்தியின் நம்பரை—எழுதி அடித்துவிட்டேன். இதிலிருந்து வசந்தியின் பேப்பரில் என் நம்பரையும், என் பேப்பரில் வசந்தியின் நம்பரையும் நான் எழுதிவிட்டதாக அப்பா எண்ணிக் கொள்வார். அப்படி எண்ணவேண்டுமென்றுதானே நான் இவ்வளவும் செய்தேன். அப்பா வந்தார். சிறிது நேரத்திற்


# இலக்கிய நூல்கள்

| | ரூ. அ |
|---|---|
| திருக்குறள் பரிமேலழகர் உரை | 5 0 |
| திருக்குறள் விளக்கவுரை ... | 3 8 |
| திருக்குறள் சிறப்புரை ... | 1 4 |
| திருக்குறள் மூலம் ... | 0 8 |
| விவேக சிந்தாமணி மூலமும் உரையும் ... | 0 8 |

ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை—1

'கெல்லாம் என்னைக் கூப்பிட்டார். 'இது ஏன் இப்படி அடித்திருக்கிறது?' என்றார். அவர் கையில் வசந்தியின் பேப்பரும், என் பேப்பரும் இருந்தன. 'இந்தப் பேப்பர் யாருடையது?' என்றார். நான் கூறினேன். அவர் என் தந்திரத்தை நம்பிவிட்டார். அதாவது வசந்தியின் பேப்பரில் நான் என் நம்பரையும், என் பேப்பரில் வசந்தியின் நம்பரையும் எழுதிவிட்டதாக நம்பினார். ஆத்திரம் அளவுக்கு மீறிவிட்டது. தன் கையிலிருந்த அட்டை ஒன்றை என்னை நோக்கி எறிந்தார். குறி தவறவில்லை. அட்டையிலிருந்த க்ளிப்பின் கூரிய முனை என் கைக் கொப்புளத்தில் பதிந்தது. நான் அலறினேன்.

டிசம்பர் 30:- கையில் கொப்புளம் இன்னும் ஆறவில்லை. உள்ளூர் டாக்டர் இன்று கையை விரித்துவிட்டார். மதுரையில் பெரிய டாக்டரிடம் செல்லவேண்டுமாம்.

ஜனவரி 3:- புதிதாக வந்த டாக்டர் காயத்தைப் பார்த்ததும் உதட்டைப் பிதுக்கினார். 'எதற்கும் என் சக டாக்டரை வரவழைக்கிறேன்,' என்றார்.

ஜனவரி 5:- புதிதாக வந்த டாக்டர் என் காயத்தைப் பார்த்தார். 'ஐயோ, இரண்டு நாட்களுக்கு முன்பே தகவல் கொடுத்திருக்கக்கூடாதா?' என்றார். 'நம்பிக்கைக்கு இடமில்லை', என்றார். நான் சாவதற்கு அழவில்லை. ஆனால் என் இன்னுயிர்த் தோழி வசந்தியைப் பார்க்காமல் சாகிறேனே என்றுதான் அழுகிறேன். இன்னும் 'இரண்டு நாளோ அல்லது மூன்று நாளோ...?' இன்று தினசரியில் கட்டுரைப் போட்டி வந்திருக்கிறது. 'உன் பெயரில் கட்டுரை நான் எழுதிவிடவா?' என்றார். அவர் அப்பாவா? எனக்கே ஆச்சரியமாயிருந்தது. எலும்பும் தோலுமாக, உருமாறிவிட்டார். 'நானே என் வளர்மதியைக் கொன்றுவிட்டேன்' என்று புலம்புகிறாராம். ஐயோ, அப்பா! பரீட்சைக் கேள்விகள் எழுதி வைத்திருந்தால் என்னை அருகில் அண்ட விடாத அப்பாவா இப்படிக் கேகிறார்? வசந்தி—என் வசந்தி—நான் உன்னைக் காணாமலேயா சாகப் போகிறேன்.......

வசந்தியின் கண்களிலிருந்து வழிந்த நீர் டைரியை நனைத்தது. அதற்குப்பின் குறிப்பே காணப்படவில்லை. வசந்தியின் உள்ளம் நடுங்கியது. "ஐயோ வளர்மதி." அவள் அலறினாள். "வசந்தி." யாரோ கதவைத் தட்டினார்கள். வளர்மதியின் குரலல்லவா அது? வசந்தி கதவைத் திறந்தாள். வளர்மதி நின்று கொண்டிருந்தாள். "வளர்மதி, நீயா? நீ ஒப்புயர்வற்ற தியாகி, வளர்மதி." வசந்தி விம்மினாள். "வசந்தி, சென்னை டாக்டர் ஒருவரால் என்னைக் குணப்படுத்த முடிந்தது. வசந்தி, கட்டுரைப் போட்டியில் உனக்குத்தான் முதற் பரிசு. நான் கட்டுரை அனுப்பவில்லை. நான் இங்கு இருக்கும் பொழுதுதான் நீ என்னை 'அலட்சியம் செய்தாய். எனவே நான மதுரை சென்றபின் டைரியை உன்னிடம் அளிக்கும்படி அன்பழகனிடம் மதுரையிலிருந்து கொடுத்தனுப்பினேன்" என்றாள் வளர்மதி. வசந்தி இன்னும் விம்மிக் கொண்டுதானிருந்தாள். அவளுடைய வாய் முணு முணுத்தது. 'வளர்மதி, உன் தோழியாக இருப்பதில் நான் உண்மையாகவே பெருமைப் படுகிறேன்.'

# பறந்து காட்டிய தீரர்

ஏ.எம்.ராசா

இன்று கடல்களையும், கண்டங்களையும் கடந்து செல்கிறது விமானம். அது செயற்கரிய செயல் என்று எண்ணுவார் சிலர்.

இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையோ வேறு. நெடுந் தூரம் பறப்பது அன்று ஆபத்தானதாகத் தோன்றியது. சமுத்திரத்தை விமானத்தில் தாண்டுவதா? அப்படி நடந்தால் அது ஒரு பேரதிசயமாகும் என்றார்கள் பலர். அதைப்பற்றி நினைக்கவும் அக்காலத்தில் அஞ்சா நெஞ்சம் வேண்டும். அப்படிப்பட்டவர்களே நியூயார்க்கிலிருந்து பாரிஸுக்குப் பறக்கலாம் என்று எண்ணினார்கள். ஆயினும் அது நடைபெறக் கூடியதென்று பொதுமக்கள் நினைக்கவில்லை. அவர்களைச் சொல்லவும் குற்றமில்லை; ஏனெனில், அட்லாண்டிக் கடலைத் தாண்டும் பொருட்டுச் செய்த முயற்சிகளெல்லாம் அதுவரை வீண் முயற்சியாகவே போய்விட்டன.

கேப்டன் ரெனி பாங்க் என்னும் பிரெஞ்சுக்காரரின் விமானத்துக்குத் தரையிலிருந்து எழும்போதே விபத்து ஏற்பட்டது. விமானத்தைச் செலுத்தியவரும், ரேடியோ இயக்குவோரும் தீக்கிரையானார்கள்.

அமெரிக்கக் கடற் படையைச் சேர்ந்த நோயல் டேவிஸும், ஸ்டான்டன் வூஸ்டரும் பறந்து சோதனை பார்த்து மாண்டார்கள். அவர்களது விமானத்தின் பெயர் "அமெரிக்கன் லீஜன்."

வட துருவம் காணச் சென்ற குழுக்களுள் வெற்றிபெற்ற முதல் குழுவின் தலைவர் ரிச்சார்ட் பைர்ட் என்பவரின் விமானம் சோதனைக்காகப் பறந்தபோதே சேதமாயிற்று.

1927, மே 9-ந் தேதி பாரிஸிலிருந்து நியூயார்க்குக்குப் பறக்க முயன்ற சாலஸ் நுஸ்கெஸரும் பிரான்காய் கோலியும் மாண்டனர்.

எனினும் செய்தற்கரிது செய்யப்பட்டது; கனவு நனவாயிற்று. தளராத முயற்சியும், தயங்காத உறுதிப்பாடும், துணிந்தபின் துளங்காத உள்ளமும் தோல்வி காண்பதுண்டோ?

1927-ம் ஆண்டில் விமானத் துறையில் அமெரிக்கா முற்போக்கடையவில்லை. ஐரோப்பா விமானத் துறையில் தீவிர முன்னேற்றமடைந்துவந்த காலத்தில் அமெரிக்கா அதன் ஆற்றலை உணர்ந்ததென்று உரைக்க முடியாது. விமானங்கள் பிரயாணிகளை மிகவும் அபூர்வமாக ஏற்றிச் சென்றன. விமானத் தபால் முறை அப்பொழுதுதான் ஆரம்பமாகியிருந்தது.

சென்ட் லூயிஸிலிருந்து சிக்காகோவுக்குத் தபால் கொண்டு போகும் விமானி ஒருவர் வழக்கம் போல் போய்க் கொண்டிருந்தார். நிலவொளி வீசியது; பறப்பதும் இனிதாயிருந்தது. அது கனவு காண்பதற்குத் தகுந்த இரவு. அவர் ஒரு பெருங் கனவு கண்டார். அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின்

அக்கரைக்கு, நியூயார்க்கிலிருந்து பாரிஸுக்கு நிற்காமல் பறந்து செல்லலாமே! எண்ணி மகிழ்வதற்குரிய எண்ணம் அது.

இவ்வாறு துணிந்து சென்ற விமானங்கள் நொறுங்கின. துணிந்தவர்கள் கண்டது தோல்வியே. இந்நிலையில் அந்த வாலிப விமானி எண்ணியதை முடிக்கத் துணிந்தார். பளுவில்லாத விமானத்தில் தனிமையாய்ப் பறந்து அக்கரை சேர்வதென்று அவர் உறுதி செய்தார். ஒரு சிறிய விமானத்தில் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடக்கும் வழிகண்டு தனியே பறக்க அவர் கருதியதை மற்றவர்கள் எள்ளி நகையாடினார்கள். பல என்ஜின்களைக் கொண்ட விமானங்கள் வெற்றிபெறவில்லை. அவ்வாறிருப்ப, பளுவில்லாத சிறிய விமானத்தில் தனியே பறந்து வெற்றி காண முடியுமோ? முடியாதென்று அவர்கள் நினைத்தார்கள். அநுபவம் முதிர்ந்த விமானிகளின் கருத்துக்கு ஒவ்வாத காரியம் அல்லவா அது?

ஆயினும் அந்த விமானி அதற்கு முன் முயன்றவர்களின் தோல்வியை எண்ணி அஞ்சவில்லை; மற்றவர்களது பேச்சைக் கேட்டு மடங்கவில்லை; வேறு ஒன்றையும் நோக்காமல், தன்னந் தனியே கடல் கடந்து கரை காணும் கருமமே கண்ணயினர். செண்ட் லூயிஸிலுள்ள எண்மர் அவர் முயற்சிக்குப் பொருள் வழங்க இணங்கினர். கனவு நனவாகும் காலம் நண்ணியது.

1927, மே 20-ந் தேதி விடியுமுன் சார்ல்ஸ் லிண்ட்பெர்க் என்னும் அவ்வீரர் நியூயார்க்கிலிருந்து தமது 220 குதிரைத் திறன் விமானத்தில் கிளம்பி விட்டார். மேகங்களையும், காற்றையும் பொருட்படுத்தாமல் விமானம் விண்ணிற் பறந்தது. 33 மணி நேரத்தில் 3, 600 மைல் கடந்து அவர் பாரிஸில் இறங்கினர். பாரிஸ் மக்கள் தங்கள் இயல்புக்கேற்ப, மிகுந்த ஆரவாரம் செய்து அவரை வரவேற்றார்கள். அச்சமயத்தில் அம் மக்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சிக்கு ஓர் அளவில்லை. அந்த அமெரிக்கர் கண்ட வெற்றியைப் பாராட்டி, ஊக்கமும் உணர்ச்சியும் ததும்ப, அவர்கள் என்றும் இல்லாத ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

விமானத் துறையில் அமெரிக்காவுக்கு முதன்மை வழங்கியவர் லிண்ட்பெர்க். விமானத் துறையில் மேம்பாடுற்று விளங்குவதால் என்னென்ன நலன்கள் விளையக் கூடுமென்பதை அவர் தெளிவாக எடுத்துரைத்தார். விமானத்தின் மூலமாய் வியாபாரம் நடக்க முடியும் என்பதையும் அவர் விளக்கினர். அமெரிக்காவில் அவர் எங்கும் சென்று விமானத்தைப் பற்றிய தமது செய்தியைச் சொன்னர். மக்கள் அவர் பேச்சைக்கேட்டு ஊக்கம் பெற்றார்கள். விமானத் துறையில் விருப்பம் மிகுந்தது. எனவே விமானத் தொழில் விருத்தியடைவதாயிற்று.

---

வாலிபன்: (ஒரு பெண்ணை நோக்கி) உன்பெயர் என்னம்மா?

அப்பெண்ணுக்குப் பக்கத்திலிருப்பவள்: சொல்லாதேடி கமலம். நீ வா. வீட்டிற்குப் போகலாம்.

—ஆர். நடராஜன்
திருவத்திபுரம்

# அழகு எரிந்தது

T.A. துரைராஜன்

கிரிஜாவுடனே உரத்த குரலிலே உல்லாசமாக உரையாடுவாள். என்னைக் கண்டு விட்டால் அவ்வளவுதான் அத்தனை கலகலப்பும் எங்கோ மறைந்து விடும். என்னை நிமிர்ந்துகூடப் பார்க்க மாட்டாள். என் பார்வையின் கோணத்திலே கூட உட்கார மாட்டாள். அவளுடைய அந்தக் கூச்சத்தை எப்படியாவது தீர்த்து விடுவது என்று முடிவு கட்டினேன்.

ஒருநாள் குமுதா தனியாக வந்தாள். கிரிஜா உள்ளே ஏதோ காரியமாக இருந்தாள். குமுதா டெலிபோன் டைரக்டரியைப் புரட்ட ஆரம்பித்தாள். வெகு நேரம்வரை புரட்டிக் கொண்டே இருந்தாள்.

"என்ன நம்பர் வேணும் குமுதா?" என்றேன்.

திடுக்கிட்டுத் திரும்பினாள் குமுதா! அவளது முகத்திலே அப்போது ஏற்பட்ட பர பரப்பைப் பார்க்க வேண்டுமே! எப்படியோ சமாளித்துக் கொண்டு, "உட்லன்ஸ் நம்பர்," என்றாள்.

"2,600," என்று சற்றும் தயங்காமல சொல்லி விட்டுப் பக்கத்தில் கிடந்த சோபாவில் சாய்ந்தேன்.

குமுதா நம்பரைத் திருப்பினாள்.

"உட்லன்ஸ்தானே," என்று கேட்டவள் முகம் அடுத்த விநாடி எப்படி மாறி விட்டது தெரியுமா? அவமானமும் ஆத்திரமும் கலந்த குரலில்—"இப்பவே பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப் பார்க்கிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டே விர்ரென்று போய் விட்டாள்.

என்ன இருந்தாலும் நானப்படி அவளுக்குப் பைத்தியக்கார ஆஸ்பத்திரி நம்பரைச் சொல்லியிருக்கக் கூடாதுதான்.

கடிகாரத்தை ராணி தன் கருத்திலேயே வைத்திருப்பாள் போலி

ருக்கிறது, மாலை ஐந்து மணியாவது எப்படித்தான் தெரியுமோ? அவளுக்கு என் காரின் இஞ்சின் சப்தம் அவளுக்குப் பழக்கப்பட்டு விட்டது. நான் வெளியே புறப்படுகிறேன் என்றால், ராணி நிச்சயம் தன் வீட்டின் மெயின் கேட்டில் நிற்பாள். இந்தத் தெருக்கூத்துப் பல நாட்கள் நடந்துகொண்டே வந்தது.

கார் வள வளப்பான தார் ரோட்டிலே ஒய்யாரமாகப் போய்க்கொண்டிருக்கும் போதே திடீரென்று கரடு முரடான மண் ரோடு வந்து விடுவது போல் எங்கள் காதல் நாடகத்திலே ஒரு தனிக் காட்சி மாற்றம் ஏற்பட்டது.

ராமநாதன்—என்னுடன் மெடிகல் காலேஜிலே படித்த லேடி டாக்டர் மதிவதனுவின் கணவர். அவரிடம் எப்போதுமே ஒரு தனி மரியாதை, மதிப்புக் காட்டி வந்தேன்.

ராமநாதன வீட்டிற்கு வந்தார். என்னென்னவோ சுற்றி வளைத்துக் கடைசியில் ராணியின் பேச்சு வந்தது. எங்கள் உறவை எப்படியோ தெரிந்து கொண்டு அதைப் பற்றி எங்களிடமே நேரடி நடவடிக்கை எடுக்க வந்து விட்டார்.

"டாக்டர் சுகுமாருக்கும் ராணிக்கும் தொடர்பு என்று யாருமே சொல்ல மாட்டார்கள்; மாரீஸ் காரிலே போகிற மனிதனுக்கும், ராணிக்கும் தொடர்பு என்றுதான் பேசுவார்கள். சுகுமார் உங்களுக்கு உங்கள் மதிப்பே தெரியவில்லை. ராணி ஒரு எரிந்த மத்தாப்பு. மீண்டும், வண்ண ஒளி வீச முடியாது," என்றார் ராமநாதன்.

மனிதனின் சொந்த விருப்பத்திற்குக் குறுக்கே நிற்கும்போது தானே, அவனுடைய உண்மையான சொரூபம் தெரிகிறது. எனக்கு என்னவோ ராமநாதன் சற்று அளவு கடந்து தலையிடுவதாகத்தான் பட்டது. எதிர் வார்த்தையாட எனக்குத் தைரியமில்லை. ஆனாலும் நான் அவர் பேசுவதை விரும்பவில்லை என்று உணர்ந்து கொண்டார்.

"சுகுமார் உங்கள் இளமையின் வேகத்தில் அவசரப்பட்டு எதையும் முடிவு கட்டி விடாதீர்கள். ஆடையில் ஒருமுறை கிழிசல் ஏற்பட்டு விட்டால், அதை ஒவ்வொரு ஆணியும் முட்செடியும், கிழித்துக் கொண்டே இருக்கும். மனிதனுடைய நற்பெயரும் அப்படித்தான். அதை மட்டும் மறந்து விடாதீர்கள்," என்று என் உள்ள அமைதியைக் குலைத்து விட்டுச் சென்றார்.

ராணி தேன் தங்கிய மலரல்ல. வண்டு ருசித்த மலர் என்று எனக்குத் தெரியும். முல்லை மலர் எருக்கஞ் செடிமீது உதிர்ந்து கிடக்கிறது. அதை எடுத்துத் தொடுப்பது தவறு?

வாழ முடியாதவர்கள் என்று அவர்களை ஆக்கிய அக்கிரமக்காரர்கள் நாம்தானே. அவமானச் சின்னங்கள் அவர்கள் அல்ல. அந்த வீட்டின் வாசற்படிகளை மிதிக்கும்

**காதல் ஒரு தொடர்கதை!**

காதல் என்னும் தொடர்கதை உலகம் உள்ளவரை முடியவே முடியாது. இன்பமுடிவுகளும், சோக முடிவுகளும் பின்னிப் பின்னி வரும்' காதல் ஒரு தொடர்கதைதான்.

—கலைஞர் கருணாநிதி

ஆண்களல்லவா அவமானச் சின்னங்கள்.

தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில், தொழில் முன்னேற்றத்திற்காகவும், பொருள் வசதிக்காகவும், ராணியைப் போன்ற நடிகைகள் தவறுவது சகஜம்! அப்படிப்பட்ட அனுபவங்களை ராணி என்னிடம் ஒப்புக்கொண்டு மிருக்கிருள். அது மட்டுமல்ல, விபரமறிந்தது முதல் இதுவரை, அவளது வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள் அத்தனையும் மறைக்காமல் என்னிடம் கடிதம் மூலம் ஒப்புக்கொண்டிருக்கிருள். என்னிடத்தில்தான் அவளுக்கு எத்தனை நம்பிக்கை.

*　　*　　*

அவளுடைய சோகக் காவியம் என் மனச் சோர்வை எங்கோ இருந்த இடம் தெரியாமல் விரட்டி விட்டது. எனக்குத் தேவை ராணி. இந்த உலகமே எதிர்த்தாலும் எனக்கு என் ராணிதான் வேண்டும். முடிவு கட்டி விட்டேன்.

எங்கள் காதல் நாடகத்தின் இன்ப முடிவு ஏற்படப் போகிறது என்று நினைத்தேன். ஆனல் ராணியே தன் கடிதத்தின் மூலம் நாடகத்தின் முக்கியமான கட்டம் இப்போதுதான் ஆரம்பிக்கிறது என்று தைரியப்படுத்தினள்.

தபாலிலே வந்த அந்தக் கடிதத்தில்:—

அன்புள்ள அத்தானுக்கு, உங்களுக்கு அதிர்ச்சி தரும் செய்தியை எழுதப் போகிறேனே என்று என் மனம்படும் பாட்டை எழுத்தில் எழுத முடியாது. நம் தொடர்பை எப்படியோ அறிந்த குமுதா, என் உடன் பிறந்த சகோதரி—சகோதரியாவது சனியன், என்னை உங்கள் வீட்டுக்குப் போகக் கூடாது என்று கண்டிப்பாகத் தடை செய்து விட்டாள். மீறினல் அம்மாவிடம் சொல்லி விடுவாளாம். அந்தச் சண்டாளியின் கழுகுக் கண்களிலிருந்து நான் தப்பவே முடியவில்லை. பொறுமை இழந்து சகோதரியையே இப்படித் திட்டுகிருளே என்று நினைப்பீர்கள். அததான் உங்கள் ராணி பொறுமை சாலி தான். ஆனல் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு அல்லவா அத்தான் இனி நாம் கடிதம் மூலம் தான் உறவாட முடியும். உங்களுக்கு ஒரு மகிழ்ச்சிச் செய்தி சொல்லப் போகிறேன். நாளை எனக்கு தாஸ் பிக்சர்ஸில் ரிகர்ஸல். மாலை 5 மணிக்குத் திரும்புவேன். என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகில் சந்திக்கவும். பிறகு அனுமாக போகந்தான். மறுப்புக் கூற மாட்டார் என் மனதிற்கிசைந்தவர்.

உங்களைச் சந்திக்கத் துடிக்கும் உங்கள் ராணி!-என்று எழுதியிருந்தாள்.

*　　*　　*

எலியட்ஸ் பீச். கை ரேகை மறையும் நேரம். கடலின் அடிவானத்திலே, ஏதோ ஒரு கப்பல் மின்சார ஒளியுடன் மிதந்து கொண்டிருந்தது. குளிர்ந்த கடற்

## பொல்லாதது காதல்!

காதல்! அது பணக்காரர்களின் பங்களாக்களுக்குள் ஒளிந்திருக்கும் மாயமோகினி! ஏழையின் எட்டாப் பழம்! அது வெறுங்கானல்நீர்; நெஞ்சுக்குப் போதை தரும் பொல்லாதது.

—அகிலன்.

காற்று சிலு சிலுவென வீசிக் கொண்டிருந்தது. மெய் மறந்து ராணி என் மடியிலே துவண்டு கிடந்தாள்.

"இவ்வளவு சீக்கிரம் இப்படி வருவோம் என்று நினைத்தீர்களா அத்தான்?"

"கனவு கூடக் காணவில்லை ராணி," என்றேன் கர கரத்த குரலில்.

ராணி எனது முகவாய்க் கட்டையைத் தனது மலர்க் கரத்தால் தடவியபடியே, "அத்தான் நான் எழுதிய குறள் உங்களுக்குத் தெரியாதா?" என்றாள். மது உண்டவன் மயக்கத்திலே குழறுவது போலிருந்தது அவளது பேச்சு.

"என் குறள் புத்தகத்திலே காமத்துப் பாலே கிடையாது."

"என்ன கிடையாது! எங்கே அத்தான் வாங்கினீர்கள் அந்த அதிசயப் புத்தகத்தை," என்றாள் வியப்புடன்.

"பள்ளியிலே படிக்கும்போது பழைய புத்தகக் கடையிலே வாங்கிய பிரதி, காமத்துப் பால் கிழிந்து விட்டது," என்று சிரித்துக் கொண்டே, அவளது ஸ்டென்ஸர் கேக்கைப் போன்ற மூக்கை என் விரல்களால் வருடினேன்.

•

அவளது கரங்கள் என் கழுத்தைச் சுற்றி வளைத்துக் கீழே இழுத்தன. அவளது உஷ்ண மூச்சு என் முகத்திலே பட்டது. நான் மெதுவாக அவள் காதிலே—"இப்போதும் தாமதமாகிவிட வில்லை. ராணி. வள்ளுவனின் காமத்துப்பாலின் ஒவ்வொரு அதிகாரத்தையும் உன் ஒவ்வொரு அங்கங்களிலேயும் புதிய அர்த்தத்துடன் கற்றுக் கொள்ளட்டுமா?" என்றேன்.

"உரிமை இருக்கிறது உங்களுக்கு அத்தான்!" என்று சொல்லிக் கொண்டேயிருககும் போதே, மணற்பரப்பிலே சாய்ந்தோம், இருவரும். அடுத்த விநாடி அலையோசை கூட எங்கள் காதிலே கேட்கவில்லை.

(வளரும்)


# சிலந்திக் கூடு

ஏ. வி. பி. ஆசைத்தம்பியின்

அரிய கற்பனைக் களஞ்சியம்

சூழ்நிலையும் சந்தர்ப்பமும் மனித வாழ்வை ஓர் சிலந்திக் கூடாக மாறுவதைச் சித்தரிக்கும் சிறந்ததோர் கதை விருந்து! விறுவிறுப்பான தமிழ் நடை! படிக்கப் படிக்கப் பரவசமூட்டும் சொற் சித்திரம்.

விலை ரூ. 1—0—0

கலைமன்றம் — சென்னை-1.

# மேல்நாட்டுக் கவிதைகள்

ரா. தணலன்

எனக்கு நீண்ட நாட்களாக ஆசை! உலகம் எங்கணும் பரவிக் கிடக்கும் கலைச் செல்வத்தை எல்லாம் தொகுத்துத் தமிழில் தர வேண்டும் என்று.

அந்த ஆசை எத்தனையோ பேர்களுக்கு இருக்கிறது. எத்தனையோ பேர் செய்யவும் செய்கிறார்கள். ஆனால், பிறநாட்டு இலக்கியங்களைத் தமிழில் தரும்பொழுது, அவை தமிழின் சுவையோடும், தமிழரின் பண்பாடுடனும், தமிழ் மக்கள், எளிதில் புரிந்து கொள்ளத் தக்கவையாக இருப்பது நலம். படிக்கப் புரியாத மொழி பெயர்ப்பு நூல்கள் தமிழில் வருவதால் என்ன பயன்? ஆங்கிலம் கற்றவர்கள் ஆங்கிலத்திலேயே படித்துக் கொள்வார்கள். அம் மொழி தெரியாதவர்களோ, இந்த மொழி பெயர்ப்புகளைப் படித்தும் புரிந்து கொள்ள முடியாது.

வசன நூல்களே இப்படி என்றால், கவிதை நூல்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

பிறநாட்டுக் கவிதை நூல்களை மொழி பெயர்த்துத் தமிழில் வெளியிடச் செய்யப்பட்ட முயற்சி மிகவும் குறைவு. அம் முயற்சிகள் வெற்றி பெறவும் இல்லை.

பிற ஆசிரியர்கள் இத்துறையில் எடுத்துக் கொண்ட முயற்சிகளை இங்கு நான் விமர்சிக்க விரும்பவில்லை. பிற மொழிக் கவிதைகளை அதே அழகுடனும் உணர்ச்சி வேகத்துடனும் அதே கவிதை நடையில் கொடுக்க, என்னுடைய திறமை அனுமதிக்கும் அளவில் இங்கு முயற்சித்துப் பார்ப்பதே என் விருப்பம்.

## கலையும் கவிதையும்

அதற்கு முதலாவதாக, கவிதை பற்றியும் கவிஞர் பற்றியும் சில குறிப்புகள் கொடுக்க விரும்புகிறேன். கவிஞரைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் கவிதை பற்றித் தெரிந்து கொள்ள முடியாது. மனிதரைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் உணர்ச்சிகளைப் பற்றி மட்டும் தெரிந்து கொள்ள முயற்சிப்பது வீண்.

வாழ்க்கையும் கவிதையும் பிரிக்க முடியாதவை. முன்னது உருவம் என்றால் பின்னது நிழல். வாழ்க்கையை விடக் கவிதை முக்கியத்துவம் வாய்ந்தது என்று யாராவது சொன்னால் அது முழுப் பொய் என்று துணிந்து கூறலாம். ஆனால், நமது வாழ்க்கையில் நிகழ்ச்சிகளை விட நினைவுகளே அதிகம். அவையே இன்பகரமானவை என்பது

சிறிது யோசித்துப் பார்த்தால் புரியும்.

நாம் செய்யும் காரியங்களில் மட்டுமா வாழ்கிறோம்? இல்லை. அவற்றைப் பற்றிய நினைவிலும் தான் வாழ்கிறோம். அந்தக் காரியங்களைவிட அவை பற்றிய நினைவுகளே இனிப்பானவை.

நினைவின் கற்பனை ரூபமே கலை.

கவிதை, நாடகம், காவியம், ஓவியம் யாவுமே அதுதான்.

வாழ்க்கையை விட அதன் நிழலே அதிகமான இன்பம் தருகிறதென்றாலும், உருவம் இல்லாமல் நிழல் பிறக்க முடியாது. வாழ்க்கைதான் கலையின் அஸ்திவாரம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

## வாழ்க்கையும் கவிதையும்

வாழ்க்கை இன்பகரமானதாக இருக்கும் பொழுதுதான் கலையும் கவிதையும் மலிகின்றன. ஒரு காலத்தில் கலை சிறப்பாகச் செழுமை பெற்று விளங்கிற்றென்றால், அந்தக் காலம் செல்வதார வளம் பெற்றுச் சிறப்பாக இருந்ததென்பதைச் சொல்லாமலே புரிந்துகொள்ளலாம். சரித்திரம் இதற்கான எத்தனையோ சான்றுகளை எடுத்துக் காட்டுகிறது.

மக்கள் செல்வ வளம் நிறைந்து நன்றாக வாழ்ந்த காலத்திலேயே கலை, கவிதைகள் பற்றிக் கவனிக்கின்றனர். ஆனால் கவிதை உணர்ச்சியோடு பிறந்து விட்டவன் நாட்டின் செல்வ நிலையையும் சீரழிவு நிலையையும் பார்த்துக் கொண்டா இருக்கிறான். அவனை யாராவது கவனித்தாலும் சரி கவனிக்காவிட்டாலும் சரி. கானகத்தே வாழும் குயிலைப் போல்...எங்கோ ஒரு மூலையில் இருந்து தன் கடமையைச் செய்து மடிகிறான்.

## கவிதையும் அழகும்

கவிஞன் பாடுகிறான.

உலகத்தில் எவை எவை அழகானவையோ அவற்றைப் பற்றி எல்லாம் பாடுகிறான். கண்ணில் காண்பவற்றில் எல்லாம் அழகைக் கண்டு விம்மிதம் அடைந்து பாடிக் களிக்கிறான். அதே போல் கருத்துக் கினிமையானவற்றையும் பாடுகிறான்.

காதல், வீரம், சுதந்திரம் முதலிய கண்ணியமான உணர்ச்சிகளைப பற்றி எல்லாம் பாடுகிறான். கோழைத்தனம், அடிமைத் தனம், குரூரம், கொடுமை ஆகியவற்றைக் காணும் போது அவன் வெறுக்கிறான். வேதனை நிறைந்த ஆத்திரத்தோடு அவற்றைப் பற்றியும் அவன் பாடியபோதிலும் அவற்றிலிருந்து விடுபட்டு, தூய்மையான அழகுள்ளவைகளை நாடும்படியாகத்தான் பாடுகிறான்.

கவிஞன் உள்ளம் ஒரு கண்ணாடி. அதில் உலகமே தன் முகத்தைக் காட்டி மாசு மருக்களை அறிகிறது.

உண்மையை உள்ளபடி அறிவதால், அந்த உண்மைக்கு மட்டுமே தலை பணிவதால், வேறு எதற்குமே தலை சாய்க்க மறுப்பதால் தான் பெரும்பாலும் சிறந்த கவிஞர்களின் வாழ்க்கை வரலாறுகள் எல்லாம் சோகப் படலங்களாகவே விளங்குகின்றன. உலகத்தில் இன்றுவரை பிறந்துள்ள எந்தக் கவிஞனின் வாழ்க்கையும் இதற்கு எடுத்துக் காட்டாகவே இலங்குவதைக் காணலாம்.

## கவிஞனும் வாழ்க்கையும்

வாழ்க்கையிலே கவிஞன் தோல்

வினையைத்தான் பரிசாகப் பெற முடிகிறது. மற்ற மனிதர்களோடு அவனால் இணைந்துபோக முடிவதில்லை. வாழ்க்கையை வியாபாரச் சந்தையில் விலையாக்கிக் கொள்ள அவனால் முடிவதில்லை. அடிபிடி செய்து பணத்தைத் தேடி வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடிவதில்லை. வியாபாரச் சூதாட்டத்திலோ, உத்தியோக அடிமைத்தனத்திலோ அவனால் ஈடுபடவே முடிவதில்லை. கூலி உழைப்பிலும் அவன் வாழ்க்கையைக் கழிக்க முடியாது.

வாழ்க்கையும் வறுமையுமாக அவன் அணைந்து போனான். ஆனால் அவன் தன்னைத்தானே எரித்துக் கொண்டு உலகம் அனைத்திற்கும் வழி காட்டும் ஒரு தீபச் சுடராக மாறி விடுகிறான். அதுதான் அவனுடைய வாழ்க்கையில் வெற்றியாகும்.

## கவி மலர்கள்!...

சிறந்த கவிதைகள் சிலவற்றை அறிமுகப்படுத்தும் முயற்சியிலே ராபர்ட் பர்ன்ஸின் கவிதைகள் சிலவற்றை முதலாவதாகக் கொடுக்க விரும்புகிறேன். கவிதைகளைப் பொறுக்கி எடுப்பதில் நான் எந்த வரிசை முறையையும் பின்பற்றவில்லை. எனக்கு எந்தக் கவிதைகள் மிக விரைவில் பிடிக்கின்றனவோ அவற்றையே தமிழில் தருகிறேன். கவிஞர்களின் வாழ்க்கையைப் பற்றியும் அந்தக் கவிதைகள் பற்றியும் சிறு குறிப்புகள் கொடுக்க முயல்கிறேன்.

இந்தக் கவிதைகள், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தமிழ்க் கவிஞரின் கருத்துக்கள் விசாலமடைவதற்கு உதவும் வகையில் அமைய வேண்டும் என்பது என் விருப்பம். என் கடமையை என்னால் முடிந்த அளவு செய்கிறேன். வெற்றி தோல்வியைப் பற்றி நான் கவனிக்கவில்லை என்பதை முன்னதாகவே கூறிவிட விரும்புகிறேன்.

## ராபர்ட் பர்ன்ஸ்

ராபர்ட் பர்ன்ஸ் ஸ்காட்டிஷ் கவிஞர். ஆங்கில சாம்ராஜ்யத்தில் இணைந்தது ஸ்காட்லாந்து. கிரேட் பிரிட்டன் தீவில் இங்கிலாந்துக்கு வடக்கில் மலைகளும், நதிகளும் நிறைந்து காணப்படும் இயற்கை எழில் நிறைந்த நாடு ஸ்காட்லாந்து.

பர்ன்ஸ் 1759-ம் ஆண்டு பிறந்தவர். மிகவும் எளிய குடும்பத்திலே ஒரு தோட்டக்காரன் மகனாய்ப் பிறந்தார். வாழ்நாள் முழுவதும் ஒரு எளிய விவசாயியாகவே வாழ்ந்தார். மணம் செய்து கொண்டார். மனைவி மக்களைக் காப்பதற்காக எளிய அரசாங்க அலுவலை ஏற்றுக் கொண்டார். அவருடைய கவிதைகள் ஏராளமாகப் பிரசுரிக்கப்பட்டன. வாழ்நாளிலேயே கவிஞர் என்று கௌரவிக்கப்படும் **பாக்கியம்** அவருக்குக் கிடைத்தது. 1796-ம் ஆண்டு தமது முப்பத்தேழாம் வயதிலேயே இறந்து போனார்.

வாழ்ந்தார் செத்தார் என்பதிலேயா, ஒரு கவிஞனின் வாழ்க்கை வரலாறு அடங்கிக் கிடக்கிறது.

**மேலைய நாட்டின் கவிதைக் குவியலைக் கிளறி ஆராய்ந்து, தமிழக மக்களும் ஏற்று இன்புறும் வகையில் இக் கட்டுரைத் தொடரை ரா. தணலன் ஆரம்பித்திருக்கிறார். சுவை குன்றா இச் சொல்லோவியம் வாரந்தோறும் கலைமன்றத்தில் வெளி வரும்.**

இல்லவே இல்லை. ஒரு கவிஞனின் வாழ்க்கையின் ஒளியை அவனுடைய கவிதையிலே காணவேண்டும். அவனுடைய வாழ்க்கையின் லட்சியம் அந்தக் கவிதைகளிலே தான் அணையாத ஜோதியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறது. வாழ்ந்த வரலாற்றில் அல்ல.

ராபர்ட் பர்ன்ஸ் தாம் வாழ்ந்த நாட்டில் தமது சகோதர மனிதர்கள் எந்த வார்த்தைகளால் பேசினார்களோ உணர்ந்து கொண்டார்களோ அந்த வார்த்தைகளால் தான் தமது கவிதைகளை எழுதினார். நாட்டுப் பாடல்கள் என்ற வகையில் அவை சேரலாம்.

ஆனால் அந்தக் கவிதைகள்!

**எனக்கொரு மனைவி!**

கவிஞனின் இதய வேகத்தை எடுத்துக் காட்ட இந்த ஒரே கவிதை போதும். படித்துப் பாருங்கள்.

எனக்கொரு மனைவி
இருக்கிருள் அழகி
எனக் கவள் சொந்தம் எனக்கே
சொந்தம்!
பிறர்க் குடை யவளைத்
திரும்பினான் பாரேன்
பிறனென் மனைவியைப் பார்க்க
விடேனே!

* *

எனக்கொரு காசு இருக்கிற
துழைத்து
நான்பெற்ற செல்வம் எனக்கே
சொந்தம்
கடன்தர என்னிடம் காசுதான்
இல்லை
கடன்பட எனக்கு விருப்பமும்
இல்லை.
அன்னியர் எவர்க்கும்
அடிமைநான் அல்லன்
அடிமைகள் எனக்குத்
தேவையும் இல்லை.
என்னிடம் திண்ணிய
தோள்வலி உண்டு
எவர்க்கும் அஞ்சிடும்
கோழைநான் அல்லன்.

* *

மனமகிழ் வுடன்விடு
தலைபெற்று வாழ்வேன்
மற்றவர்க் காய்நான் கவலைப்
படேன்!
எனக்காய் அழுபவர் யாருமே
இல்லை!
இன்னெரு வருக்காய் நானும்
அழேனே!

* *

வாழ்க்கை உண்மைகள் பளிச் பளிச்சென்று வருகின்றன. வாழ்க்கை கோடைக் கால மலைச சிகரங்கள் போல் தெளிந்து கிடக்கிறது. அதிலே சிக்கலகள இல்லை. பிணக்கு இல்லை. யார்க்கும் எவ்விதத் தகராறும் இல்லை. கவி உள்ளம் அதை எவ்வளவு சாதாரணமாக்கி விட்டது. இந்த முறையில் வாழத் தொடங்கிஞல் சமுதாயம் எவ்வளவு எழில் மிக்கதாகி விடும்,

ராபர்ட் பர்ன்ஸின் காதல் கவிதைகள் மிக மிக அழகானவை. மிக மிக எளிமையானவை. எளிய வார்த்தைகளிலே கருத்துகள் எவ்வளவு வேகமாய் வருகின்றன என்பது படிக்கப் படிக்க வியப்பாக இருக்கும்.

அவற்றை ஒரு கதைபோல் தொகுத்து அடுத்த இதழில் தருகிறேன்.

**புகைப் படக் கலைப்பகுதிக்கு படங்களை அனுப்புவோர் புன்சைஸ் அளவில் அனுப்பினுல்தான் பிரசுரிக்கப் படும்**

—ஆசிரியர்.

# திரை உலகம்

## மூடக் குழந்தைதான் 'நம் குழந்தை'

இம் மாதம் தென்னுடு முழுவதும 'நம் குழந்தையை' விண்டஸர் புரொடெக்ஷன்ஸார், மக்கள் பார்வைக்கு அனுப்பி வைத்திருக்கிருர்கள். மக்களும் நம் குழந்தையைக் கண்ட பிறகு, 'இது நம் குழந்தையுமல்ல, பிறர் குழந்தையுமல்ல, மனித வர்க்கத்துக்கே பிறவாத மட்டரகக் குழந்தை' என திட்டவட்டமாகத் தீர்ப்புக் கூறி விட்டனர்.

**கதை**யைப்பற்றி எதை எழுதுவது? கதம்பக் குவியலை வைதது விளக்கம் செய்ய வேண்டுமானல், மூளேதான் குழம்புமே யொழிய, விளக்கம் தென்படாது. அவ்வளவு மட்டரகமாக உருவாக்கப் பட்டிருக்கிறது, "நம் (அவர்கள்) குழந்தை!"

'நம் குழந்தை' என்ற தலைப்புக்கும், கதைக்கும் துளியும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை. எந்தப் பகுதியில்தான் சம்பந்தா, சம்பந்தத்தை எண்ணியிருக்கிருர்கள், இதற்கு எண்ணிப்பார்க்க?

**வசனம்**...! ஐயகோ! அட அகப்படாத ஆண்டவனே! நீ பார்த்து ரசிக்கத்தான் இப்படி நிலைதவறி நிதானங் கெட்டு எழுதியிருக்கிருர்களோ என்னமோ! ஒரே, 'டமால்' 'டுமீல்' 'டப்' என்றுதாஞ எழுத வேண்டும், அர்த்த மில்லாமல்?

இது தஞ்சை ராமய்யாதாஸ் குறையாக இருக்கமுடியாது; மிஸ்டர் எழுத்தாளர் நாகாராஜன் கைவரிசையைக் காட்டியிருக்கிருர் என்று எண்ணுகிருேம். இவர்களெல்லாம் எழுதப் புகுந்ததால் தான், தமிழ்ப் பட உலகம் தளர்ந்துவிட்டது போலும்!

**பாடல்கள்** ஓரளவு நன்ருக எழுதியிருக்கிருர்கள். **சங்கீதம்** கேட்கச் சகிக்கவில்லை.

**நடிப்பு:** நாகையாவிற்கு இப் படத்தில் நல்லதொரு பாடம். தோல்வி என்பதை நன்குணர்ந்திருப்பார் எல்லாப் பாகங்களிலும். மனேகர் பேசாமல் திரையுலகிற்கு ராஜிஞமா கொடுத்துவிடலாம். நாகராஜன் ராஜிஞமா கொடுக்குமள

**விமர்சனம்**

ஏவி. எம். செல்லப்பிள்ளையில், சாவித்திரி

வில் இல்லை. காரணம், அவர் ஒரு வசனகர்த்தா. எனவே, பட முதலாளிகளெல்லோரும் ஒன்றுகூடி ஏகமனதாக, 'பென்ஷன்' கொடுக்கிறோம் என்று கூறி ஒதுக்கிவிடலாம் பட உலகைவிட்டு. எஸ். வரலட்சுமிக்கு நடிப்பு 'எக்ஸாஸ்ட்' டாய் விட்டதுபோலும்! புது முகமும், பழைய முகமாக வேண்டியதே அவசியமில்லை. இந்த ஒரு புது முகத்துடனேயே நிறுத்திவிடலாம்.

என்னெஸ்கே., டி. ஏ. மதுரம் இல்லாவிட்டால், ஒரே வாரத்தில் டப்பாவைத் தூக்கி இருக்க வேண்டியதுதான்.

**டைரக்ஷன்:**

கதை அவர்தான் அமைத்தாரேயொழிய, கதையை 'லிங்க்'காக டைரக்ஷன் செய்ய மறந்துவிட்டார். இந்தக் கதைக்கு "டைரக்டட், பை"-என்று போடவேண்டிய அவசியமில்லை என்று படம் பார்த்துவிட்டு வெளியே வரும்போது ஒருவர் சொன்னது என் காதில் விழுந்தது.

மொத்தத்தில, 'சுப்பு அண்டு கோ' வெளியிடும் எந்தப் படத்திற்கும் நல்லகாலம் பிறக்காமல்தானிருக்கிறது. ஒருவேளை அவர்கள் இப்படி 'பரிதாபமான படங்களைத் தாம் வெளியிட்டு தர்மம் சம்பாதித்துக் கொள்ளலாமே' என்ற பரந்த மனப்பான்மையில் வெளியிட்டார்களோ என்னமோ, பணம் படைத்தோர், ஏழைகளுக்காக அன்ன சத்திரம் கட்டிவிடுவதுபோல!




"திரு. காமராஜ் சென்னை ராஜ்ய முதன் மந்திரி பதவியை ஏற்றால் அவருடைய சர்க்கார் எவ்வளவு நாள்தான் நிற்கப் போகிறது பார்ப்போமே என்று பலர் ஆரம்ப காலத்தில் சந்தேகப்பட்டனர். ஆனால், தனது அரசாங்கம் நீடித்து நிலை நிற்கக் கூடியது என்பதைக் காட்டி விட்டார், திறமை வாய்ந்த நமது முதன் மந்திரி.

நாடார் சமூகத்திலிருந்து இத்தகைய பெருமை மிக்க பதவிக்கு வந்திருப்பதே திரு. காமராஜரின் உயரிய திறமைக்கு உதாரணமாகும். பொதுமக்களின் மதிப்புக்குப் பாத்திரமாகியே, வோட்டுகள் பெற்று அவர் பதவியேற்றார். பாமரர்களின் சிறந்த பிரதிநிதி அவர். சிறிதே பேசுவார். ஆனால் செயலில் தேர்ந்தவர். அவருடைய தியாகம் மகத்தானது. கொஞ்சமே படித்தவரென்றாலும், படித்தவரும் போற்றச் செயலாற்றும் அவரிடத்தில், படித்தவர்களிடத்தும் காண முடியாத பண்பும், பகட்டற்ற எளிமையும் பரிபூரணமாக நிறைந்திருக்கின்றன. அவர் முதன் மந்திரியாக வந்த பின்னரே சென்னை ராஜ்ய அரசியல் நிலைமை ஸ்திரப்பட்டது. தமிழும், தமிழரும் சிறக்க வேண்டியன யாவும் புரியும் உத்தமத் தமிழர் அவர்."

—இபபடிப பேசியவர் யார்? உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர்.

ஹைட்ரஜன் குண்டுக்கு எதிராக ஒழுக்க ரீதியில் உயர்ந்த ரீதியில் திரு. ஸி. ராஜகோபாலச்சாரியார் ஆட்சேபம் தெரிவித்திருப்பதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். ஆனால் ஹைட்ரஜன் குண்டு பற்றிய ஆட்சேபத்தை அமெரிக்க உதவியுடன் சம்பந்தப் படுத்தி இருபபதானல் ஒரு ஒழுக்கப் பிரச்னையை அரசியல் பிரச்னையுடன் ராஜாஜி சம்பந்தப்படுதகி விட்டாரென நினைக்கிறேன். ஹைட்ரஜன் குண்டு விஷயத்தையும் அமெரிக்க உதவியையும் தனித்து நாம் பார்க்க வேண்டுமென விரும்புகிறேன்.

ஒரு நிருபர்:—ராஜாஜி கவர்ன் மெண்டில் இருந்த பொழுது உங்களுக்கு இந்த யோசனையைக் கூறினார்?

திரு. நேரு:—அவர் பதவியில் இருந்தபொழுது ஹைட்ரஜன் குண்டு இல்லை.

—பிரதம மந்திரி நேரு பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் வெளியிட்ட கருத்து.

# கேளுங்கள் கொடுக்கப்படும்

கே: நீர் எதில் கஞ்சனாக இருக்க விரும்புகிறீர்?

பழந. வே. புதியப்பன், ஏலூர்.

ப: வாரந்தவறாமல் நீர் வேறு வேறு பெயரில் அனுப்பும் கேள்விகளுக்குப் பதில் சொல்வதில்!

*  *

கே: பாரதிதாசனுக்கும், தி. மு. க. வுக்கும் 'லடாய்' என்று பேரிகை கூறுகிறதே? அது உண்மையா?

வள்ளுவதாசன், வேலூர்.

ப: அண்ணனும், தம்பியும் அப்படிச் சண்டையே போட்டாலும் வேடிக்கை பார்க்கும் பேரிகைக்கு என்ன?

*  *

கே: ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமாக வேண்டியது என்ன?

ஆர். இராமசாமி, மைசூர்.

ப: தான் ஒரு மனிதனே என்ற எண்ணம்.

*  *

கே: கடவுட் கொள்கைக்காகத் திராவிடரியக்கத்தையும், புரட்சிக் கொள்கைக்காகப் பொதுவுடமை இயக்கத்தையும் பின்பற்றலாமா?

தி. சி. மதுரவாணன், திருச்சி.

ப: இலட்சியமும், கொள்கையும் ஒரே இயக்கத்தைப் பின் பற்றுவதாக இருந்தால் மட்டுமே சித்தி பெற முடியும்.

*  *

கே: நேரு ரஷ்யா போயிருப்பதன் நோக்கமென்ன? இதனால் இந்தியா பெறும் நன்மைகள் என்ன?

ஜி. என். பாலகிருஷ்ண, டும்கூர்.

ப: தன் இளமைக கனவு ரஷ்யாவில் நனவானதைப் பார்க்க. சீனப் பயணம் சோஷலிசம் பேச வைத்தது. ரஷ்யப் பயணம் புரட்சி சோஷலிசத்தைப் பேச வைக்கலாம்.

*  *

கே: விடுதலை பற்றி முன்பொரு தோழர் கேட்ட கேள்விக்குத் தாங்கள் தந்த பதில் எங்களுக்குப் புரியவில்லையே?

ஆர். பெரியசாமி, கருப்பன்வலசு.

ப: அரசியல் தத்துவ ஞானிகள் பலருக்கே இன்னும் அது விளங்காதபோது, நமக்கு எப்படி விளங்க முடியும்?

*  *

கே: தமிழகத்திலே பட்டினியால் வாடி, பரிதாபமாகத் திரியும் ஏழைச் சிறுவர்களுக்குப் போலிஸ் தடியடியுடன் ஒரு மாதக் கடுங்காவல் தண்டனையுமாமே? இது நிஜமா?

அ. இராமசாமி, குருணக்கல், இலங்கை.

ப: இருக்கலாம். நாமறியோம்!

*  *

கே: பெண்களுக்கு விடுதலை எப்போது கிடைக்கும்?

ஆ. லைலா பீவி, மேலப்பாளையம்.

ப: தேய் நிலவாக மனதை வைத்திருக்கும் "சுல்தான்கள்" மனம் பண்படும்போது.

# நமது செய்திகள்

## திருமணம்

நமது கலைமன்றம் ஏஜண்டு திரு. ப. குப்புசாமிக்கும், திருமதி காளியம்மைக்கும் கடந்த 26-5-55 அன்று நாமக்கலில் மணவினை சிறப்புற நடந்தேறிற்று.

மணமக்கள் நீடு வாழ்க!

## சொற்பொழிவாளர்களுக்கு

புதுவையைப் பொறுத்தவரை சொற்பொழிவாளர்கள், புதுவை, ச. சிவப்பிரகாசம் அவர்களின் முன்னறிவின்றிச் சொற்பொழிவு அழைப்புகளை ஏற்கவேண்டாமென பொதுச் செயலாளர், இரா. நெடுஞ்செழியன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## மறுமலர்ச்சி மன்றம் ஆண்டுவிழா

27—5—55, திருவையாறை அடுத்த புனவாசல் கிராமத்தில் உள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் ஆண்டுவிழா, ச. சண்முகம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மறுமலர்சசி மன்ற நோக்கம் பற்றி, திரு. அரங்கராசன், இராமமூர்த்தி, முத்துப்பேட்டை தர்மலிங்கம் ஆகியோர் பேசியபின், சென்னைத் தோழியர், சத்தியவாணிமுத்து மறுமலர்சசிபற்றி நீண்ட நேரம் சொற்பழிவாற்றினர். இரவு 10 மணி அளவில் செயலாளர் கீ. வீரையன் நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிந்தது.

## ஆண்டுவிழா

29-5-55-ம் தேதியன்று கோலார் தங்கவயல் மாரிக்குப்பம் மாவட்டத்தைச் சேர்ந்த வெஸ்ட் பிளாகில் வளளுவர் முன்னேற்றப் பண்ணையின் ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. அதுசமயம், தோழர், சி. பெ. அ. இன்பதாசன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடந்தது. தோழர்கள், ரா. தங்கராசன், சி. வி. ஐயாகுட்டி, சி. கு. மகிமைதாசன், நா. சாரங்கபாணி, சி. முனிசாமி இவர்கள், "வள்ளுவரும், குறளும்" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

## எறும்பூர் பூங்கோதைப் படிப்பகத்தின் முதலாண்டு விழா

சிதம்பரம தாலுககா எறும்பூரில் முதலாண்டுவிழா 11-6-55ம் தேதி யன்று டாக்டர். பட்டாபிராமன் தலைமையில் நடைபெற்றது. நடராசன் அவர்களால் விழா ஆரம்பிக்கப்பட்டது. செயலாளர், சிவ. பொன்னம்பலம் ஆண்டு அறிக்கையை வாசித்தார்.

எஸ். ராஜாராமன் கால்நடைப் பராமரிப்புப் பற்றியும், வி. கலியபெருமாள் கிராம ஒற்றுமை என்பது பற்றியும், சிவ. பொன்னம்பலம் விஞ்ஞானமும், விவசாயமும் என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். கிராம மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வந்திருந்து கூட்டத்தைச் சிறப்பித்தார்கள். இறுதியில் எல்லோர்க்கும் இனிப்பு வழங்கப்பெற்று இனிது முடிந்தது.

ஜூலை மாதக்

# கலை அரங்கம்

- 'என்வாழ்வில் புதுப்பாடம்'—நகைச்சுவைத் தென்றல் ஏ. கருணாநிதி எழுதுகிறார்.
- 'கார் சொல்லும் கதை—எம். வி. ராஜம்மா.
- 'உண்மைக் கலை'—டர்பன் ச. மு. பிள்ளை.
- மூக்கைத்துளைத்துக் கொண்டார் கருணாநிதி!
- 'மூன்றாவது கண்'—'பூட்பாலிஷ்' எடுத்த காமிரா நிபுணர் 'தாராதத்' தன் அனுபவத்தை எழுதுகிறார்.
- 'இருளும் ஒளியும்'—கே. ஏ. அப்பாஸ் அவர்களின் அருமையான சிறுகதைப் படையல்.
- 'புதுமுகங்களும் புழுங்கும் எக்ஸ்ட்ராக்களும்'
- 'நான் டைரக்டரானால்'?
- 'இதோ ஒரு ஸ்டூடியோ'—பிலிம் ஸெண்டர்.
- இன்னும் பல புதிய அம்சங்கள்களுடன் பிரபலபின்னணிப் பாடகர் ஏ. எம். ராஜா உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறார்!

ஏராளமான படங்களுடன் கூடிய இந்தக் கலை ஏடு,

## விலை 8 அணா

உங்களூர் ஏஜெண்டிடம் இப்போதே பதிவு செய்து கொள்ளுங்கள்.

விபரங்களுக்கு:

## கலை அரங்கம்

சென்னை—1.

முதுமையே! உன் நிலை எய்துவரை
நாங்களும் உயிர் வாழ, வாழ்த்துவாயம்மா!

எஸ். எம். இராமலிங்கன், நாக்பூர்.

பிரசுரம்

KALAIMANRAM • Regd No. M. 6408

• புதிய வெளியீடு

முகலாய சாம்ராஜ்யத்து ராணிமார்களின் அந்தரங்க வாழ்க்கையை விளக்கிடும் அற்புத ஏடு!!

வாள் வீச்சும் வேல் வீச்சும் சாதிக்காத பல காரியங்களை கன்னியரின் [illegible] வீச்சு சாதித்திருக்கின்றன.

நாடாளும் நாயகர்கள் நாயினும் கடையராகி நங்கையரின் காலடியை முத்தமிட்டிருக்கின்றனர்

இன்னும் இவை போன்ற நிகழ்ச்சிகளை விளக்கிடும் உன்னத உயிரோவியம் தான்

# வடநாட்டு ராணிகள்

தேனூறும் தீந்தமிழில் தீட்டியிருக்கிறார்
'சேரன்'

உயிரோட்டமுள்ள கதைப் போக்கு!
அழகிய மூவர்ண முகப்பு!!

விலை ஒரு ரூபாய்தான்

ஸ்ரீமகள் கம்பெனி

122, வரதாமுத்தியப்பன் தெரு,
சென்னை—1.